# புதுமலர்

புதுமலர் பதிப்பகம்
ஈரோடு

| | | |
|---|---|---|
| புதுமலர் (13) | : | **ஜனவரி - பிப்ரவரி - மார்ச்சு 2026**<br>திருவள்ளுவர் ஆண்டு 2057 |
| ஆசிரியர்/வெளியீட்டாளர் | : | **கண.குறிஞ்சி** |
| இதழ் முகவரி | : | 6, முதல் வீதி, சக்தி நகர் மேற்கு,<br>திண்டல் (அஞ்சல்), ஈரோடு 638 012. |
| இதழ் தொடர்பு எண் | : | **94433 07681** |
| மின்னஞ்சல் | : | gana.kurinji@gmail.com |
| புலனம் | : | புதுமலர் இதழ் நண்பர்கள் |
| அட்டை வடிவமைப்பு | : | **கண.குறிஞ்சி** |
| தனி இதழ் | : | ரூ. 130 |

| | | |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | : | ரூ. 500 |
| இரண்டாண்டுக் கட்டணம் | : | ரூ. 1000 |
| மூன்றாண்டுக் கட்டணம் | : | ரூ. 1,500 |


இதழுக்கான கட்டணம்
அனுப்பியவர்கள் உரிய தொகை
அனுப்பிய பிறகு, மறவாமல்
இதழின் தொடர்பு எண் மூலம்
அதன் விவரத்தைத் தெரிவிக்குமாறு
கனிவுடன் வேண்டுகிறோம்

**புலனம் (வாட்ஸ்அப்) மூலம்
தகவல் தெரிவிப்பதை
உறுதியாகத் தவிர்க்கவும்**

ஆண்டுக்கட்டணம்
குறித்துத்தகவல் தெரிவிக்க
வேண்டிய தொடர்பு எண்:
**94433 07681**


**நெறியாளர்கள்**

- **வீ. அரசு**
- **பொதியவெற்பன்**
- **ஜமாலன்**
- **ரவி குமாரசாமி**


**வங்கிக்கணக்கு விவரம்**

| |
|---|
| **G. SHANMUGA SUNDARAM** |
| **INDIAN BANK, THINDAL BRANCH, ERODE** |
| **S/B A/c No. 7390 144 253 IFSC NO. IDIB 000 T202** |
| **G Pay No. 94433 07681 G. Shanmuga Sundaram** |

★ புதுமலர் இதழில் வெளியாகும் படைப்புகளின் கருத்துக்கள் படைப்பாளிகளின் சொந்தக் கருத்துக்களாகும்.

# உள்ளடக்கம்

★ இதழின் குரல் 4

★ குடும்பத்திலிருந்து தொடங்கினார்
- **ஓவியா** 9

★ மார்க்சீய / சோசலிசப் பெண்ணியம்:
உரையாடல் புள்ளிகள்
- **அ. மங்கை** 27

★ ஊடகமும் பெண்களும்
- **கவின் மலர்** 35

★ மகளிரும் அரசமைப்புச் சட்டமும்
- **சுதா ராமலிங்கம்** 43

★ பெண்ணிய நோக்கில்
இருத்தலும் இருத்தல் நிமித்தமும்...
- **புதியமாதவி** 49

★ சீர்மரபினரும் அரசமைப்புச்சட்ட உரிமைகளும்
- **அஜீதா** 54

★ இந்தியாவில் பெண்களுக்கு எதிரான
பாலினப் பாகுபாடு முழுவீச்சில்!
- **சமந்தா** 62

★ விண்ணோடி
- **ரேவதி சுயம்புலிங்கம்** 71

★ **மாலதி மைத்ரி** கவிதைகள் 83

★ **இளம்பிறை** கவிதைகள் 84

★ பெண் கல்வி கடந்து வந்த பாதை
- **சு. உமா மகேஸ்வரி** 87

★ தனித்து வாழ்பவளின் துயரமும் மீளுயிர்ப்பும்
- **இரா. செங்கொடி** 97

★ பெண்கள் நிகழ்த்திய மகளிர் தினமும்
நவம்பர் புரட்சியும்.
- **பா.ஜீவசுந்தரி** 110

★ பெரியாரின் பெண்கள் நாங்கள்
- **சிவகாமி** **121**

★ உங்கள் மனஓசை 128

★ நிகழ்வுகள் 130



# இதழின் குரல்

**"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா"** எனவும், **"பெண்ணிற் பெருந்தக்க யாவுள"** எனவும் மகளிரைப் போற்றிக் கொண்டாடும் மனநிலை பரவலாக உள்ளது. எனினும் தனிவாழ்விலும், பொது வாழ்விலும் அவர்கள் சுமக்கும் சிலுவைகள் சொல்லுந்தரமன்று. இருப்பினும், இவற்றை எல்லாம் கடந்து, வையத்துள் வாழ்வாங்கு வாழும் பெண்ணரசிகள் வரலாற்றில் நிலைத்து வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். காலம், தேசம், இனம், மொழி கடந்த இவர்கள் என்றென்றும், நம் வணக்கத்திற்கு உரியவர்கள். தனித்தும், தன் இணையரோடும் இணைந்து பாடாற்றிய இவர்களில் **கார்ல் மார்க்ஸ் - ஜென்னி / பெரியார் - நாகம்மை / இலெனின் - குரூப்ஸ்கயா** போன்றவர்களை எவர்தான் மறக்க முடியும்?

"கூர்மையான அறிவு, உயர் பண்பு, சிறந்த அரசியல் ஞானம், சுயதியாகம் எனப் புரட்சிகர இயக்கத்தில் எந்தப் பெண் இப்படிச் செயல்பட்டிருக்க முடியும்? இருப்பினும் அவர் கவனஈர்ப்புடன் முன்நிறுத்தப்படவில்லை, அச்சுப் புலத்தில் பதிவிடப்படவில்லை. அவரோடு நெருங்கி இருந்தவர்களுக்கு மட்டுமே இவரைத் தெரியும். தோழர்களின் போராட்டங்களுக்கு அர்ப்பணிப்பு மிக்க சேவை, பகட்டில்லாத துணிவு, சமரசம் செய்து கொள்ளாத அறிவுக்கூர்மை போன்ற அவரது அறம் சார்ந்த வழிகாட்டுதலை இன்று நாம் இழந்து நிற்கிறோம். மற்றவர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதன் மூலம் பெருமகிழ்ச்சி அடையக் கூடிய ஒரு பெண் இருக்கக் கூடுமானால், அந்தப் பெண் ஜென்னிதான்" என ஜென்னியின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் **பிரடரிக் ஏங்கெல்ஸ்** புகழ் மாலை சூட்டினார்.

ஆம், அவர்தான் **ஜென்னி வான் வெஸ்ட்பலென்!** (12/02/1814 - 02/12/1881) பேராசான் மார்க்சின் இணையர். செல்வமும், செல்வாக்கும் மிக்க பிரபு வம்சப் பேரழகி ஜென்னி., டிரியர் நகரில் ஜென்னியின் இல்லத்திற்கு அருகிலேயே இருந்த **கார்ல் மார்க்ஸ்,** நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த யூத வம்ச இளைஞர். சிறு வயது முதலே மார்க்ஸ் - ஜென்னி நன்கு பழகி

வந்தனர். நாளடைவில் அது காதலாக மலர்ந்தது. பணக்காரக் குடும்பத்தில் பிறந்த ஜென்னியை மணக்க உயர் அதிகாரிகளும், பிரபு வம்ச இளைஞர்களும் தயாராக இருந்த நிலையில், தன்னை விட நான்கு வயது குறைவான மார்க்சைத் தனது துணைவராக அவர் தெரிவு செய்தார். தன் மக்களுக்காகக் கடவுளையும் எதிர்த்துப் போராடிய புரட்சிகர வீரனான **பிரமீத்தியஸ் போன்றவர் மார்க்ஸ்** எனக் கருதி அவர்பால் ஜென்னி காதல் கொண்டார். ஆனால் குடும்பத்தினரின் இசைவு கிடைக்காது என்ற நிலையில், ஒரு கௌரவமான நிலையை மார்க்ஸ் அடையும் வரை காத்திருக்க ஜென்னி முடிவு செய்தார். எனவே மார்க்ஸ், தனது முனைவர் பட்டத்தை முடிக்கும் வரை பொறுமையாக இருந்தார்.

இந்நிலையில் ஆறு ஆண்டுகள் கழித்து, இருவரும் மணவாழ்வில் இணைந்தனர். அப்பொழுது ஜென்னியின் வயது 29. ஜென்னி, ஜெர்மன் மொழியில் வல்லுநராகத் திகழ்ந்தார் அரசியலில் மிகுந்த நாட்டம் உடையவராகவும் இருந்தார். பிரெஞ்சு சோசலிசம், ஜெர்மன் புனைவியல் போன்றவற்றில் ஈர்ப்பு மிக்கவராக அவர் இருந்தார். மேலும் பெண் சமத்துவம் குறித்த தொடக்க காலப் பெண்ணிய நோக்கு அவரிடம் மேலோங்கி இருந்தது. எனவே திருமணத்திற்குப் பின், மார்க்சின் கொள்கைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் இணைந்து அவர் செயலாற்றினார். மார்க்ஸ், நிலையான வேலை எதிலும் பணியாற்றவில்லை. தீவிர வாசிப்பு, எழுத்து, அரசியல் செயல்பாடு என்பதாக அவரது வாழ்க்கை அமைந்திருந்தது. அதன் விளைவாகப் போதிய வருமானம் இன்றிச் சிறிது சிறிதாக வறுமை அவர்களைத் தின்னத் தொடங்கியது. தவிரவும், தனது தீவிரமான கோட்பாட்டினால், **ஜெர்மனி, பெல்ஜியம், பிரான்சு** என ஒவ்வொரு நாட்டிலிருந்தும் மார்க்ஸ் விரட்டியடிக்கப்பட்டார். அப்பொழுதெல்லாம் அவருக்கு உற்ற துணையாக நின்றவர் ஜென்னி. அலைக்கழிக்கும் இந்த அவல வாழ்வு குறித்து அவர் மார்க்சின் மீது குறைபட்டுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மார்க்ஸ் - ஜென்னி இணையருக்கு நான்கு மகள்கள், மூன்று மகன்கள் என மொத்தம் ஏழு குழந்தைகள். இதில் வறுமையினாலும், நோயினாலும், போதிய உணவின்மையாலும் நான்கு குழந்தைகள் ஒன்றன் பின் ஒன்றாக இறந்து போய்விட்டன. “எனது இரண்டாவது குழந்தை பிறக்கும் பொழுது, அதற்கு

ஒரு தொட்டிலும் இல்லை. அதே குழந்தை பிறகு இறக்கும் பொழுது, அதற்கு ஒரு சவப்பெட்டியும் இல்லை, இதுதான் எங்கள் நிலை'' என ஜென்னி குறிப்பிடுகிறார். மூன்றாவது குழந்தை எட்கர் எட்டு வயது இருக்கும் பொழுது மார்க்சின் கைகளிலேயே. மரணத்தைத் தழுவினான். அது ஓர் அஞ்சி நடுங்கும் அனுபவமாக இருந்தது.

"நான்காவதாகப் பிறந்த குழந்தை இந்த உலகத்திற்கு வந்த நாள்முதல் ஒரு நாள் கூட இரண்டு / மூன்று மணி நேரத்திற்கு மேல் நிம்மதியாக உறங்கியதில்லை அண்மையில் அவனுக்குக் கடுமையான வலிப்பு வரத் தொடங்கி விட்டது. வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே அவன் போராடிக் கொண்டிருக்கிறான். அவனுக்கு இருந்த வேதனையில் அவன் பால் அருந்த பலமாக எனது மார்பகத்தை உறிஞ்சியதால் எனது மார்பின் தோல் வெடித்து, நடுங்கும் அவனது சிறிய வாய்க்குள் இரத்தம் கொட்டியது " என உதவி கேட்டுக் குடும்ப நண்பருக்கு எழுதிய கடிதத்தில் ஜென்னி குறிப்பிடுகிறார். மருந்து கடைக்காரர், ரொட்டிக் கடைக்காரர், பால்காரர், மளிகைக் கடைக்காரர், காய்கறிக் கடைக்காரர், கசாப்புக் கடைக்காரர் என எல்லோரும் பாக்கிக் கணக்குகளை எடுத்துக்கொண்டு இவர்களை முற்றுகை யிடுவது அடிக்கடி நடக்கும் செயலாகி விட்டது. . எனவே அவ்வப்பொழுது வீட்டில் இருக்கும் பொருள்களை விற்று இவர்களின் கணக்குகளைத் தீர்த்ததாக ஜென்னி குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து பரம்பரைச் சொத்து மூலம் சிறிதளவு தொகை மார்க்ஸ் பெற்றிருந்தார். அந்த சமயத்தில் பெல்ஜியத்தில் தொழிலாளர்களின் ஆயுதப்போராட்டத்திற்கு மார்க்ஸ் பெருமளவு உதவி செய்தார். இது அரசுக்குத் தெரிய வந்து, மார்க்சை விசாரணைக்காக இழுத்துச் சென்றுவிட்டனர். மார்ச்சைத் தேடி இருளில் வீடு வீடாக அலைந்தார் ஜென்னி. திடீரென்று ஒரு காவல் அதிகாரி ஜென்னியைக் கைது செய்து, இருண்ட சிறைக்குள் தள்ளி விட்டார். அது வீடற்ற பிச்சைக்காரர்கள், நாடோடிகள், தீயஒழுக்கப் பெண்கள் முதலியோர் காவலில் வைக்கப்படும் இடம். இருட்டு அறையில் தள்ளப்பட்ட ஜென்னி அழுது கொண்டே உள்ளே சென்று அங்கிருந்த முரட்டுப் பலகையில் படுத்திருந்தார். அடுத்த நாள் பல மணி நேர விசாரணைக்குப் பிறகு இராணுவப் போலீசார் இவரை வெளியே அனுப்பினர். இப்படித்தான் அவர்கள் வாழ்வு நடந்தது.

இவ்வளவு இன்னல்களுக்கு இடையிலும், மார்க்ஸ் குறித்தே ஜென்னி அதிகம் கவலைப்பட்டார். "என்னைப் பொறுத்தவரை நான் மகிழ்ச்சியுள்ள, சலுகைகள்பெற்ற அதிர்ஷ்டக்காரி என்றே கருதுகிறேன். காரணம், எனது வாழ்க்கையின் ஆதரவான என் அருமைக் கணவர் என்றும் என் அருகில் இருக்கிறார். அவருக்குத் தேவையான உதவியின் அளவு சிறிதாக இருந்த போதிலும், பொருளாதார ரீதியில் சில்லறை விஷயங்களுக்காக அவர் எவ்வளவு தூரம் வருந்த வேண்டி இருக்கிறது? எத்தனையோ பேருக்கு விருப்பத்துடன் உதவி புரிந்த அவர், இன்று உதவியற்ற நிலையில் இருக்கிறார் என்பதுதான் எனது உள்ளத்தைச் சித்திரவதை செய்கிறது" என ஜென்னி குறிப்பிட்டார். எனவே தன்னாலான அனைத்து உதவிகளையும் அவர் மார்க்சுக்கு மனமுவந்து அளித்து வந்தார்.

மார்க்சின் கையெழுத்து மிகவும் மோசமாக இருக்கும். அதை எளிதில் புரிந்து கொள்ள முடியாது. எனவே அவரது கையெழுத்தைப் புரிந்துகொண்டு, அதைச் செழுமைப் படுத்தி, மறு உருவாக்கம் செய்து பதிப்பகங்களுக்கும், ஊடகங்களுக்கும் அனுப்பி வைக்கும் பணியை ஜென்னிதான் செய்து வந்தார். கூடவே அவரது அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபாட்டுடன் பங்கேற்றார். மார்க்சும், ஏங்கெல்சும் இணைந்து 1847-ல் உருவாக்கிய **கம்யூனிஸ்டு லீக்** அமைப்பில் முதல் உறுப்பினராக இருந்தவர் ஜென்னி. தவிரவும் ஜெர்மானிய உழைப்பாளர் சங்கம் (German Workers Union) அமைப்பிலும் பங்கேற்றுச் செயல்பட்டார்.

மார்க்சின் ஒவ்வொரு புத்தக உருவாக்கத்திலும் ஜென்னியின் பங்களிப்பு காத்திரமானது. மார்க்சின் நூல்களுக்கு மிகுந்த வரவேற்புக் கிடைக்கும் என ஒவ்வொரு முறையும் ஜென்னி எதிர்பார்த்துக் காத்துக் கிடப்பார். ஆனால், அந்த நூல்கள் பின்னர் கண்டு கொள்ளப்படாமல் போவதறிந்து ஜென்னி நொந்து போவார். இருப்பினும், மார்க்சின் **பிரான்சில் உள்நாட்டுப் போர் (The Civil War in France)** எனும் நூல் மட்டும் 1000 படிகள் உடனடியாக விற்பனையாகிச் சாதனை படைத்தது. இரண்டு மாதங்களில் மூன்று பதிப்புகள் கண்டதோடு, இந்தப் புத்தகம் ஐரோப்பா முழுவதும் நல்ல வரவேற்பைப் பெற்றது. அது குறித்து ஜென்னி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இருப்பினும், மார்க்சின் மகத்தான படைப்பாகிய **"மூலதனம்"** முதல் தொகுதி 1867 - ஆம் ஆண்டு வெளிவரும் நாளுக்காக ஜென்னி அளவற்ற எதிர்பார்ப்போடு காத்திருந்தார். ஆனால்,

பிற்காலத்தில் உலகையே தலைகீழாகப் புரட்டிப் போட்ட அந்த வரலாற்று ஆவணம் வெளியிடப்பட்ட சமயத்தில், அது கண்டு கொள்ளப்படவே இல்லை. இதைக் கண்டு ஜென்னி மனம் இடிந்து போனார்.

கணவனுக்கும் உழைப்பாளித் தோழர்களுக்கும் ஓயாது உழைத்து ஓடாய்த் தேய்ந்த ஜென்னி கல்லீரல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். படுக்கை அருகில், மூலதனம் நூல் குறித்து ஆங்கிலத்தில் வெளிவந்த ஆக்க வழியிலான விமர்சனத்தை மார்க்ஸ், ஜென்னிக்குப் படித்துக் காட்டினார். இறுதியில் மார்க்சின் நூலுக்குக் கிடைத்த அங்கீகாரத்திற்கு ஜென்னி மிக்க மகிழ்ச்சி அடைந்தார்.. நோய் முற்றத் தொடங்கியதும் படுத்த படுக்கையாகக் கிடந்த ஜென்னி ஓர் அறையிலும், உடல் நலம் குன்றிய மார்க்ஸ் மற்றோர் அறையிலும் பிரிந்து இருந்தனர். 1881 ஜென்னி இறந்து கல்லறையில் அடக்கம் செய்யப்படும் வரையிலும் கூட ஜென்னி உடலைப் பார்க்க மார்க்ஸ் அனுமதிக்கப் படவில்லை. மார்க்சுக்கு .நோய்த் தொற்று ஏற்பட்டு விடக்கூடாது என்ற அச்சம்தான் அதற்குக் காரணம். அவர்களது 38 ஆண்டு மணவாழ்வு இப்படியொரு அவலத்தில்தான் முடிந்தது. ஆனால் ஜென்னி இறந்த இரண்டு ஆண்டுகளில் மார்க்சும் மடிந்தார் என்பதுதான் மகத்தான சோகம். "அன்புதான் ஜென்னி, ஜென்னி என்பது அன்பின் மற்றுமோர் பெயர்" எனவும், "ஜென்னியைப் போல் ஒரு பெண் இல்லையெனில், நான் சாமானியனாகவே இருந்திருப்பேன். அவள் எனக்குக் கிடைத்தது பெரும் பேறு" எனவும் மார்க்ஸ் அஞ்சலிக் கடிதத்தில் குறிப்பிட்டது அவரது பேரன்பின் வெளிப்பாடாகும்.

புரட்சிகர சோசலிசத்தில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தார் ஜென்னி. அதற்காகவே மார்க்சுடன் இணைந்து பொதுவுடைமை விழுமியங்களுக்காகத் தன்னை இறுதி வரை அர்ப்பணித்துக் கொண்டார். உலகின் மீது தான் ஏற்படுத்திய தாக்கத்தைக் காணாமலே அவர் மறைந்தார். ஆனால் சுரண்டலற்ற உலகிற்கான போராட்டத்தில் ஜென்னி மீண்டும் மீண்டும் உயிர்த்தெழுவார் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

♦♦♦

# குடும்பத்திலிருந்து தொடங்கினார்

**ஓவியா**

**சு**யமரியாதை இயக்கத்தின் வீராங்கனைகள் - கருஞ்சட்டைப் பெண்கள் எவ்வாறு அந்த இயக்கத்திற்கும் சமுதாயத்திற்கும் பங்காற்றி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க இருக்கிறோம். அய்யாவுடைய அன்னையார் **சின்னத்தாயம்மா** அவர்களிடம் இருந்து நாம் இந்தத் தொகுப்பைத் தொடங்கலாம் என்று கருதுகிறேன். நமது நாட்டில் அரசியல் என்பது ஆணுக்கானது. அரசியலை வீட்டுக்குக் கொண்டுவருகிற பழக்கமே ஆண்களுக்குக் கிடையாது. பெண்களும் அதைப் பற்றிக் கேள்வி கேட்க அனுமதிக்கப்பட்டது கிடையாது. அரசியலைப் பகிர்ந்து கொள்கின்ற தோழமை நிலை இன்றுவரை இல்லாதபோது, அந்த நாட்களில் அதற்கான சாத்தியமே கிடையாது. ஆனால் பெரியாரைப் பொறுத்தவரை அவர் எந்தக் கருத்தைப் பற்றிக் கொண்டாலும் அதற்கான நடைமுறையைத் தன்னுடைய வீட்டில் இருந்து தொடங்குகின்ற பண்பினைப் பார்க்கின்றோம். அவர் காங்கிரசில் சேர்ந்து காந்தியார் கதர் உடுத்த வேண்டும் என்று சொன்னவுடன், அவர் முதலில் கதர் உடுத்தச் சொன்னது அவரது தாயாரைத்தான். அதுவரை அவர் எப்படி இருந்தார் என்பதைப் பெரியாருடைய வார்த்தைகளிலேயே பார்க்கலாம். தன் தாயார் மறைந்த இரங்கல் உரையில் அவர் இதனை எழுதுகிறார். பெரியாருடைய இரங்கல் உரைகள் மிகவும்

நாகம்மையும் பெரியாரும்



குறிப்பிடத்தக்கவை. அதுவும் தனது குடும்பத்தாரைப் பற்றி அவர் எழுதும்போது, ஒரு மூன்றாவது மனிதராகப் பற்றற்ற நிலையில் நின்று அவர் தனது கருத்துகளைப் பதிவிடுவதைப் பார்க்கலாம். தன்னுடைய தாயார் இறந்த போது அவர் எழுதுகிறார், ‘சின்னத்தாய் அம்மையார் மிகவும் செல்வம் நிரம்பிய குடும்பத்தில் பிறந்தவர். ஆனால் தங்களைவிட வசதி குறைவான ஒரு மணமகனுக்கு வாழ்க்கைப்பட்டதால், அவரோடு சேர்ந்து கஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, உழைப்பில் ஈடுபட்டு மீண்டும் செல்வச் செழிப்பான நிலையை எய்துகிறார்கள்.

இதற்கிடையில் தனது இரண்டாவது மகனாகிய இராமசாமியை (பெரியாரை) தன்னுடைய விதவைச் சகோதரிக்குத் தத்துக் கொடுத்துவிடுகிறார்கள். இதனைக் குறிப்பிடும் போது பெரியார். தன் தாயார் அவருடைய செல்லப்பிள்ளையான மூத்த பிள்ளையோடு, தாய்ப்பாலை இளைய பிள்ளையாகிய தான் பங்குபோடுவதை விரும்பாததாலேயே அந்தம்மா தன்னைத் தத்துக்கொடுத்ததாக எழுதுகிறார். ஆனால் அதன்பின் செல்வம் வந்தபின், செல்வ நிலையைக் காட்டுவதற்காகவே, அநியாயமாகத் தன் சிற்றன்னையிடம் இருந்து தன்னைப் பிடுங்கிக் கொண்டு வந்துவிட்டதாகச் சொல்கிறார் பெரியார். இந்த இடைக்காலத்தில், சிற்றன்னையாருடைய வளர்ப்பில் இருந்ததால் கட்டுப்பாடுகள் அதிகமின்றி வளர்ந்திருக்கிறார். இந்தச் சூழலே சமூகத்தில் தான் மாறுபட்டு சிந்திப்பதற்கும், வாழ்வதற்குமான காரணமாகப் பெரியார் எழுதுகிறார். அதட்டி அடக்கி வைப்பதற்கு ஒரு ஆண் தலைமையில் வளராத காரணத்தாலேயே, இந்தக் குடும்ப அமைப்புக்கும், சாதிக்கும் அடங்காத பிள்ளையாக வளர்வதற்கான வாய்ப்புப் பெரியாருக்குக் கிடைத்தது. பெரியாருக்குக் கிடைத்த இந்த வளர்ப்பு முறைதான் அனைவரும் சமம் என்கின்ற சமத்துவ உணர்வை அவரிடம் விதைப்பதற்குக் காரணமாக இருக்கிறது. ஆனால் மீண்டும் பெரியாரை வீட்டுக்குக் கூட்டி வந்த பிறகும் கூட பெரியார் தன்னுடைய தாயாரால் ஆச்சாரமில்லாதவன் என்று அழைக்கப்பட்டு. தீண்டத்தகாதவராக நடத்தப்பட்டதாகவே பெரியார் பதிவு செய்திருக்கிறார். அதாவது பெரியாரைத் தொட்டுவிட்டால் கூட பெரியாருடைய தாயார் உடனடியாகச் சென்று குளிப்பது வழக்கமாம். அதற்குக் காரணம் இவர் சாதிக்கட்டுப்பாட்டுக்கு அடங்காதவர் என்பதுதான் அவர்

வெளியில் சென்றால் எல்லா சாதிக்காரர்களிடமும் பழகி விட்டு வருவார் என்பதாலேயே வீட்டில் அவர் தீண்டத்தகாதவராகக் கருதப்பட்டதாகப் பெரியார் எழுதுகிறார். தாயார் அப்படி இருந்தது மாத்திரமல்லாமல் தன்னுடைய மருமகளுக்கும் அதே நிபந்தனைகளையே விதித்திருக்கிறார். பெரியாரோடு பேசிவிட்டு வந்தால் குளித்துவிட்டு பிறகுதான் சமையல் காரியங்களையே கவனிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

இப்படிப்பட்ட தாயாரைத்தான் அவர் கதர் அணியச் சொன்னார். அந்த அம்மையாரும் கதர் ஆடையை ஏற்றுக்கொண்டார். நாகம்மையார் போல பெரியாரோடு இணைந்து போராட்ட வெளிகளுக்கு வராவிட்டாலும்கூட, தன்னுடைய மகனின் கொள்கைத் தலைமையை வீட்டுக்குள் அவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதை பின்னாட்களில் நாம் பார்க்கின்றோம். அந்த அம்மையாரும் தொண்ணூற்று அய்ந்து வயதுவரை வாழ்ந்திருக்கிறார்கள். சுயமரியாதை இயக்கத்திற்கு வருவதற்கு முன்பு பெரியாரின் காங்கிரஸ் இயக்கப் பங்களிப்பில் இருந்தே நாம் நமது தலைப்பின் மீதான ஆய்வைத் தொடங்கலாம். ஏனெனில் தன் பொதுவாழ்வின் தொடக்கத்தில் இருந்தே பெண்களைப் பற்றிய பெரியாரின் பார்வையும், அணுகுமுறையும் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது.

**நாகம்மையார் (1885-1933)**

பெரியாருக்குத் திருமணம் ஆகும்போது, பெரியாருக்குப் பத்தொன்பது வயது, நாகம்மையாருக்கு பதிமூன்று வயது. இன்றைய கணக்கில் பார்த்தால் அது குழந்தைத் திருமணம்தான். இதில் பெரியார் வசதியான குடும்பப் பின்னணி கொண்டவர். நாகம்மையார் இவர்களை விட வசதி குறைவான குடும்பத்தைச் சேர்ந்தவர். பெரியாருடைய குடும்பத்தாருக்கு முதலில் இந்தத் திருமணத்தில் சம்மதமில்லை. பெரியாருடைய பிடிவாதத்தால் ஏற்றுக்கொள்கிறார்கள். எனவே மகனுக்காகத்தான் அந்தப் பெண்ணை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அதேபோல் நாகம்மையார் குடும்பத்திலும் வசதியான பெரியாரின் குடும்பத்தில் பெண்ணைக் கொடுக்க விருப்பம் இல்லாமல் இருந்தது. அதனால் தங்களுக்கு ஏற்றாற்போன்ற ஒரு சம்பந்தத்தைப் பேசி முடிக்க ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால்

பெரியாரும் சரி நாகம்மையாரும் சரி, தாங்கள் இருவரும்தான் மணந்து கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாகவும், பிடிவாதமாகவும் இருந்து மணந்து கொள்கிறார்கள். ஆக இது, அந்தக் காலத்தில் நடைபெற்ற ஒரு காதல் திருமணமும் கூட.

அந்தப் பெண் சராசரிப் பெண்களைப் போன்றே அத்தனைச் சடங்காச்சாரங்களோடும் வளர்க்கப்பட்ட பெண். அதுமட்டுமில்லாமல், சாஸ்திர சம்பிரதாயங்கள் நிரம்பிய குடும்பத்தில் மாமியார், மாமனாரை திருப்திப்படுத்த வேண்டிய ஒரு பெண்ணும்கூட. இன்னொருபுறம், இந்தச் சடங்குகள், சம்பிரதாயங்களை அழித்தொழிக்க வேண்டும் என்று சொல்கின்ற கணவர். இந்த இரு தரப்பையும் திருப்திப்படுத்த வேண்டிய கடமை அந்தச் சின்னப்பெண்ணுக்கு ஏற்படுகிறது. இயல்பாக அவர் முதலில் மாமியார் தரப்பில் நிற்கிறார். பெரியார் அவரை மாற்றுவதற்காகவும், அந்தக் குடும்பத்தின் பழக்கவழக்கங்களின் கட்டுப்பாட்டுக்குள் அவர் தொடர்ந்து இருப்பதை மாற்ற விரும்பியும் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கிறார்.

முதலாவதாக, சாப்பாட்டில் இருந்து பிரச்சினை தொடங்குகிறது. நாகம்மையார் சைவ சாப்பாடு சாப்பிட வேண்டும், விரதம் இருக்க வேண்டும். ஆனால் பெரியாருக்குக் கண்டிப்பாக அசைவ உணவு வேண்டும். கணவனுக்காக அசைவ உணவைத் தயாரித்து விட்டு, அந்தத் தீட்டைப் போக்குவதற்காகக் குளித்து, அதன் பிறகு அவர் சாப்பிட வேண்டும். இதற்கு இடையில், பெரியார் தான் சாப்பிட்டு விட்டு, எலும்புத் துண்டுகளை அந்த உணவுக்குள் சொருகி வைத்துவிடுவார். குளித்து விட்டு மருமகளும், மாமியாரும் சாப்பிட உட்கார்ந்தால், சாப்பாட்டிற்குள் இருந்து எலும்புத் துண்டுகளாக வந்து விழும். தன்னுடைய மகனைக் கட்டுப்படுத்த முடியாது என்று முடிவுசெய்த தாயார், தன்னுடைய மருமகளை அழைத்து இனிமேல் நீ எந்த விரதமும் இருக்க வேண்டாம் என்று விரதங்களில் இருந்து விடுதலை கொடுத்துவிட்டார். அன்றிலிருந்து நாகம்மையாரின் விரதங்களும், சைவச் சாப்பாடும் முடிவுக்கு வந்தன.

இவ்வாறாக நாகம்மையார், வீட்டுக்குள் ஆச்சாரமாக இருப்பது என்பது ஒரு முடிவுக்கு வருகிறது. அடுத்தபடியாக

நாகம்மையார் தொடர்ந்து கோயிலுக்குச் செல்லும் வழக்கம் உடையவராக இருந்தார். இதனை எப்படி நிறுத்துவது அல்லது கோயில் என்ற இடத்தைப் பற்றி இவருக்கு எப்படிப் புரிய வைப்பது என்று பெரியார் சிந்தித்தார். அந்தக் காலத்தில் அவர் பெரிய மைனராக இருந்திருக்கிறார்.எனவே தனது மைனர் நண்பர்களிடம் இவர் தனது மனைவி என்பதைத் தெரிவிக்காமலேயே நமது ஊருக்குப் புதிதாக ஒரு தாசி வந்திருக்கிறார். கோவிலுக்கு வரும்போது அவரை நீங்கள் பார்க்கலாமென்று சொல்லியிருக்கிறார். இந்த இடத்தில் மனைவியை தாசி என்று சொல்ல அவர் துணிந்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும். பிறிதொரு சமயத்தில் அவரை எதிர்க்க நினைத்தவர்கள் நாகம்மையாரை பரத்தை என்று அழைத்து அவமானப்படுத்த முற்பட்டபோது, பெரியார் மிகத் தெளிவாகக் கூறினார், 'நாகம்மையார் ஒரு பத்தினியாக இருப்பதில் நான் ஒரு பெருமிதமும் கொள்ளவில்லை என்றும் எனவே அவரை பரத்தையர் என்று சொல்வதில் தான் அவமானப்பட ஏதுமில்லை' என்றும் குறிப்பிடுகிறார். இந்தத் தெளிவு இளவயதிலேயே அவருக்கு வாய்த்திருக்கிறது என்பது மிகவும் வியப்புக்குரிய ஒன்றாகும். இல்லையெனில் விளையாட்டுக்குக் கூட தனது மனைவியை தாசி என்று சொல்லும் துணிச்சல் வந்திருக்குமா ஓர் ஆணுக்கு??? பத்தினி என்ற வார்த்தையும் தாசி என்ற வார்த்தையும் அவரிடம் ஒட்டவேயில்லை, அதுவும் இருபது வயதிலிருந்து என்பது மிக மிக வியப்பான விசயமாகும். சரி, இப்போது என்ன நடந்தது என்று பார்ப்போம். தனது மைனர் நண்பர்களிடம் இவ்வாறு அவர் கூறியதும் அவர்கள் தங்கள் வழமைபோல் இவர்கள் கோயிலுக்குச் செல்லும்போது கேலியும் கிண்டலும் செய்ய, பயந்துபோன நாகம்மையார் அவர்கள் வீட்டிற்குத் திரும்பி வந்து அழுதிருக்கிறார்கள். உடனே அய்யா அவர்கள் கோயில் என்றால் அப்படித்தானம்மா இருக்கும் என்று சொல்ல, கோயிலைப் பற்றிப் புரிந்து கொண்ட அந்த அம்மையார் கோவிலுக்குச் செல்வதை நிறுத்தி விடுகிறார்.

அடுத்தது தாலி. அந்தம்மையார் தாலி சுட்டியிருப்பது பெரியாருக்கு விருப்பமில்லை. எனவே இரவு படுக்கும்போது உம் புருசன் நான் பக்கத்திலிருக்கும் போது இந்தத் தாலி எதற்கு என்று கேட்டு அந்தத் தாலியை கழற்றி வைக்கும்படி செய்து

விடுவார். காலையில் அந்தம்மையார் எழுவதற்கு முன்பாக எழுந்து தாலியை சட்டைப் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு வெளியில் சென்று விடுவார். கழுத்தில் தாலி இல்லாததை மறைப்பதற்காக அந்தம்மையார் கழுத்தை மூடிக்கொண்டு வேலை செய்வார். இதைக் கண்டுபிடித்து விட்ட பிற பெண்கள் இவரை கேலி செய்யத் தொடங்கினார்கள். ஒரு கட்டம் வரை பொறுத்துப் பார்த்த நாகம்மையார் பிறகு அந்தப் பெண்களை எதிர்த்துப் பேசத் தொடங்கினார். புருசனே பக்கத்திலிருக்கும் போது நான் எதற்கு அந்தத் தாலிக்காகக் கவலைப்பட வேண்டும்? என்று எதிர்க்கேள்ளி கேட்டார். இதன் மூலம் ஊரார் ஏதாவது பேசுவார்களேயென்ற அச்சத்திலிருந்து அந்தம்மையார் விடுபட்டார். மீறத் தொடங்கி விட்டால் அந்த அச்சம் என்பது ஒரு பலூன் போல உடைந்து ஒன்றுமில்லாமல் போய்விடும். இவ்வாறு அந்தம்மையார் தாலி கட்டும் வழக்கமும் ஒழிந்தது.

இதனைப் பற்றியெல்லாம் பேசுகையில் ஒரு நண்பர் என்னிடம், ‘பெரியார் இப்படி நடந்து கொண்டதில் ஆணாதிக்கமில்லையா? அதனை பெண்ணியவாதிகள் இப்படிக் குதூகலமாகப் பதிவு செய்யலாமா?' என்று கேட்டார். கறாராகப் பார்த்தால் அந்தக் கேள்வி சரிதான். ஆனால் ஆண் தலைவனாக இருக்கின்ற ஒரு சமூகத்தில் அவர் தலைமையேற்று வழிநடத்த வேண்டிய கடப்பாடு உள்ளவராக இருக்கின்றபட்சத்தில், தன்னை நம்பி வந்த, நம்பி வாழ்கின்ற, தன்னை நேசித்து அவரிடம் தன்னையே முழுமையாக ஒப்படைத்திருக்கின்ற ஒரு ஜீவனை அறிவு வழிப்படுத்துவதற்கு என்ன தந்திரோபாயங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அவருக்கிருக்கிறது. இவற்றில் ஏதோவொன்று உண்மையாகவே நாகம்மையாரை புண்படுத்தியிருக்கும் பட்சத்தில் நிச்சயமாக பெரியார் அந்தக் காரியத்தைச் செய்திருக்க மாட்டார். அழுவது போலிருந்தாலும் நாகம்மையாரும் இரசித்துச் சிரிக்கத்தக்க அளவிலேயே பெரியார் இத்தனை காரியங்களையும் செய்திருப்பார். மாறாக அய்யோ இப்படிப்பட்ட கணவன் வாய்த்திருக்கிறாரே என்று அழுது புலம்பும்விதமாக அமைந்திருக்கவில்லை. எனவே இது ஆணாதிக்கமா அல்லது நெறிப்படுத்துதலா என்ற கேள்விக்கான பதில் அவர்களுக்கிடையேயிருந்த உறவில்தான் இருக்கிறதேயொழிய தத்துவத்தில் இல்லை. அவர்களுக்கிடையே

இருந்த உறவு அன்புவழிப்பட்டதாக இருந்த காரணத்தினால் இந்த நடவடிக்கைகள் சரியானவையாக முடிந்திருக்கின்றன. இவையெல்லாம் ஒரு பக்கம் சின்ன விசயங்களாகத் தோன்றலாம். ஆனால் சின்ன விசயங்கள் அல்ல. இனி நாம் பின் வந்த நாட்களில் நாகம்மையார் எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்பவராக உருவாகிறார் என்பதைப் பார்க்க இருக்கிறோம். இத்தகைய தயாரிப்புகளைப் பெரியார் செய்திருக்காவிட்டால் அப்பேற்பட்ட நாகம்மையார் நமக்குக் கிடைத்திருப்பாரா என்று கேட்டால் கிடைத்திருக்க வாய்ப்பில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

தி.க.காரர்களுக்குக் கட்டிக் கொடுத்தால் கோவிலுக்கு அழைத்துச் செல்ல மாட்டார்கள். அவர்களாகப் போகவும் அனுமதிக்க மாட்டார்கள். எனவே அந்த மனைவிமாரெல்லாம் மிகுந்த கொடுமையை அனுபவிக்கிறார்கள் என்றெல்லாம் பேசப்படுவதை நாங்கள் கேட்டிருக்கிறோம். இது இந்த இயக்கத்தின் மீதான விமர்சனமாகக் கூட வைக்கப்படுவதைப் பார்க்கிறோம். ஆனால், கோவிலுக்குப் போவது பெண்ணடிமைத்தனமா, கோவிலுக்குப் போவதைத் தடுப்பது பெண்ணடிமைத்தனமா என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். மேலும் பெரியாருக்கும் நாகம்மையாருக்கும் இடையே இருந்த உறவைக் குறிப்பிட்டதுபோல, எந்த இடத்தில் இது ஆணாதிக்கமாகச் செயல்படுகிறது, எந்த இடத்தில் அவர்களை மேன்மைப்படுத்துவதற்காக வளர்த்தெடுப்பதற்காகச் செயல்படுத்தப்படுகிறது என்பதனை நாம் அவர்களுக்கிடையே நிலவிய உறவுநிலையை வைத்தே புரிந்துகொள்ள முடியும். இதைத்தான் இந்த விமர்சனத்திற்குப் பதிலாக நாம் சொல்கிறோம். திராவிடர் கழகத்துக்காரர்கள் அவ்வாறு நடந்து கொண்டிராவிட்டால், இந்த இயக்கத்தில் பெண்களை எப்படிப் பார்த்திருக்க முடியும்? சமூக உரிமையும், தலைமையும் ஆணிடம் இருக்கும்போது, பெண்ணை அந்த இடத்திற்கு அழைத்து வரவேண்டிய வாய்ப்பும், நிலையும் கூட ஆணிடத்தில்தான் இருக்கின்றது. பெண்கள் இயல்பாகவே முதலில் இவ்வாறு வருவதற்குத் தயக்கம் கொள்கிறவர்களாக இருப்பதைப் பார்க்கின்றோம். அதற்குக் காரணம் அவர்கள் அறியாமையே அன்றி வேறெதுவும் அல்ல.

## கள்ளுக்கடை மறியல்

பெரியார் காங்கிரஸ் இயக்கத்தில் இருந்தபோதும், சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கியபோதும் நாகம்மையார் அளித்திருக்கும் பங்களிப்புகள் மகத்தானவை. நாளடைவில் கணவனைப் பின்பற்றி சுயமரியாதை வாழ்க்கையை ஏற்றுக்கொண்ட நாகம்மையார், தன் கணவன் வேறு அவருடைய பாதை வேறு என்கின்ற வேறுபாடுகளைக் கடந்து, தன்னுடைய கணவரும், அவர் காட்டியிருக்கிற பாதையும் ஒன்றே என்னும் அளவுக்குக் கணவருடைய கொள்கைகளையும் காதலிக்கத் தொடங்கினார். அந்தக் கொள்கைகளையே தனது வாழ்க்கையென ஏற்றுக்கொண்டார். 1920களிலே கள்ளுக்கடைப் போராட்டம் தொடங்கியது. கள்ளுக்கடைகளை மூடச்சொல்லிப் போராட்டம் தொடங்க வேண்டும் என்கின்ற தீர்மானம் பெரியாரின் வீட்டில் வைத்துத்தான், காந்தியாரின் தலைமையிலே நிறைவேற்றப்படுகிறது. அதன்படி போராட்டம் தொடங்கியது. தான் ஏற்றுக்கொண்ட போராட்டத்திற்காக எதையும் செய்யத் துணிகின்ற பெரியார் தன்னுடைய தோப்பில் இருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார். 500 தென்னைமரங்களின் மதிப்பு சாதாரணமானதல்ல. வடநாட்டில்கூட ஈச்சமரங்களைத்தான் வெட்டினார்கள். தென்னை மரத்தை வெட்டியது பெரியார் அவர்கள்தான்.

அதில் பெரியார் கைது செய்யப்பட்ட பிறகு, நாகம்மையார் அந்தப் போராட்டத்தை முன்னின்று நடத்துகிறார். அப்போதெல்லாம் கள்ளுக்கடைகள் இப்போது இருப்பது போல் ஊருக்குள் கிடையாது. ஊருக்கு வெளியே நடந்து செல்லவே சுகாதாரமற்ற இடங்களில் அமைந்திருக்கும். அத்தகைய இடங்களுக்குச் சென்று, நாகம்மையாரும், பெரியார் அவர்களின் சகோதரி **கண்ணம்மாள்** அவர்களும் மறியலில் ஈடுபட்டது என்பது எப்படிப்பட்ட புரட்சிகரமான செயலாக இருந்திருக்கும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இவ்வாறு நாகம்மையாரும், கண்ணம்மாளும் கள்ளுக்கடை மறியல் செய்தது காங்கிரஸ் இயக்கத்தில் இருந்தபோது நடந்தது. ஆனால் எந்தக் காங்கிரஸ்காரராவது தன்னுடைய இயக்கப் போராளிகள் பெயரில், நாகம்மையார் பெயரையோ, கண்ணம்மாள் பெயரையோ குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்களா? காங்கிரசில்

உள்ள பெண்மணிகள் என்று எத்தனை பேரின் பெயர்களைப் பட்டியல் இடுகிறார்கள், ஏன் அதில் நாகம்மையார் பெயரோ, சுண்ணம்மாள் பெயரோ இல்லை என்பதை கேட்டிருக்கிறோமா? இவர்களைப் பற்றி எந்தப் பதிவும் காங்கிரஸ் ஏடுகளில் கிடையாது. சரி அதை விடுங்கள். இன்று வரை மது ஒழிப்புப் போராட்டம் இந்த மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எந்த மது ஒழிப்புப் போராளியாவது நாகம்மையாரையும், கண்ணம்மாளையும் பற்றிப் பேசியிருக்கிறார்களா? இன்றைக்கு இந்தப் போராட்டத்தைக் காந்தியவாதிகள் நடத்துகிறார்கள், கம்யூனிஸ்டுக் கட்சிக்காரர்கள் நடத்துகிறார்கள். ஆனால் யாரும் இந்த மது ஒழிப்புப் போராட்டத்தின் முன்னோடிகள் என்று அந்த இரு பெண்களையும் பதிவு செய்வதில்லை. இன்றைய தினம் திராவிடர் இயக்க மகளிர் உருவாக்கத்தில் கடந்த காலங்களை ஒப்பிடும்போது, ஒரு தொய்வு நிலை காணப்படுகிறது என்று சொன்னால், இத்தகைய இருட்டடிப்புகளும் ஒரு காரணம்.

பெண்ணடிமைத்தனத்தைப் பொறுத்தவரை, அடித்தட்டு மக்களில் இருந்து மேலே போகப்போக, அதன் பிடி இறுகிக்கொண்டே போகிறது. அந்த அடிப்படையில் பெரியாரின் குடும்பம் போன்ற ஓர் ஆச்சாரமான குடும்பத்தில் இருந்த பெண்கள் கதராடை அணிந்தது. கள்ளுக்கடைக்கு முன்னால் சென்று உட்கார்ந்து மறியல் செய்தது என்பது மிகப்பெரிய விசயம். அதன் பிறகு 1924இல் வைக்கம் போராட்டம் வருகிறது. வைக்கம் போராட்டத்தில் என்ன நடக்கிறது? கேரளாவிலே அங்கே இருக்கிற வீதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடந்து போக முடியாது. இதனால் முக்கியமாக வழக்கறிஞர் தொழில் செய்வோர் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். காரணம் அந்த வீதியைத் தாண்டித்தான் அவர்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. எனவே அவர்கள்தான் போராட்டத்தைத் தொடங்குகிறார்கள். அந்தப் போராட்டத்தைத் தொடங்கிய திருமிகு மாதவன் மற்றும் கே.பி கேசவமேனன் ஆகிய தலைவர்கள் கைது செய்து உள்ளே வைக்கப்படுகிறார்கள்.

அவர்கள் கைது செய்யப்பட்டவுடன் இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும்படி பெரியாருக்கு அவர்களிடமிருந்து கடிதம் வருகிறது. பெரியார் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துகிறார். அவரும் கைது செய்யப்படுகிறார். அதனைத் தொடர்ந்து அந்தப்

போராட்டத்தை நாகம்மையார் தொடர்கிறார். நினைத்துப் பாருங்கள். வெளியூர் அல்ல வெளிமாநிலம். அந்தப் பகுதி என்பது முற்றிலும் வேறுபட்ட மொழி, உடை, பாவனை உள்ள பகுதி. அங்கு சென்று ஒரு போராட்டத்தைத் தலைமை ஏற்று நடத்துவது என்பது இன்று கூட நினைத்துப் பார்க்க முடியாத ஒரு விசயம். இன்று ஐ.டி.யில் வேலை பார்க்கிற பெண்கள் கூட, கல்யாணத்திற்குப் பிறகு கணவன் இல்லாமல் தனித்து வெளியில் வருவதற்குத் தயங்குகிற நிலையையே நாம் பார்க்கிறோம். ஆனால் நாகம்மையார் கணவர் சிறைப்பட்ட நிலையில், அப்போராட்டத்தை அவர் பொறுப்பெடுத்துத் தொடர்கிறார். அப்பொழுது காவலர்கள் அவரை நோக்கி உன்னுடைய சாதி என்னவென்று கேட்கிறார்கள். அதற்கு நாகம்மையார் திருப்பிக் கேட்கிறார். 'ஏன் நான் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவள் இல்லையென்றால், என்னைமட்டும் உள்ளே விடலாம் என்று நினைக்கிறீர்களா? நான் சாதி சொல்ல முடியாது'.

இந்தப் பதிலை நாம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். நான் சாதி சொல்ல மாட்டேன் என்று மட்டும் சொல்லியிருந்தால் அது ஒரு தட்டையான பதில். ஆனால் என்ன நோக்கத்திற்காக சாதி கேட்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டு, அந்த நோக்கம் நிறைவேற நான் ஒத்துழைக்க மாட்டேன் என்று விளக்கமாகப் பதில் சொல்கிற தன்மை இருக்கிறதே, அங்குதான் பெரியார் கொடுத்த பயிற்சியின் வெற்றியை நாம் பார்க்கிறோம். நாகம்மையார் போராடிய போது கோவில் இருந்த தெருவில் நுழைவதற்காகத் தொடங்கிய போராட்டம், கோயில் நுழைவு போராட்டமாகவே மாறிவிடக்கூடிய சூழலை எட்டியது. அப்போதும் அவர்கள் காங்கிரஸ் இயக்கத்தில்தான் இருக்கிறார்கள். காந்தியினுடைய இராட்டையை எடுத்துக்கொண்டு, அப்போது பெய்த மழையையும் பொருட்படுத்தாமல் நனைந்து கொண்டு, அவர்கள் நடத்திய போராட்டத்தின் வல்லமையை என்னவென்று சொல்வது?

இந்திய தேசியக் காங்கிரஸ் இயக்க வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய இந்தப் போராட்டம் அவர்களால் மறக்கப்பட்டாலும் கூட கேரளத்தில் உரிய மரியாதையுடன் இன்றளவும் நினைவுகூரப்படுகிறது. அந்தக் கால கட்டத்திலேயே அவர்கள் பெரியாரையும், நாகம்மையாரையும்

அழைத்துச் சிறப்பு செய்திருக்கிறார்கள். அண்மைக் காலத்தில் அய்யா அவர்களின் சிலை அங்கு திறக்கப்பட்டது. அந்த நிகழ்ச்சிக்கு, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் சிறப்பு விருந்தினராகச் சென்றிருந்தார்கள். காங்கிரஸ் இயக்கம் தன்னுடைய சாதனையாகக் கூட அந்தப் போராட்டத்திற்கு உரிமை கோரவில்லை என்பது வருத்தத்திற்குரியது. ஆனால், அந்தப் போராட்டத்தில் நாகம்மையாருடைய பங்களிப்பு வீரஞ்செறிந்தது மட்டுமல்ல மதிநுட்பமும் வாய்ந்தது. சாதிய ரீதியாகப் போராட்டக்காரர்களைப் பிரித்தாள முயற்சித்த காவலர்களுடைய நடவடிக்கைகளை முறியடித்து, அப்போது பெய்த மழையையும் பொருட்படுத்தாமல், காந்தியாரின் இராட்டையை நூற்றுக்கொண்டு, நாகம்மையார் அவர்கள், போராட்டத்தை நடத்திச் சென்றார்கள். அரசு இயந்திரம் இந்தப் பெண்களை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் திகைத்து நின்றது.

1920இல் இருந்து 1925வரை காங்கிரஸ் இயக்கத்திற்காக உழைத்தவர் நாகம்மையார். அவர் பெரியாரோடு அனைத்துப் பயணங்களிலும் உடனிருந்தார். அது மனைவி, கணவனோடு சென்ற பயணம் மட்டுமல்ல, அது ஒரு கொள்கைப் பயணம். நாகம்மையார் அவர்கள்தான் அகில இந்தியக் காங்கிரஸ் கட்சிக்குத் தமிழகத்தில் இருந்து பரிந்துரை செய்யப்பட்ட முதல் பெண் பிரதிநிதி ஆவார். காங்கிரஸ் இயக்க வரலாற்றில் அவருக்கு நிகரான பெண் போராளிகளைக் காண்பது அரிது. பட்டாடைகளையும் மாளிகை வாசத்தையும் புறந்தள்ளி, வீரியமிக்க, போராட்டங்கள் மிக்க, துன்பங்கள் நிறைந்த. அவமானங்களையும், ஏச்சுகளையும், பேச்சுகளையும் உள்ளடக்கிய பொதுவாழ்க்கையில் அவர் நுழைந்தது எத்தகைய தியாகம் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். அதன்பின் சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்படுகிறது. அதிலும் நாகம்மையார் அவர்களுடைய பங்கு அளப்பரியது. எடுத்துச் சொல்லப்பட வேண்டியது. ஏனென்று கேட்டால், பெரியார் ஒரு பெரிய குடும்பமாகத்தான் அந்த இயக்கத்தைக் சுட்டுகிறார். அந்தக் குடும்பத்தின் அன்னையாராக நாகம்மையார் திகழ்கிறார். அத்தகைய ஓர் அன்னை கிடைக்காமல் போயிருந்தால், அப்படிப்பட்ட ஓர் இயக்கத்தைக் கட்டியிருக்க முடியுமா? அவ்வளவு தோழர்களை உருவாக்கி இருக்க முடியுமா?

பெண்களை ஈர்த்திருக்க முடியுமா? திராவிடர் இயக்கம் குடும்பம் குடும்பமாக வளர்ந்த இயக்கம். அத்தனை குடும்பங்களை ஆதரித்து அரவணைக்கிற அன்னையாக நாகம்மையார் திகழ்ந்தார்.

அன்னை நாகம்மையாரைப் பற்றி **பேராசிரியர் மங்களமுருகேசன்** விரிவானதொரு நூலை எழுதியிருக்கிறார். அந்த நூலில் ஓர் இடத்தில் அவர் சொல்கிறார். நாகம்மையார் மேடை ஏறிப் பேசியதில்லை. ஆனால் அவர் வருகை தரும் கூட்டங்களில் பெண்கள் அதிகளவில் கலந்துகொண்டார்கள். அத்தகையதொரு பெண்மணி பெரியாரின் அருகில் இல்லாமல் இருந்திருந்தால், என்னதான் பெரியார் பெண்ணுரிமைக் கருத்துகளைப் பேசியிருந்தாலும் கூட, பெண்கள் அவ்வளவு அதிகளவில் திரண்டிருப்பார்களா என்பது ஒரு மிகப்பெரிய கேள்விக்குறி. அறிவுக்கருவூலம் அய்யா அவர்கள்தான்; தலைமையும் வழிகாட்டுதலும் அய்யா அவர்கள்தான். ஆனால் அதனை ஏதுவாக்கிக் கொடுத்ததில் அம்மா அவர்களுடைய பங்கு இருக்கின்றது. அன்றைய தினம் அவர்களின் குடும்பச் சொத்துதான் இயக்கத்திற்கு இருந்த ஒரே சொத்து. ஆனால், உவப்புடன் அனைவரையும் அரவணைத்து, அன்னமிட்டு ஆதரித்தார்கள். மேலும் **‘குடியரசு’** இதழின் பதிப்பாசிரியராகவும் நாகம்மையார் இருந்தார்கள்.

பதிப்பாசிரியர் என்பது வெறுமனே பத்திரிகையில் பெயர் போட்டுக்கொள்வது மாத்திரமல்ல. அப்போதெல்லாம் 'குடியரசு' பத்திரிகை காவல்துறையின் தொடர் கண்காணிப்பில் இருந்த வந்த நிலை. பத்திரிகைகளில் வெளிவரும் விசயங்களுக்கு விளக்கம் கேட்கப்படலாம். கைதுகூட செய்யப்படலாம். இதுமாதிரியான பொறுப்பைத்தான் அம்மையார் வகித்தார். **‘குடியரசு’** மட்டுமல்ல, **‘ரிவோல்ட்’** என்கின்ற ஆங்கிலப் பத்திரிகையின் பதிப்பாசிரியரும் இவரே. அந்த ஏட்டிலே **குஞ்சிதம் குருசாமி, முத்துலட்சுமி ரெட்டி** ஆகியோர் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள்.

குஞ்சிதம் அம்மையார், நீலாவதி ஆகியோர் செய்துகொண்ட சாதி மறுப்புச் சுயமரியாதைத் திருமணங்களுக்கு (விதவைத் திருமணங்களும்கூட) நாகம்மையார் அவர்களும், அய்யா அவர்களும், அவர்களின் தாய் தகப்பன் நிலையில் இருந்து

திருமணப் பத்திரிகைகள் அடித்து அழைப்பு விடுத்திருக்கிறார்கள். 1930களில் நடந்த **நீலாவதி - இராமசுப்பிரமணியம்** திருமணம் தாலி மறுப்புத் திருமணமும்கூட சுயமரியாதை இயக்கத் திருமணங்களின் தோற்றுவாய் இங்கிருந்துதான் தொடங்குகிறது. முதன்முதலில் தாலி மறுப்புத் திருமணம் நடைபெற்ற செய்தியை குடியரசில் எழுதும்போது, 'இன்று முதல் தாலி ஒழிந்தது என்று எழுதினார்கள். திருமணத்தைப் புரட்சிக்கான ஆயுதமாக மாற்றிய இயக்கம் சுயமரியாதை இயக்கம். ஆயிரம் பேர் கூடித்தான் ஒரு திருமணம் நடத்தவேண்டும் என சுயமரியாதை இயக்கம் நினைக்கவில்லை. பின்னாட்களில் என்னைப் போன்றோரெல்லாம் கூட திருமணத்திற்கு அறிவிப்பு மட்டும்தான் கொடுத்தோம். ஆனால் எதற்காக சுயமரியாதை இயக்க நிகழ்வுகள் மிகப்பெரிய அளவில் நடத்தப்பட்டன என்றால், அந்தத் திருமண நிகழ்வில்தான் நம்மால் தாய்மார்களைச் சந்திக்க முடிகிறது என்கிற காரணம்தான் என்கிறார் பெரியார்.

மேலும் அய்யா அவர்களுடைய வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்களான மலேசியா, பர்மா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கு அவருடன் நாகம்மையாரும் செல்கிறார். இரண்டாவது முறை அய்யா அவர்கள் அய்ரோப்பிய சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, அம்மா அவர்கள் உடன் செல்லவில்லை. இங்கு இருந்து இயக்கப் பணிகளில் சோர்வு ஏற்படாமல் பார்த்துக் கொண்டார். அய்யாவை வரவேற்பதற்காக இலங்கை சென்று அவரை எதிர்கொண்டு அழைத்து வருகிறார். உண்மையில் இந்த அய்ரோப்பிய சுற்றுப்பயணத்தில் மட்டுமே திருமணத்திற்குப் பின் தனது வாழ்நாளில் அய்யாவை அவர் பிரிந்து இருந்தார். தனது நாற்பத்து எட்டாவது வயதில் நோய்வாய்ப்பட்டு மரணமடைகிறார்.

அவருடைய பிரிவின் போது அய்யா எழுதிய இரங்கல் உரை இலக்கியநயம் மிக்கது. அம்மையார் மரணமடைந்த போது, நாட்டின் பல்வேறு தலைவர்கள் இரங்கல் உரை நிகழ்த்துகிறார்கள். பல்வேறு இடங்களில் படத்திறப்பு நிகழ்வுகளும், இரங்கல் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. மலேசியாவில் கூட இரங்கல் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அவர் மரணமடைந்த அன்றே பெரியார் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளச் செல்கிறார். அடுத்த நாள் 144 தடை உத்தரவை மீறி சிறைக்குச் செல்கிறார். ஆனால், நாடே நாகம்மையாருக்கு அஞ்சலி செலுத்தியது.

இயக்கத் தொண்டர்கள் சொந்த அன்னையை இழந்ததுபோல அழுது பரிதவித்தார்கள் இயக்கம் துயருற்றது. இவையெல்லாம் நாகம்மையாருடைய தொண்டின் சிறப்பை எடுத்தோதுகின்றன.

**திராவிட இயக்கப் பெண்கள் வரலாற்றில், நாகம்மையார் முதல் முத்தாகத் திகழ்கிறார். சுயமரியாதை இயக்க வரலாற்றில், அதனைத் தோற்றுவித்த மாபெரும் பணியில் நாகம்மையாரின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. அவரைத் தவிர்த்துவிட்டு இந்த இயக்க வரலாற்றை யாரும் எழுதிவிட முடியாது.**

## நாகம்மாள் மறைவையொட்டி பெரியார் அவர்கள் வெளியிட்ட இரங்கலுரை :

எனதருமைத் துணைவி, ஆருயிர்க் காதலி நாகம்மாள் 11.5.33 தேதி மாலை 7.45 மணிக்கு ஆவி நீத்தார். இதற்காக நான் துக்கப்படுவதா? மகிழ்ச்சியடைவதா? நாகம்மாள் நலிந்து மறைந்தது எனக்கு லாபமா? நஷ்டமா? என்பது இதுசமயம் முடிவுகட்ட முடியாத காரியமாய் இருக்கிறது. எப்படியிருந்தாலும் தாகம்மாளை "மணந்து" வாழ்க்கைத் துணையாகக் கொண்டு 35 வருஷகாலம் வாழ்ந்துவிட்டேன்.

நாகம்மாளை நான்தான் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டு இருந்தேனேயல்லாமல் நாகம்மாளுக்கு நான் வாழ்க்கைத் துணையாக இருந்தேனா என்பது எனக்கே ஞாபகத்துக்கு வரவில்லை. நான் சுயநல வாழ்வில் 'மைனராய்', 'காலியாய்', 'சீமானாய்' இருந்த காலத்திலும், பொதுநல வாழ்வில் ஈடுபட்டுத் தொண்டனாய் இருந்த காலத்திலும் எனக்கு வாழ்வின் ஒவ்வொரு துறையின் முற்போக்குக்கும் நாகம்மாள் எவ்வளவோ ஆதாரமாய் இருந்தாள் என்பது மறுக்க முடியாத காரியம். பெண்கள் சுதந்திர விஷயமாகவும் பெருமை விஷயமாகவும் பிறத்தியாருக்கு நான் எவ்வளவு பேசுகிறேனோ, போதிக்கிறேனோ அதில் நூற்றில் ஒரு பங்கு வீதமாவது என்னருமை நாகம்மாளுக்கு நான் நடந்து கொண்டிருந்தேன் என்று சொல்லிக் கொள்ள எனக்கு முழு யோக்கியதை இல்லை.

ஆனால் நாகம்மாளோ பெண்ணடிமை விஷயமாகவும் ஆண் உயர்வு விஷயமாகவும், சாஸ்திர புராணங்களில் எவ்வளவு

கொடுமையாகவும், மூர்க்கமாகவும் குறிப்பிட்டிருந்ததோ அவற்றுள் ஒன்றுக்குப் பத்தாக நடந்து கொண்டிருந்தாள் என்பதையும் அதை நான் ஏற்றுக் கொண்டிருந்தேன் என்பதையும் மிகுந்த வெட்கத்துடன் வெளியிடுகிறேன்.

நாகம்மாள் உயிர் வாழ்ந்ததும், வாழ ஆசைப்பட்டதும் எனக்காகவே ஒழிய தனக்காக அல்ல என்பதை நான் ஒவ்வொரு விநாடியும் நன்றாய் உணர்ந்து வந்தேன். இவைகளுக்கெல்லாம் நான் சொல்லக்கூடிய ஏதாவதொரு சமாதானம் உண்டென்றால் அது வெகு சிறிய சமாதானமேயாகும்.

அதென்னவென்றால் நாகம்மாளின் இவ்வளவு காரியங்களையும், நான் பொதுநலச் சேவையில் ஈடுபட்ட பிறகு பொதுநலக் காரியங்களுக்கும், சிறப்பாக சுயமரியாதை இயக்கத்திற்குமே பயன்படுத்தி வந்தேன் என்பதுதான். நாகம்மாள் நான் காங்கிரசிலிருக்கும் போது மறியல் விஷயங்களிலும், வைக்கம் சத்தியாகிரக விஷயத்திலும், சுயமரியாதை இயக்கத்திலும் ஒத்துழைத்து வந்தது உலகம் அறிந்ததாகும்.

ஆகவே நாகம்மாள் மறைந்தது எனக்கு ஒரு அடிமை போயிற்றென்று சொல்லட்டுமா? ஆதரவு போயிற்றென்று சொல்லட்டுமா? இன்பம் போயிற்றென்று சொல்லட்டுமா? உணர்ச்சி போயிற்றென்று சொல்லட்டுமா? ஊக்கம் போயிற்றென்று சொல்லட்டுமா? எல்லாம். போயிற்றென்று சொல்லட்டுமா? எதுவும் விளங்கவில்லையே!

எது எப்படியிருந்தபோதிலும், நாகம்மாள் மறைவு ஒரு அதிசய காரியமல்ல. நாகம்மாள் இயற்கை எய்தினாள். இதிலொன்றும் அதிசயமில்லை. நாகம்மாளை அற்ப ஆயுள்காரியேயென்று யாரும் சொல்லிவிட முடியாது. நாகம்மாளுக்கு நாற்பத்தெட்டு வயதே ஆன போதிலும், அது மனித ஆயுளில் பகுதிக்கே சிறிது குறையான போதிலும் இந்திய மக்களில் சராசரி வாழ்நாளாகிய இருபத்து மூன்று வயதுக்கு இரட்டிப்பென்றே சொல்ல வேண்டும். செத்தால் சிரிக்க வேண்டும். பிறந்தால் அழுக வேண்டும் என்கின்ற ஞானமொழிப்படி, நாகம்மாள் செத்ததை ஒரு துக்க சம்பவமாகவும், நஷ்ட சம்பவமாகவும் கருதாமல் அதை ஒரு மகிழ்ச்சியாகவும், லாபமாகவும் கருத வேண்டும் என்றே நான்

ஆசைப்படுவது மாத்திரமல்லாமல் அதை உண்மையென்று கருதுகிறேன்.

எப்படியெனில் எனது வாழ்நாள் சரித்திரத்தில் இனி நிகழப்போகும் அத்தியாயங்களோ சிறிது விசேஷ சம்பவங்களோ இருந்தாலும் இருக்கலாம். அதை நாகம்மாள் இருந்து பார்க்க நேரிட்டால் அந்த அம்மாளுக்கு அவை மிகுந்த துக்கமாகவும் துயரமாகவும் காணக்கூடியதாய் இருக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமிருக்காது. அத்துடன் அதைக்கண்டு சகியாத முறையில் யானும் சிறிது கலங்கக்கூடும். ஆதலால் நாகம்மாள் மறைவால் எனக்கு அதிக சுதந்திரம் ஏற்பட்டதுடன் “குடும்பத் தொல்லை ஒழிந்தது என்கின்ற இரு உயர்பதவியையும் அடைய இடமேற்பட்டது.

இது நிற்க. நாகம்மாள் மறைவை நான் எவ்வளவு மகிழ்ச்சியான காரியத்திற்கும், லாபமான காரியத்துக்கும் பயன்படுத்திக் கொள்கிறேனோ அந்த மாதிரி எனது மறைவையோ எனது நலிவையோ நாகம்மாள் உபயோகப்படுத்திக் கொள்ள மாட்டாள். அதற்கு நேரெதிரிடையாக்குவதற்கே உபயோகித்துக் கொள்வாள். ஆதலால் நாகம்மாள் நலத்தைக் கோரியும், நாகம்மாள் எனக்கு முன் மறைந்தது எவ்வளவோ நன்மை.

என்னருமை தோழர்கள் பலருக்கு நாகம்மாள் மறைவு ஈடுசெய்ய முடியாத நஷ்டம் என்று தோன்றலாம். அது சரியான அபிப்பிராயமல்ல. அவர்கள் சற்று பொறுமையாய் இருந்து இனி நடக்க இருக்கும் நிகழ்ச்சிகளைக் காண்பார்களானால் அவர்களும் என்னைப் போலவே நாகம்மாள் மறைவு நலமென்றே கருதுவார்கள். நாகம்மாளுக்கு காயலா ஏற்பட்ட காரணமே எனது மேல்நாட்டு சுற்றுப் பிரயாணம் காரணமாய் ஒரு வருஷகாலம் பிரிந்து இருந்திருக்க தேர்ந்த பிரிவாற்றாமையே முக்கிய காரணம். இரண்டாவது இரஷ்யயாத்திரையினால் எனக்கு ஏதோ பெரிய ஆபத்து வரும் என்று கருதியது.

மூன்றாவது நமது “புதிய வேலை திட்டங்களை” உணர்ந்த பின் ஒவ்வொரு நிமிஷமும் தனக்குள் ஏற்பட்ட பயம், ஆகிய இப்படிப்பட்ட அற்ப காரணங்களே அவ்வம்மைக்குக் "கூற்றாக" நின்றது என்றால் இனி இவற்றைவிட மேலானதான பிரிவு ஆபத்து, பொருளாதாரக் கஷ்டம் முதலியவை உண்மையாய் ஏற்பட

இருக்கும் நிலை அவ்வம்மைக்கு எவ்வளவு கஷ்டமாய் இருக்கும் என்று நினைத்துப் பார்க்கும் தோழர்கள் நாகம்மாள் மறைவுக்கு வருந்த மாட்டார்கள் என்றே கருதுகிறேன். 2,3 வருஷங்களுக்கு முன்பிருந்தே நான் இனி இருக்கும் வாழ்நாள் முழுவதையும் சங்கராச்சாரிகள் போல (அவ்வளவுக்கு ஆடம்பரத்துடனல்ல, பண வசூலுக்காக அல்ல) சஞ்சாரத்திலேயே, சுற்றுப் பிரயாணத்திலேயே இருக்க வேண்டும் என்றும் நமக்கென்று ஒரு தனி வீடோ அல்லது குறிப்பிட்ட இடத்தில் நிரந்தர வாசம் என்பது கூடாதென்றும் கருதி இருந்ததுண்டு. ஆனால் அதற்கு வேறு எவ்விதத் தடையும் இருந்திருக்கவில்லை என்றாலும் நாகம்மாள் பெரிய தடையாய் இருந்தாள், இப்போது அந்தத் தடை இல்லாது போனது ஒரு பெரிய மகிழ்ச்சிக்குரிய காரியமாகும். ஆதலால் நாகம்மாள் முடிவு நமக்கு நன்மையைத் தருவதாகுக.

ஈ.வெ.ரா. (குடியரசு 14.5.1933)

♦♦♦

★ கட்டுரையாளர்
திராவிட இயக்க எழுத்தாளர்/
சமூகச் செயல்பாட்டாளர்

# மார்க்சீய / சோசலிசப் பெண்ணியம்: உரையாடல் புள்ளிகள்

**அ. மங்கை**

பெண்ணியம் குறித்துப் பாடடத்திட்டங்கள், தன்னார்வக் குழுக்கள், சமூகச் செயல்பாட்டாளர்கள் ஆகியவை சிலும்பல் இல்லாத தனித்தனி கட்டங்களாக முதலாம், இரண்டாம், மூன்றாம் அலைகளாகக் காண்கின்றன. சம வாய்ப்பு, சம உரிமை, தனித்துவ அடையாளம் என இந்த மிதவாத, சமூகவியல், தீவிரவாதப் பெண்ணியம் என்று கட்டங்கள் கட்டிப் படிப்பிக்கின்றன. இவற்றில் பொதுவாக விடுபட்டுப் போவது மார்க்சீய / சோசலிசப் பெண்ணியக் கொள்கைகளும் வரலாறும். அதற்கு நிலவும் இடதுசாரிச் சிந்தனை மீதான ஒவ்வாமைதான் முக்கியக் காரணம். இடதுசாரிச் சிந்தனையை முன்வைக்கும் குழுக்களிலும் பெண்ணிய ஒவ்வாமை ஆழமாக இருக்கத்தான் செய்கிறது. அதனைப் பிரிவினைவாதம், முதலாளித்துவ, பூர்ஷ்வா பாஷன் என்று கருதும் தன்மை பல தோழமைச் சக்திகளிடம் நிலவுகிறது. இந்தச் சிக்கல்கள் நிசம்; ஆனால், இவ்விரு முகாம்களிடையே உரையாடல் நிகழ்த்தாமல் இருப்பது அதைவிடச் சிக்கல்.

மார்க்சீயப் பெண்ணியம் பிற ஒடுக்குமுறைகள் போலவே வர்க்கப் போராட்டம் நிகழ்ந்தால், பெண்விடுதலை தானாகவே

முகிழ்க்கும் என்று ஆரூடம் சொல்கிறது. முதலாளித்துவத்தை முக்கிய எதிரியாகக் காண்கிறது. சோஷலிசப் பெண்ணியம். வர்க்க முரண்கள் போலவே பாலின முரண்களும் முக்கியம்; முதலாளித்துவம், தந்தைமை ஆதிக்கம் இரண்டையும் எதிர்கொள்வது ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என வாதிடுகிறது. மார்க்சீயக் கல்வி தரும் இயங்கியல் பாலினம், சாதி, மதம், இனம், நிறம், பாலீர்ப்பு, மாற்றுத்திறன்கள் போன்ற சமூக / உளவியல்/ பண்பாட்டு ஏற்றத்தாழ்வுகளையும் கணக்கில் எடுக்கக் கற்றுத் தருகிறது. இதில் ஏதேனும் ஒன்றை மட்டும் தனியாகக் காணும்போது அடிப்படை சனநாயகத் தன்மை விடுபட்டுப் போகிறது. அதன் வெளிப்பாடுதான், இடதுசாரிகள் மத்தியில் பெண் தோழர்கள் குறித்த பதிவுகள், பேச்சுக்கள் மிகக் குறைவாக இருப்பது. பிறப்பால் வரும் எல்லா மதிப்புகள் போலவே, ஆண் தோழர்கள் தமது ‘ஆண்’ என்ற மிதப்பை இறக்கி வைப்பதும், பெண் தோழர்கள் ‘என்ன இருந்தாலும் நான் பெண்தானே’ என்ற தன்னம்பிக்கைக் குறைவைப் புறம் தள்ளுவதும் மிக முக்கியமான பயிற்சியாக இருக்க வேண்டி இருக்கிறது.

மார்க்சீய/ சோஷலிசப் பெண்ணிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மையப் பகுதி முக்கியம் பெறுகிறது. **எலினார் மார்க்ஸ் (1855 - 1898), கிளாரா ஜெட்கின் (1857 - 1933), ரோசா லக்சம்பெர்க் (1871 - 1919), அலெக்ஸாண்ட்ரா கொலந்தாய் (1872 - 1952)** ஆகியோரைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். நால்வரும் அமைப்புகளில் இணைந்து பணியாற்றியவர்கள். கொலந்தாய் பிரபுத்துவக் குடும்பப் பின்னணி கொண்டவர்; ரோஸா புலம்பெயர்ந்து வாழ்ந்த யூதரும் மாற்றுத்திறனாளியும் ஆவார்.

காரல் மார்க்ஸ் - ஜென்னியின் காதல் பற்றிப் பேசும் அளவு நாம் ஜென்னியின் அரசியல் ஈடுபாடு பற்றிச் சொல்வதில்லை. மார்க்ஸின் செயலராக இருந்தார் என்பதுடன் நிறுத்தி விடுகிறோம். **ஏங்கெல்ஸ் - மேரி பர்ன்ஸ்** இருவரும் திருமணம் என்ற நிறுவனத்தின் மீது கொண்ட விமரிசனம் காரணமாக நீண்டகாலம் இணைந்து வாழ்ந்தனர்; அவரது மறைவுக்குப் பின் ஏங்கெல்ஸ், மேரியின் இளைய சகோதரியுடன் வாழ்ந்தார். இது போல நாம் ஒவ்வொருவர் தனிவாழ்வு பற்றியும்

பலவற்றைப் பேசலாம். ஆனால், பொதுவாக ஆண் தோழர்கள் பற்றிய இத்தகு தகவல்கள் கூடுதல் விவரங்களாக மட்டுமே கருதப்படுகின்றன. அவர்கள் வாழ்வின் நெளிவுசுளிவுகள் அவர்களது பணி, கருத்துக்களில் தாக்கம் செலுத்துவதாக நாம் நினைப்பதில்லை. ஆனால், எலினார் மார்க்ஸ் தனது இணையர் ஏவ்லிங் வேறு பெண்ணுடன் இரகசிய உறவு வைத்திருந்ததை அறிந்ததும் விஷமருந்தி மாண்டார். கொலந்தாய், குடும்பத்தார் கட்டாயப்படுத்தி செல்வம் மட்டுமே கருதி மணம் முடிக்கக் கூடும் என அஞ்சி, தனது உறவினரான இளைஞரை மணம் முடித்தார். ஐந்தே ஆண்டுகளில் மணமுறிவு பெற்றார். அவருக்கு இருந்த அழகு, கவர்ச்சி, ஆண் நட்புகள், காதல், பாலுறவு பற்றிய கருத்துக்கள் காரணமாக எப்போதும் விமரிசனங்களுக்கு ஆளானார். ரோசா, புரட்சியாளர் லியோ ஜோகிசெஸ் உடன் நீண்டகாலக் காதல் உறவும், கோஸ்ஜா ஜெட்கின், பால் லெவி ஆகியோருடன் பாலியல்சார் நட்பும் கொண்டிருந்தார். கிளாரா ஜெட்கின் லெனினுடன் நடத்திய உரையாடல்கள் நமக்கு இப்போது கிடைக்கின்றன. அவர் மணவாழ்வில் தொடர்ந்து இருந்தார்; ஆயினும் விடுதலைக் காதல் குறித்து தொடர்ந்து விவாதித்தார். கிளாரா தவிர பிறர் குறித்த பகிர்வில் அவர்களது தனிவாழ்வு கட்டாயம் இடம்பெறுவதைக் காண்கிறோம். பெண்ணியம் முன்வைக்கும் **'தனிவாழ்வும் அரசியலே'** என்ற முழக்கத்தை இந்த மார்க்சீய/சோசலிசப் பெண்ணியவாத முன்னோடிகள் முன்வைக்கவில்லை என்றாலும், அவர்கள் வாழ்வு அதற்கான சாட்சிகளாகத் திகழ்கின்றன.

அலெக்ஸாண்ட்ரா கொலந்தாய் தோழர் லெனின் அமைத்த முதல் சோசலிசக் குடியரசில் அமைச்சராகப் பணியாற்றியவர். பிறகும் தோழர் ஸ்டாலின் ஆட்சியில் வெளியுறவுத் தூதராக நார்வேயில் பணியாற்றியவர். இயக்கம், அரசாங்கம் ஆகிய இரண்டிலும் பங்கேற்ற கொலந்தாய் குறித்த முதல் அறிமுகம் தோழர் மைதிலி சிவராமன் மூலம் கிடைத்தது. (நான் அமைப்பிற்குள் செயல்பட்ட குறுகிய காலத்தில் வேறெந்த வகுப்புகளிலும் கொலந்தாய் பெயர் உச்சரிக்கப்படாதது வியப்பல்ல!) பின்பு, ஆசிரியராகக் கல்லூரியில் பெண்ணியம் குறித்த வகுப்புகள் நடத்த வாய்ப்பு கிடைத்த போது, பாடதிட்டத்தில் சோசலிசப் பெண்ணியத்தைச் சேர்ப்பதில் இருந்த சிரமங்களை அனுபவித்தேன். இந்த நூற்றாண்டின் முதல் பத்து ஆண்டுகளில்

வ.கீதாவுடன் இணைந்து நாடகங்கள் செய்த சமயம் பெண்கள் சந்திப்பு என்ற விரிந்த, திறந்த குழு ஒன்று உருவானது. அதில் கொலந்தாய் பற்றிப் பகிர வாய்ப்புக் கிடைத்தது. குடும்பம் பற்றிய அவரது கட்டுரை ஏற்கனவே வெளிவந்து இருந்தது. வ. கீதாவின் மொழிபெயர்ப்பில் ஷீலா ரௌபாத்தம் எழுதிய 'அன்புள்ள மார்க்ஸ்' நூலும் இருந்தது. பிறகு ஜெர்மெயின் க்ரியரின் 'பாலற்ற பெண்பால்' (2011) (The Female Eunuch) உள்ளிட்ட பெண்ணிய நூல்களை ராஜ் கௌதமன் மொழிபெயர்த்தார். ரோசா உள்ளிட்ட பலரது எழுத்துக்கள் தமிழாக்கம் செய்யப்பட்டன. கொலந்தாயின் வாழ்க்கை வரலாற்றை 'பாலியல் முதிர்ச்சிமிக்க கம்யூனிசப் பெண்ணின் தன்வரலாறு' என்ற தலைப்பில் மொழியாக்கம் செய்து என்.சி.பி.எச் மூலம் வெளியிட வாய்ப்புக் கிடைத்தது (2019). தற்போது கிட்டத்தட்ட கொலந்தாயின் எல்லாக் கட்டுரைகளையும் தோழர்கள் வெண்ணிலா, சாரதா மொழிபெயர்ப்பில் தமிழில் சிந்தன் பதிப்பகம் 'உழைக்கும் பெண்களுக்கு' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது (2025). இருந்தும் கொலாந்தாய் கிளப்பிய விவாதங்கள் இன்றளவும் அழுத்தம் பெறாமல்தான் இருக்கின்றன.

பெண்களின் இரட்டைச் சுமை, மதிப்பற்ற வீட்டு உழைப்பு ஆகியவற்றை வர்க்க மற்றும் பாலினக் கட்டமைப்பின் பகுதியாக முன்வைத்த சோசலிசப் பெண்ணியம் மார்க்சீயப் பார்வையில் ஆழ்ந்த பரிசீலனையைக் கோருகிறது. வீட்டு உழைப்பு பற்றிய லெனின் கருத்துக்கள் கவித்துவமானவை. 'நச்சுப் பிடித்த' வீட்டு வேலை இயந்திரத்தனமான சுமையை பெண்கள் மீது திணிக்கிறது. கொலந்தாய் அமைச்சர் என்ற முறையில் அதனை எதிர்கொள்ள பொது உணவகம், சமையலறை, குழந்தைகள் காப்பகம், சலவையகம் ஆகியவற்றை 1919 லேயே கட்சித்திட்டத்தில் கொண்டுவந்தார். போரில் பங்கேற்ற பெண்கள் திரும்பி வந்ததும் அடுக்களைப் பணியில் மூழ்கி விடாமல் இருக்க வேண்டும் என்பது பற்றி அக்கறையுடன் திட்டமிட்டார்.

**தாய்மை குறித்த கொலந்தாயின் விரிவான கட்டுரைகள் தாய்மையின் சமூகப் பங்களிப்பு, வேலைச் சுமை, தாய்சேய் நலத்திட்டங்கள் ஆகியவற்றைப் பேசின.** அத்துடன் கூடவே தேவையற்ற கருவைக் கலைப்பதற்கான சட்டரீதியான அனுமதி, மருத்துவ வசதி பற்றி உலகில் முதன்முதல் பேசியது சோவியத்

அரசுதான். அதற்கு முன்னணியில் இருந்து வழி நடத்தியது கொலந்தாய்தான். இன்றுவரை பல முதலாளித்துவ நாடுகளில் மருத்துவரீதியான கருக்கலைப்பு மத நம்பிக்கை சார்ந்த சிக்கலாகக் கருதப்படுகிறது.

பாலியல் தொழில் குறித்த பார்வையிலும் கொலந்தாய் ஒழுக்கவரையறைகளைக் குறித்துப் பேசுவதில்லை. சமூக உழைப்பை மறுக்கும் வணிகமாக அதனைக் கண்டார். அதேபோலத்தான் வீட்டுமனைவியாக வாழும் 'குடும்பப் பெண்களும்' தமது சமூக உழைப்பை மறுதலிப்பதாக வாதிட்டார். இன்றுவரை வர்க்க மேலாதிக்கம் பெண்களின் சமூக உழைப்பை இரண்டாம் பட்சமாகப் பார்க்கிறது. பெண்களும் தம்மைக் 'கண்கலங்காமல், வீட்டுவாசலைத் தாண்டாமல் பராமரிக்கும்' வாழ்க்கைதான் சீரிய வாழ்க்கை என நம்புகிறார்கள். பெண்களின் வீட்டு உழைப்பை மதிப்பு வாய்ந்ததாக அணுகும் போக்கு நம்மில் பலருக்கு இருப்பதில்லை. ஒரு புறம், ஆண்கள் சமையல், வீட்டுச் சுத்திகரிப்பு, சலவை, குழந்தைகள், வயோதிகர் பேணுதல் உள்ளிட்ட பணிகளை ஏற்றுச் செய்தல் பெண்ணிய அணுகுமுறையில் இன்றியமையாத அடிப்படை ஆகிறது. அத்துடன், இந்தப் பணிகளை மதிப்புடன் அணுகுவதும் முக்கியமாகிறது.

**காதல், பாலுறவு ஆகியவற்றில் கம்யூனிச அறம் என்பதைக் கற்றல் அவசியம் என்பதை ஜெட்கின் முதல் கொலந்தாய் வரை தொடர்ந்து வலியுறுத்தி வருவதைக் காணமுடிகிறது.** காதல் அடிப்படை மானுட இயல்பு. அதற்கான சமூகத் தளத்தை மறு உற்பத்தியுடன் மட்டும் இணைப்பது இயந்திரகதியிலான பயனாளர் பண்பாடு. அதனைப் பூதாகாரமாக விரித்து புனைவாக்கம் செய்வது நடைமுறைக்கு ஒவ்வாத புனைவுவாதம். எல்லாச் சமூக அமைப்புகள் போலவே இயற்கையும் நிறைவும் விடுதலையும் காதல் உறவுகளில் அமைய வேண்டும். முதலாளித்துவ உலகம் அதனைத் தனிமனித விருப்பு வெறுப்பாகக் கட்டமைத்து 'எனக்குச் சரிப்படவில்லை' என்பதுடன் உரையாடலுக்கு முற்றுப் புள்ளி வைக்கிறது. மாறாக, கம்யூனிசம் அதனையும் இயங்கியல் பூர்வமாக அணுகும் பார்வையைத் தருகிறது.

1923இல் கொலந்தாய் இளைஞர்களுக்கான இதழில் எழுதிய "பாட்டாளி இளைஞர்களே! சிறகுகள் விரிக்கும் ஈராஸ் (விழைவின்பம்) எழுச்சி பெறட்டும்!" (Make Way for Winged Eros: A Letter to Working Youth) என்ற நீண்ட கட்டுரையில் காதல்தோழமை குறித்து விரிவாக பேசுகிறார். (பார்க்க: https://www.marxists.org/archive/kollonta/1923/winged-eros.htm, (தமிழில்: உழைக்கும் பெண்களுக்கு: அலெக்ஸாண்ட்ரா கொலொண்டாய், (மொ.ஆ. வெண்ணிலா, ஜ, இரா. சாரதா), 2025: 459 492). அதன் சில பகுதிகளை இங்கு பகிர்வது பொருத்தமாக அமையும் எனக் கருதுகிறேன். தமிழ் மொழியாக்கத்தை அடியொற்றி சிறு சிறு மாற்றங்களோடு இங்கு வழங்குகிறேன்.

"புதிய கம்யூனிச சமூகம், தோழமை, உடனிருப்பு ஆகிய கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு கட்டமைக்கப்படுவது. உடனிருத்தல் பொதுநலன்கள் குறித்த ஓர்மை மட்டுமல்ல: குழுமத்தின் உறுப்பினர்களைப் பிணைக்கும் அறிவு மற்றும் உணர்வு சார் இசைவினைப் பொருத்தது. கூட்டுறவு, உடனிருப்பு மூலம் ஒரு சமூக அமைப்பைக் கட்டமைக்க, மக்களுக்குள் காதல் உள்ளிட்ட மென்மன உனர்வுகளுடன் இயங்க வேண்டிய தேவை உள்ளது. பாட்டாளி வர்க்கக் கொள்கை என்பது பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினரையும் உடன்வாழ் மனிதர்களின் தேவைகளையும் துயரங்களையும் உணர்ந்து அவற்றை ஆற்றும் திறன் மிக்கவர்களாக ஆக்கும் பயிற்சியைத் தருகிறது; சக மனிதர் குறித்து நுட்பமாகப் புரிந்து கொள்ளத் தூண்டுகிறது; கூட்டுசமூகத்தில் தனிமனிதர் வகிபாகம் குறித்து நுட்பத்துடன் புரிந்துகொள்ளக் கற்பிக்கிறது. இத்தகு 'மென் உணர்வுகள்' - உணர்வறிதல், கருணை, பரிவு, உரியனசெய்தல் - அனைத்தின் மூலமும் ஒன்றுதான். அதுதான் காதல். இவையனைத்தும் காதலின் பன்முகக் கூறுகள். பாலுறவு சார்ந்த குறுகிய பொருளில் அல்ல. காதல் என்ற சொல்லின் விரிந்து பரந்த பொருளில் சொல்கிறேன். காதல் ஒன்றிணைப்பது; எனவே காதல் அமைப்பாக்கும் பண்பைத் தன்னுள் கொண்டுள்ளது.

... பாட்டாளி வர்க்கத்தின் காதல் இலக்கணம் என்ன? காலத்துக்குக் காலம் இலட்சியக் காதல் மாறிவந்துள்ளதை நாம் ஏற்கனவே கண்டோம். ஒவ்வொரு வர்க்கமும் தமது

நலனுக்கேற்ப காதல் சார்ந்த ஒழுக்க வரையறைகளை வகுத்துக் கொள்ள முனைகிறது. ...

காதலின் தற்போதைய வடிவம் உடலும் உள்ளமும் கடும் சிக்கலான நிலையில் ஆழ்வதாக அமைகிறது... காதல் உணர்வு நட்பு, பேரெழுச்சி, தாய்மையின் மென்மை, மோகம், பொருத்தம், பரிவு, பாராட்டுதல், அறிமுகம் போன்ற பலவித உணர்வுச் சாயல்களைக் கொண்டிருக்கலாம். ...

நாம் காதலில் உல்ள எதிர்வுகளைப் பற்றி பேசுகிறோம்; ‘சிறகுகள் விரிக்கும் விழைவின்பத்தின்’ பல இழைகள் பின்னிப் பிணையும் சிக்கல்கள் பற்றிச் சொல்கிறோம். இதனைச் ‘சிறகுகளற்ற விழைவுணர்வோடு’ குழப்பிக் கொள்ளக் கூடாது. அத்தகைய நிலைபாட்டில் ஒரு ஆண் பல பெண்களுடன் அல்லது ஒரு பெண் பல ஆண்களுடன் பாலுறவு கொள்கிறார்கள். உள்ளார்ந்த உறவுகள் இல்லாமல் கொள்ளும் உறவுகள் கெடுவாய்ப்பாகவும் தீமைபயப்பனவாகவும் உருவெடுக்கக் கூடும்.

புதிய, கூட்டுச்சமூகத்தில் மகிழ்ச்சி, ஒற்றுமை, தோழமை மிக்க சூழலில் உருவாகும் உறவுகள் விழைவின்பத்திற்கு மதிப்பார்ந்த இடம் கிடைக்கும். அது உணர்வுபூர்வ அனுபவமாக மனித இருப்பின் மகிழ்ச்சியை பன்மடங்காகப் பெருக்கும். மாற்றங்கள் கொண்ட இத்தகு விழைவின்பம் எப்படி இருக்கும்? எத்தனை துணிச்சலாக கற்பனை செய்தாலும் இதற்கான பதில் புலப்படாது. ஆனால் ஒன்று மட்டும் உறுதி: புதிய மானுடத்தின் அறிவு, உணர்வுப் பிணைப்புகள் வலுப்பெற வலுப்பெற இன்றைக்கு நாம் புரிந்து கொண்டுள்ள காதல் என்ற சொல்லின் பொருளுக்கு அங்கு இடம் இருக்காது.

கண்மூடித்தனமான, அனைத்தையும் ஆக்கிரமிக்கும், அரித்துக் கொல்லும் ஆர்வங்கள் வலுவிழக்கும்; தம் இணையரைச் சொத்தாகக் கருதி ‘என்றென்றைக்குமான’ தளைகளில் மாட்டும் சுயநலம், ஆணின் மெத்தனம் மிக்க சுயதிருப்தி, பெண்ணின் தன்னலம் பேணல் இழப்பு ஆகியன மறையும். காதலின் மதிப்புமிக்க கூறுகளும் பண்புகளும் கூடும். இணையரின் ஆளுமையை மதித்தல், ஒருவருக்கொருவர் உணர்வறிவுடன் பழகுதல் ஆகியவை பயிலப்படும். ஆண் - பெண் தம்

காதலை முத்தங்கள் அணைப்புகளில் மட்டுமின்றி, இருவரின் படைப்பாற்றல், செயலூக்கம் ஆகியவை மூலம் வெளிப்படுத்திக் கொள்ள முயல்வர். பாட்டாளி வர்க்கக் கொள்கை முன்வைக்கும் கடமை சமூக வாழ்வில் இருந்து விழைவின்பத்தை விரட்டுவது அல்ல; புதிய சமூக உருவாக்கத்திற்கேற்ப காதலைச் செதுக்குவதில் உள்ளது. பாலியல் உறவுகளை சிறப்பான தோழமை உடனிருப்பின் புதிய உளவியல் ஆற்றலின் புரிதலுடன் பயிற்றுவிப்பதில் தங்கியுள்ளது''.

இந்த விரிவான மேற்கோள் விடுதலைக் காதல் குறித்த உரையாடலில் நம் மத்தியில் பீறிட்டு எழும் மனத்தடைகள், அய்யம், பொதுவாழ்வின் அக்கறைகளைக் குறைத்துவிடும் என்ற அச்சம், பெண்ணியம் பேசும் தனிவாழ்வு அரசியல் பற்றிய உரையாடல்களைத் தவிர்த்தல் ஆகிய பலவற்றுக்கு முகம் கொடுக்கும் முயற்சி.

**வர்க்க அரசியலில் பெண்ணியச் சிந்தனைகளும், பெண்ணிய அரசியலில் வர்க்க நோக்கும் இல்லாமல் மானுடம் பேணும் கம்யூனிச அறம் தழைக்க வாய்ப்பில்லை.** அதற்கு அமைப்புகளில் தம் பங்களிப்பை வழங்கி, தமக்கான களங்களுக்காக துவந்த போராட்டங்களை அயராமல் மேற்கொண்ட மார்க்சீய / சோஷலிசப் பெண்ணியவாதிகள் நமது ஓர்மையில் ஆழமாகப் பதிய வேண்டும். பெண்கள்/ பெண்ணியம் முன்வைக்கும் வாதங்களைச் செவிமடுக்கும் அரிய தோழமை வாய்க்க வேண்டும். பொது முரண்பாடுகள் பல இருக்க, நம்முடன் நிற்பவர்களிடம் காழ்ப்பும் கசப்பும் வளர்த்தல் நியாயமன்று. நாம் காணும் கனவு சோஷலிச/ கம்யூனிச உலகம் எனில், அதில் காதலுடன் இணைந்து செயல் படுவோம்!

♦♦♦

★ கட்டுரையாளர்
பெண்ணிய மற்றும் நாடகச் செயல்பாட்டாளர்

# ஊடகமும் பெண்களும்

**கவின் மலர்**

**ஊ**டகங்கள் எப்போதுமே சமூகத்தைப் பிரதிபலிப்பவை. சமூகம் எவ்வாறிருக்கிறதோ அப்படியே அவையும். அந்த வகையில் சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகள், ஆணாதிக்கம், சாதிவெறி, மதவெறி என அனைத்தும் ஊடகங்களிலும் இருப்பதைக் காணலாம். ஊடகம் மட்டுமல்ல, எந்தத் துறையும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஊடகங்கள் பெண்களைச் சித்தரிக்கும் விதம் பற்றி நிறையப் பேசப்பட்டாயிற்று. எப்பொழுதுமே பெண்கள் நுகர்வுப் பொருளாகவும் நகைச்சுவைக்குரியவர்களாகவும் சித்தரிக்கப்படுவதைத் தொடர்ந்துக் காண்கிறோம். அச்சு ஊடகம், காட்சி ஊடகம், டிஜிட்டல் ஊடகம் என எதுவும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

ஏன் பெண்கள் பற்றிய சித்தரிப்பு தொடர்ந்து இவ்வாறிருக்கிறது? எங்கே தலித்துகளின் பங்களிப்பு மிக குறைவாக இருக்கிறதோ அங்கு தலித்துகள் பற்றிய சித்தரிப்பு சரியானதாக இருக்காது. ஆதிக்க சாதிகளின் பிடியில் உள்ள ஒரு நிறுவனத்தில் இருந்து வெளிவரும் ஓர் இதழில் முற்றிலும் அந்தச் சாதியை சேர்ந்தவர்கள் மட்டுமே பணியாற்றுகிறார்கள் என்று வைத்துக் கொண்டால், தலித்துகள் பற்றி அவர்களில் பெரும்பாலானோரின் பார்வை என்னவோ அதுவே வெளிப்படும்

அல்லவா? அதுபோலவே முற்றிலும் ஆண்கள் நிறைந்த அல்லது பெரும்பான்மை ஆண்கள் மட்டுமே பணியாற்றும் ஒரு நிறுவனத்தில் இருந்து வெளிவரும் ஒரு செய்தித்தாளோ இதழோ அல்லது காட்சி ஊடகமோ ஆணாதிக்கத்தன்மையில்தான் வெளிப்படும்.

இன்றைக்கும் திரைக்கலைஞர்களாகிய பெண்கள் பற்றி எழுதுகையில் ஆணாதிக்கப் பார்வையில் எழுதுவதும் அவர்களுடைய அழகை வர்ணிக்கிறேன் எனும் போர்வையில் கேவலமாக ஆபாசமாகச் சித்தரிப்பதும் தொடர்கிறது. பெருகிவரும் கூறுணர்வு காரணமாக ஒப்பீட்டளவில் இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட இது குறைந்துள்ளது.

நான் ஊடகத்தில் பணியாற்ற வந்த காலத்திலும் ஓரிரண்டு பெண்கள் மட்டுமே ஆசிரியர் குழுவில் இடம் பெற்றிருந்தோம். ஆகவே பல்வேறு சமயங்களில் எங்களுடைய கருத்துக்கள் எடுபடாமல் போயிருக்கின்றன. குழுவில் பெரும்பான்மையாக ஆண்கள் இருந்ததே காரணம். ஒரு திரைப்பட விமர்சனம் எழுதுகிறோம் என்றால் குழுவில் அனைவரும் திரைப்படம் குறித்து எழுதி மதிப்பெண்களையும் தருவோம். இயக்கம், திரைக்கதை, கதை, பாடல்கள், இசை என எல்லாவற்றிலும் மிகச் சிறப்பாகத் திரைப்படம் இருந்தாலும் ஆணாதிக்கத்தோடு பெண்களைக் கேலிக்குள்ளாகும், கேவலப்படுத்தும் வசனங்கள் மிகுந்த திரைப்படம் என்றால் நான் அதற்காகச் சில மதிப்பெண்களைக் குறைத்து அளிப்பதுண்டு. ஆனால் பிறர் அதுகுறித்து எந்த அக்கறையுமற்று அதைப் பற்றி ஒரு சொல்லும் எழுதாமல் இருக்கும்போது, இந்தத் திரைப்படத்தில் இப்படி ஒரு பிரச்சனை இருக்கிறதே இது உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா என்று கேட்கும்பொழுது பெண்களின் பக்கம் நின்று பேச ஒருவர்கூட இல்லாமல் இருப்பது எவ்வளவு பெரிய துயரம்! சில நேரங்களில் உடன் பணியாற்றும் பெண்கள் பணியில் இருந்து விலகிச் சென்றபோது நான் மட்டுமே ஒரே ஒரு பெண்ணாக ஆசிரியர் குழுவில் இருந்த காலமும் உண்டு அப்பொழுதெல்லாம் உடன் வாதாடுவதற்குப் பெண்கள் இல்லையே என்று நான் வருந்தி இருக்கிறேன். ஆசிரியர் குழுவில் பெண்களின் சதவீதம் கூடி இருந்திருந்தால் என் கருத்தும் கணக்கில் எடுக்கப்பட்டிருக்கும்; கருத்துக்களுக்கும் மதிப்பளிக்கப்பட்டிருக்கும் பெண்கள் அதிக அளவில் ஊடகத்

துறைக்குள் வருவது என்பது மிகவும் முக்கியமானது அப்படி நுழைந்து அந்த வெளியைக் கைப்பற்றினால் மட்டுமே பெண்களைக் கீழ்த்தரமாக ஆபாசமாக ஒரு நுகர்வுப் பொருளாகச் சித்தரிப்பது குறையும். எங்கே பங்களிப்பு இல்லையோ அங்கே பெண்கள் மீதான தாக்குதல்கள் மிகவும் எளிது. இதுவே என் அனுபவத்தில் நான் கண்ட உண்மை

மூத்த ஊடகவியலாளர் ஜெயராணி அவர்கள் ஒரு மேடையில் பேசியபோது இவ்வாறு குறிப்பிட்டார்

“நான் ஓர் அச்சு ஊடகத்தில் பணியாற்றியபோது காஞ்சிபுரம் அருகே ஒரு தலித் ஊராட்சி மன்றத் தலைவருக்கு ஆதிக்க சாதியினர் விடுத்த கொலை மிரட்டல் குறித்து எழுதி, ஆதிக்க சாதிகள் அவரை எவ்வாறு பணிய வைக்க முயல்கின்றன என்று அம்பலப்படுத்த எண்ணினேன். அந்தச் செய்திக் கட்டுரையை எழுதி நிறுவனத்திடம் அளித்தேன். ஆனால் என்னுடைய கட்டுரை ஏற்கப்படவில்லை. ’நீ எதற்காக இதை எழுத நினைக்கிறாய்? உனக்குப் பணிக்கப்பட்டது போல சமையல் குறிப்புகளையும் இதர கட்டுரைகளையும் எழுதாமல் ஏன் இதை எழுத வேண்டும் என்று நினைக்கிறாய்’ என்று சொல்லி கட்டுரை கிடப்பில் போடப்பட்டது. சில நாட்களுக்குப் பின்னர், அவர் கொலை செய்யப்பட்டார் எனச் செய்தி வந்தது. ஒரு மாலை நாளிதழின் வால் போஸ்டரில் இச்செய்தியை பார்த்தபோது அதிர்ந்து போனேன். ஒருவேளை இதை நான் எழுதி இருந்தால் விஷயம் பத்திரிகைகளில் வந்துவிட்டது என்பதால் அவருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கக்கூடும்; இந்தக் கொலை நடக்காமல் இருந்திருக்குமோ என எண்ணி வருத்தப்பட்டேன். என்னை அதிகம் பாதித்த சம்பவம் இது” என்றார் ஜெயராணி. அந்த உரையை கேட்டுக் கொண்டிருந்த என்னால் கட்டுப்படுத்த இயலாமல் அவருடைய கைகளைப் பற்றிக்கொண்டு கண்ணீர் விட்டேன்.

ஜெயராணிக்கு மறுக்கப்பட்ட வாய்ப்பு ஒரு வேளை வழங்கப்பட்டிருந்தால் வரலாறு மாறியிருக்கக்கூடும். இன்றைக்கு ஊராட்சி மன்றத் தலைவராக சிறப்பாக அந்த தலித் பெண் செயல்பட்டிருக்கக்கூடும். பெண்களுக்கு மறுக்கப்பட்ட வாய்ப்புகள்தான் எத்தனை! அதனால் பறிபோன உயிர்களும் எத்தனை!

“பெண்களும் ஊடகங்களும்” என்கிற தலைப்பில் பல கல்லூரிகளில் மாணவர்களிடையே உரையாற்றி இருக்கிறேன் அப்பொழுதெல்லாம் தவறாமல் குறிப்பிடும் சம்பவம் இது. திராவகம் வீசி முகம் சிதைக்கப்பட்டு கொல்லப்பட்ட வினோதினியை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. மிகப்பெரும் தாக்கத்தை அவருடைய மரணம் உருவாக்கி இருந்தது. எல்லா நாளிதழ்களிலும் எல்லாச் செய்தி ஊடகங்களிலும் அது குறித்த செய்திகள் வெளிவந்தன. அப்போது நான் ஒரு பத்திரிக்கையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன் அதில் மூன்று பக்க செய்தி வெளிவந்தது. ஒரு பக்கத்தில் வினோதினியின் புகைப்படம் மட்டும் பெரிதாக ஒரு முழு பக்க அளவில் வெளியிடப்பட்டது இரண்டு பக்கங்களுக்கு அச்செய்தி குறித்த கட்டுரை வெளியானது. உண்மையில் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து கட்டுரை வெளி யிடப்பட்டிருக்கிறது. அது போலவே வினோதினியின் இறப்பை ஒட்டி அவருக்கு நடந்த இறுதி நிகழ்வில் ஏராளமானோர் பங்கேற்றனர். ஏறத்தாழ அனைத்து அமைப்புகளில் இருந்தும் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்த வந்திருந்தனர். சென்னை மாநகரம் முழுவதும் பல்வேறு இயக்கங்கள் சார்பில் கண்ணீர் அஞ்சலிச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இருந்தன.

அதன் பின், சரியாய் ஒரு மாதம் கழித்து வித்யா என்றொரு பெண். சென்னை ஆதம்பாக்கத்தை சேர்ந்தவர். வினோதினி என்ன காரணத்திற்காக கொல்லப்பட்டாரோ அதே காரணத்திற்காகக் கொல்லப்பட்ட பெண். தன்னைக் காதலிக்கவில்லை என்பதற்காக திராவகத்தை அவள் முகத்தில் வீசினான் ஒருவன். முகம் சிதைந்து வினோதினியைப் போலவே மருத்துவமனையில் உயிருக்குப் போராடினாள் வித்யா. சில நாட்கள் போராட்டத்திற்கு பிறகு அவளும் மரணத்தைத் தழுவினாள். ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அவளுடைய உடல் ஒப்படைக்கப்பட்டபோது அப்போதிய சேவ் தமிழ் இயக்கத்தைச் சேர்ந்த சிலர், அனைத்து இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தைச் சேர்ந்த சிலர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த சிலர், ஓரிரு சமூக செயற்பாட்டாளர்கள் என்று ஒரு சிலர் மட்டுமே அங்கு கூடி இருந்தோம் அதன்பின் ஆதம்பாக்கத்தில் உள்ள வித்யாவின் வீட்டில் அவருடைய இறுதி நிகழ்வு நடைபெற்றபோது அப்பொழுதும் இதே அமைப்புகளை சேர்ந்தவர்கள் மட்டும் அங்கு அவருக்கு அஞ்சலி செலுத்த

வந்திருந்தனர் வினோதினிக்காக எழுந்த குரல்களோ அல்லது ஒட்டப்பட்ட கண்ணீர் அஞ்சலி சுவரொட்டிகளை போல மிகப் பெரும் அளவில் சென்னை மாநகரத்தில் வித்யாவிற்காக ஒட்டப்பட்டுப் பார்க்கவில்லை இறுதி நிகழ்விற்கு முனைவர் தொல்.திருமாவளவன் அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் சிலர், சமூகப் பண்பாட்டு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் என்று ஒரு சிறிய கூட்டமே அன்றைக்குக் கூடியது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. ஏன் வினோதினிக்காக கூடிய அந்தக் கூட்டம் வித்யாவிற்காக கூடவில்லை? காரணம் இருந்தது. வித்யா குறித்த திராவக வீச்சு செய்தி வெளிவந்த அன்று அவர் தலித் என்றும் செய்தித்தாள்களில் செய்தி வெளியாகிவிட்டது. இன்று வரை வினோதினி என்ன சாதி என்று தெரியாது வித்யா தலித் என்கிற செய்தி வெளிவந்துவிட்டதால் இயல்பாகவே நம் பொதுச் சமூகம் இந்த விஷயத்தை விடுதலைச் சிறுத்தைகள் பார்த்துக் கொள்வார்கள் அல்லது சமூகச் செயற்பாட்டாளர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்று ஒதுங்கி விட்டது சமூகத்தின் மனநிலை இப்படி என்றால் ஊடகங்களின் மனநிலையும் அப்படித்தானே இருக்கும்?

நான் பணியாற்றிய அதே இதழில் வினோதினி குறித்த செய்தி வெளிவந்தது. சின்னதாகச் செய்தி வெளியிட்டு இருந்தார்கள். வித்யாவின் ஒரு பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் வெளியிடப்பட்டிருந்தது. ‘‘வினோதினிக்காக மூன்று பக்க அளவில் கட்டுரையாகப் போட்டிருந்த நீங்கள் ஏன் வித்யாவிற்கு மட்டும் எவ்வளவு சிறியதாக செய்தி போடுகிறீர்கள்’’ என்று கேட்டபோது வடிவமைப்பாளரிடமிருந்து வந்த காரணம் ’’வினோதினி போட்டோவைப் பாருங்க. அழகாக இருக்கு. முழு பக்கத்திற்கு போட்டோ வைத்தால் தாங்கும். வித்யா அவ்வளவு அழகு கிடையாது. முழு பக்கத்துக்குத் தாங்காது’’ என பதில் கிடைத்தது. எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஒரே போல கொலை செய்யப்பட்ட இரண்டு பெண்கள் குறித்த செய்திகளில்தான் எத்தனை பாகுபாடு! இப்படித்தான் நம் ஊடகங்கள் இயங்குகின்றன. இப்படிப்பட்டவர்களோடுதான் நானும் பணியாற்றி வந்திருக்கிறேன் என்கிற உண்மை முகத்தில் அறைந்தது. ஆக ஒரு பெண் கொலை செய்யப்பட்டால் என்றால் ஊடகங்களில் அவள் தனக்குரிய இடத்தைப் பெறுவதற்கு அவள் அழகாகவும் இருந்து தொலைக்க வேண்டியுள்ளது. இப்படித்தான்

இந்த ஊடகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன எனும்பொழுது எங்கிருந்து பாலின சமத்துவம் வரும்?

இது ஒரு புறம் என்றால், அரசியல் கட்டுரைகளை எழுதும், சமூக அவலங்களை அம்பலப்படுத்தும் பெண் பத்திரிகையாளர்களுக்கு நிகழ்த்தப்படும் கொடூரங்கள் அதிகம். டெல்லியைச் சேர்ந்த நேஹா தீட்சித் என்கிற பெண் பத்திரிகையாளர் ஆர்.எஸ்.எஸ் எப்படி சிறார்களைக் கடத்திக் கொண்டு போய் தங்களுடைய கருத்துகளுக்கு அடிமையாக மூளைச்சலவை செய்து மாற்றுகிறது என்பதை ஆதாரங்களோடு விளக்கும் மிக நீண்ட கட்டுரை ஒன்றை 'அவுட் லுக்' இதழில் எழுதினார். அவரைக் குறி வைத்து இணையத் தாக்குதல்கள் தொடங்கின. அவர் வீடும் தாக்கப்பட்டது. அவர் தன் கணவரோடு எடுத்துக் கொண்டு அவரே வெளியிட்ட புகைப்படத்தை எடுத்துச் சங்கிகள் அவரை மிகக் கேவலமான வார்த்தைகளால் இகழ்ந்தனர். யாரோ ஒருவரோடு அவர் நெருக்கமாக இருப்பதாகக் குணக்கொலை செய்தனர். அந்த யாரோ ஒருவர் "முசாஃபர்நகர் பாகி ஹை" என்கிற ஆவணப் படத்தை எடுத்த நேஹாவின் கணவர் நகுல் சிங்தான். (இஸ்லாமியர்களுக்கு முசாஃபர்நகரில் நிகழ்த்தப்பட்ட கொடூரங்களைப் பற்றிய ஆவணப்படம்). உலகிலேயே கணவன் மனைவியை இணைத்துப் பாலியல் அவதூறு பரப்பியவர்கள் சங்கிகளாகத்தான் இருப்பர். ஆக, தங்களுக்கு எதிராக ஒரு பெண் எழுதும்பொழுது அவளுடைய நடத்தையைப் பற்றி மிக மோசமாக சித்தரிப்பது, அவதூறு பரப்புவது எல்லாம் பெண்களுக்கெதிராக பயன்படுத்தப்படும் என்றென்றைக்குமான ஆயுதங்கள். இந்தச் சமூக ஊடகக் காலகட்டத்தில் அது அவர்களுக்கு இன்னும் எளிதாக போய்விட்டது. இத்தகைய தாக்குதலுக்கு அரசியல் கட்டுரைகளை எழுதும் பெண்களே இலக்கு ஆகிறார்கள் வெறும் சமையல் குறிப்புகளையோ லைப் ஸ்டைல் போன்ற விஷயங்களையும் பேஷன் ஆடை ஆபரணங்கள் போன்றவற்றை பற்றி எழுதும்பொழுது பெண்களுக்கு இவ்வாறு நேர்வதில்லை.

மும்பையில் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு பெண் பத்திரிக்கையாளர் புகைப்படக்காரருடன் செய்தி சேகரிக்கச் சென்றபோது கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு ஆளானார். அப்பொழுது நிர்பயா வழக்கில் கேட்டது போலவே சமூகம்

அவரையும் கேள்வி கேட்டது. ''மாலை 6 மணிக்கு மேல் நீ என் வெளியே போனாய்? அது மாதிரியான ஒரு பகுதிக்கு ஏன் சென்றாய்? ஒரு ஆண் புகைப்படக்காரருடன் ஏன் சென்றாய்'''' இப்படி எல்லாம் கேள்விகள் கேட்கப்பட்டன. அது அவருடைய தொழில். பத்திரிக்கையாளரின் தொழில் என்பது 24 மணி நேர வேலை மாலை 6 மணிக்கு மேல் நான் பணியாற்ற மாட்டேன் என்று சொல்ல முடியாத ஒரு வேலை. அந்தக் கொடூரத்தைச் செய்தவர்களை நோக்கி எழும்பாத கேள்வி பெண் பத்திரிக்கையாளரை நோக்கி எழுப்பப்பட்டது

ஜர்னலிசம், மாஸ் கம்யூனிகேஷன், விஷுவல் கம்யூனிகேஷன் இப்படிப் பல படிப்புகளில் இருந்தும் மாணவர்கள் ஆண்டுதோறும் வெளிவருகிறார்கள். எல்லாக் கல்லூரிகளிலும் ஓரளவுக்குச் சம அளவில் ஆண்களும் பெண்களும் பயில்கிறார்கள். ஆனால் படிப்பை முடித்துவிட்டு வெளியே வந்த பெண்கள் துறைகளில் இருக்கிறார்களா என்று தேடிப்பார்த்தால் அவர்களைக் காணவில்லை. ஆனால் அத்தனை ஆண்களும் அந்தத் துறைக்கு வந்து விடுகின்றனர். பெண்கள் எல்லோரும் எங்குதான் செல்கிறார்கள்? திருமணம் செய்துவிட்டு குழந்தை குட்டிகள் பெற்றுக் கொண்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் போய் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார்கள். அல்லது அந்தத் துறைகளிலேயே ஆசிரியர்களாக, பேராசிரியர்களாகச் சென்று விடுகிறார்கள். பெண்களில் பலர் இதழியல் துறைக்கு வருவதில்லை

பெரும்பாலான பெண்கள் வந்தால் மட்டுமே துறையை மாற்ற முடியும். காட்சி ஊடகங்களில் பெண்களுக்குக் கூடுதலான பங்களிப்பு உண்டு. அது சற்றே புதிய துறை என்பதால் பெண்கள் ஒப்பீட்டளவில் அதிகமானோர் பணியாற்றுகிறார்கள். அங்கும் பெண்கள் திரையில் தோன்ற வேண்டுமென்றால் வெள்ளை நிறத்தோடும் அழகாகவும் மெலிந்த தோற்றத்தோடும் இருக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதி. நீங்கள் சற்று கருமை நிறத்தோடோ அல்லது உடல் பருமனானவராகவோ இருந்துவிட்டால் உங்களுக்கான வாய்ப்புகள் கிடைக்காது. இங்கே ஒரு கருப்பான, உடல் பருமனான ஒரு பெண் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவோ, செய்தி வாசிப்பாளராகவோ இருக்கிறார் என்று சொல்ல முடியுமா? ஆனால் ஒரு ஆணால் அப்படி இருக்க முடியும்; அந்தப் பணியைச் செய்ய முடியும். இதுதான் காட்சி ஊடகத்தின் நிலை

**எந்தச் செய்தி வெளிவர வேண்டும், எந்தச் செய்தி வெளிவரக் கூடாது என்பதை எல்லாம் தீர்மானிக்கும் இடத்தில் ஆண்கள் இருக்கும்வரை ஊடகமும் ஆணாதிக்கத்தோடுதான் இருக்கும்.** ஆகவே பெண்கள் அதிகளவில் துறைக்கு வர வேண்டியது அவசியம் ஆகிறது.

இந்த நேரத்தில் ஹோமா வியரவல்லாவை நினைத்துக் கொள்கிறேன். இந்தியாவின் முதல் பெண் போட்டோ ஜர்னலிஸ்ட் அவர். ஜவஹர்லால் நேருவையும் மவுண்ட்பேட்டனையும் அவர் எடுத்த புகைப்படங்கள் உலகப் புகழ் பெற்றவை. வரலாற்றில் நிலைத்து நிற்பவை. அத்தனை ஆண் புகைப்படக்காரர்கள் மத்தியில் ஒற்றைப் பெண்ணாக அவர் தன் கேமராவோடு எல்லாச் செய்தியாளர் சந்திப்புக்கும் வந்து நிற்பது அத்தனை பேரின் கண்களை உறுத்தியது. ஆனால் அவர் எதையும் பொருட்படுத்தவில்லை என்பதால்தான் இன்றைக்கு அவருடைய பெயர் நமக்குத் தெரிந்திருக்கிறது. அழியாப் புகைப்படங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. வித்தியாசமான கோணங்களில் படம் வேண்டும் என்பதற்காக உயரமான இடங்களின்மீது ஏறி நின்று புகைப்படம் எடுத்த அவரை அசூயையோடு பார்த்தவர்கள் ஏராளம். ஒரு முறை ஒரு பத்திரிகையாளர் சந்திப்புக்குச் சேலை அணிந்து வந்தார். ரவிக்கை சற்றே இறுக்கமாக இருந்ததால் கைகளை உயர்த்தி அவரால் படம் எடுக்க முடியாமல் போனது. அப்போது சற்றும் யோசிக்காமல் தன் கைப்பையில் இருந்த கத்திரிக்கோலை எடுத்துத் தன் ரவிக்கையைக் கிழித்து வெட்டிவிட்டுத் தன் பணியைத் தொடர்ந்ததை அங்கிருந்த கூட்டம் வியப்புடன் பார்த்தது. நினைத்தால் இன்றைக்கும் வியப்பாக இருக்கிறது. தனது தொழில் மீது எவ்வளவு ஆர்வமும் உறுதிப்பாடும் இருந்தால் ஒருவரால் அப்படிச் செய்திருக்க முடியும். அப்படியான அர்ப்பணிப்பு உணர்வுள்ள பல பெண்கள் இன்று ஊடகத் துறையில் தேவைப்படுகிறார்கள். அவர்கள் ஊடக உலகிற்குள் நுழையும்பொழுதுதான் பெண்களின் சித்தரிப்பை மாற்ற முடியும்.

♦♦♦

★ கட்டுரையாளர்
ஊடகவியலாளர்

# மகளிரும் அரசமைப்புச் சட்டமும்

சுதா ராமலிங்கம்

தோழர் குறிஞ்சி புதுமலர் மகளிர் சிறப்பிதழுக்காக என்னை எழுதச் சொன்னபொழுது, இந்த வெளியீட்டிற்கு அவர் கடைப்பிடிக்கும் தரநிலை எனக்குத் தெரியும் என்பதால் நான் தயங்கினேன். ஆயினும் என்னை ஊக்குவித்து எழுதிட வைத்துள்ளார். இதில் உள்ள குறைகள் அனைத்தும் எனது, நிறைகள் இருப்பின் அவை அனைத்தும் தோழர் கண.குறிஞ்சி அவர்களுடையது.

புதுமலர் வாசகர்கள் பலரும் சட்டம் படித்தவர்களாகவோ சட்டம் அறிந்தவர்களாகவோ இருப்பீர்கள். இந்திய ஜன நாயகத்தில் அரசியல் சாசனமே அடிப்படைச் சட்டம். இந்திய அரசியல் சாசன நாள் அல்லது இந்திய அரசியலமைப்பு நாள் அல்லது சட்ட தினம் எனப்படும் இந்நாள், ஆண்டுதோறும் நவம்பர் 26 ஆம். நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. நமது குடியரசுத் தலைவர் முதல் அரசாங்கத்தில் வேலை செய்யும் கடை நிலை ஊழியர் வரை எல்லோரும் அன்று நமது அரசியலமைப்பு சாசனத்தின் முகப்புரையைப் படித்து அதன்படி நடப்போம் என்று உறுதி மொழி எடுப்பது வழக்கமாகி விட்டது. நமது நாட்டில் வாக்குறுதிகளுக்குக் குறைவில்லை. இதுவும் அதில் ஒன்று.

சத்தியமேவ ஜயதே / வாய்மையே வெல்லும் என்பது இந்தியாவின் முக்கிய முழக்கம். இதனால் நமது நாடும்

மக்களும் உண்மையை தங்கள் நடவடிக்கைகளிலும் வாழ்விலும் கடைபிடிப்பர்கள் என்றும் தவறினால் அது குற்றமாகும் என்றும் கனவிலும் நினைக்க வேண்டாம். நீதி மன்றங்களிலும் மற்ற அலுவலகங்களிலும் தாக்கல் செய்யும் பிரமாண வாக்குமூலங்களிலேயே உண்மைக்குப் புறம்பான செய்திகள். தவறு என்று தெரிந்தும் கொடுக்கப்படுகின்றன. நமது இந்திய தண்டனைச் சட்டம் (IPC) அதன் புதிய வடிவான பாரதீய நியாய சன்ஹிதா (BNS) என்ற இரு குற்றவியல் சட்டங்களும் தவறான சாட்சியங்களை வழங்குதலையும், தவறான ஆதாரங்களை உருவாக்குதலையும் தண்டனைகுரிய குற்றங்களாக்கி உள்ளன. ஆயினும் நம் பிரதமர் முதல் பல தலைவர்கள் எந்த ஒரு குற்ற உணர்வுமின்றிப் பொய் பேசுவதையும் நம் நீதி மன்றங்கள் அவற்றைக் கண்டுகொள்ளாது தம் கடமையைச் செய்யாது வழுவுவதையும் காண்கிறோம்.

இன்றுவரை, புதிய குற்றவியல் சட்டங்கள் சமஸ்கிருத மொழியில் பெயர் சூட்டப்பட்டு வந்தாலும், பெரும்பாலும் ஆங்கிலேயர்கள் விட்டுச் சென்ற வடிவிலேயேதான் உள்ளது. ஆங்கிலேயர்களைச் சரமாரியாகக் குறை கூறும் நாம், வாய்மையே வெல்லும் என்று தம்பட்டம் அடிக்கும் நாம், அவர்கள் நீதிமன்றங்கள் மூலம் எப்படி உண்மையை உயர்த்திப் பிடிக்கிறார்கள் என்பதை கீழே குறிப்பிடும் ஒரு வழக்குடன் தெளிவாக்க விழைகிறேன்.

இங்கிலாந்தில் ஜெஃப்ரி ஹோவர்ட் ஆர்ச்சர் என்றவர் ஒரு பிரபல எழுதாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினராக (1969 -1974) இருந்த அரசியல்வாதி. 1985இல் ஆர்ச்சர், கன்சர்வேடிவ் கட்சியின் துணைத் தலைவரானார். இவர் மீது Daily Star என்ற ஒரு செய்தித்தாள் நிறுவனம் இவர் ஒரு விபச்சாரிக்குப் பணம் கொடுத்ததாகக் குற்றம் சாட்டியது. ஆகவே இவர் பதவி விலகவேண்டி வந்தது. 1987ஆம் ஆண்டில், ஜெஃப்ரி அந்தப் பத்திரிக்கை மீது அவதூறு வழக்குத் தொடுத்து நீதிமன்ற வழக்கில் வெற்றி பெற்றுப் பெரும் நட்டஈட்டுத் தொகையாக £500,000 பெற்றார். 1992இல் இலண்டனின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயராக ஆனார். பிறகு 1987ல் அவதூறு வழக்கில் இவர் பொய் கூறியது நிரூபணமானதையடுத்து நான்கு ஆண்டுச் சிறை தண்டனை பெற்று 1999இல் பதவி விலகினார். பொய் சாட்சியம் அளித்ததற்காகச் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் பெற்ற நட்டஈட்டையும் அபராதத்தையும் (£1.5மில்லியன்)

கொடுக்கவும் தீர்ப்பளிக்கப்பட்டது. அதன் பின்னர் அவர் அரசியலில் ஈடுபடவில்லை.

ஆனால் நம் நாட்டில் சட்டங்களை மதிக்காது பொய்யான சத்தியப் பிரமாணங்களைத் தாக்கல் செய்து பதவிக்கு வருவதும், அதை நீதிமன்றங்களே கண்டும் காணாது அவர்கள் பதவிகளில் இருக்க உதவுவதும் இயல்பாக உள்ளது. நம் பிரதம மந்திரி நரேந்திர மோடி அவர்கள் தனது கல்வித் தகுதி பற்றி இந்தியத் தேர்தல் ஆணையம் முன்பு பொய்யான சாட்சியங்கள் அளித்துத் தேர்தலில் போட்டியிட்டு வென்றுள்ளார். இது உலகுக்கே உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகத் தெரிந்தும் அவர் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்பது ஒரு புறம் இருக்க, அவர் கூற்றுக்கள் உண்மையானவையா என்று அறிந்து கொள்ளக் கூட நம் தகவல் அறியும் சட்ட ஆணையர் விடவில்லை. நீதிமன்றங்களும் உண்மைத் தகவல் அறிய உள்ள வாய்ப்புக்களை ஆணையம் மறுப்பது சரி என்று கருதி மக்கள் உண்மை அறியாது பொய் சொல்லும் அரசியல்வாதி பதவியில் தொடர வழிவகை செய்துள்ளது.

அரசு ஊழியர்கள் குற்றவியல் சட்டங்களில் கூறியுள்ள எந்தப் பிரிவை மீறினாலும், அது அவர்களது தனிபட்ட வாழ்க்கை தொடர்புடையதாக இருந்தாலும், அதற்கும் அவர்கள் பணிக்கும் தொடர்புடையதாக இல்லை என்றாலும் தண்டிக்கப்படுவர். ஆகவே தனி ஒழுக்கம் கடைபிடித்து இருதார மணம் இன்றி பெண்களை (தாய், மனைவி, சகோதரி, குழந்தைகள்) மதிப்புடன் நடத்த இவர்கள் கடமைபட்டவர்களாகிறார்கள். ஆனால் நமது அரசியல் தலைவர்களான, பெரும் செல்வந்தர்கள் இந்த விதிகளுக்கு அப்பாற்பட்டு முறையற்ற வாழ்க்கை வாழ்வதை இயல்பாகப் பார்க்கிறோம். முறையாக விவாகரத்துப் பெற்று மறுமணம் செய்துகொண்ட ஓர் அரசாங்கப் பணியாளர் மீது முன்னாள் மனைவி வழக்குத் தொடுத்தபொழுது, அவர் இப்போது இருக்கும் மனைவியுடனும் என்னுடனும் இருக்கட்டும் எனக் கூறினார். மேதகு நீதிபதி. இது “buy one take one free மாதிரி இருக்கே why don’t you consider?” என்று அப்பெண்ணிடம் கேட்ட சோகம் என்னால் மறக்க முடியாத ஒரு நிகழ்வு. அன்று அந்தக் கேள்விக்குப் பதிலாக நான்,

“அவர் ஓர் அரசுப் பணியாளர் மட்டுமே, முதலமைச்சர் அல்ல. எனவே கூடா ஒழுக்கத்திற்காக அவர் இழுத்துச்

செல்லப்பட்டுத் தனது வேலையை இழந்து விடுவார். அவர் இரண்டு பெண்களோடும் வாழ மாண்புமிக்க இந்த நீதிமன்றம் ஆணையிட முடியுமா?''

என்று கேட்டேன். இவ்வாறு பெண்களின் நிலையைச் சிரிப்புக்கு இடமாக்கி நீதிமன்றங்கள் பல நேரங்களில் உணர்வற்ற முறையில் பேசுவதைப் பல நேரங்களில் காண்கிறோம். நமது அரசியலமைப்பு 'சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் சட்டத்தின் சமப் பாதுகாப்பு' என்று கூறும் தலையாய கோட்பாடு ஏட்டுச் சுரைக்காயாகவே உள்ளது.

நான் தற்பொழுது படித்துகொண்டிருக்கும் புத்தகம் கல்பனா கருணாகரன் தன் பாட்டியின் சுயசரிதை குறித்து எழுதியுள்ள, **'A Woman of No Consequence'** என்பதாகும். கல்பனாவின் அம்மா மைதிலி சிவராமன். அவர் இதற்கு முன்பே அவர்களின் பாட்டி சுப்புலக்ஷ்மி பற்றி **'Fragments of A Life : A Family Archive'** என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். இவை இரண்டையும் படித்தாலே நமக்குப் பெண்களின் சமூக மற்றும் தனிபட்ட வாழ்க்கை விருப்பு வெறுப்பு, அவர்களின் மௌனமான போராட்டங்களை அறியமுடிகிறது. தங்களது சாதி மதத்திற்குள் மணமுடித்து வாழ்ந்தவர்களுடைய சுயசரிதையே மனதை நெகிழ்விக்கிறது. ஒரு நிமிடம் நான் என் வீட்டிற்குள் பார்த்தேன்.

**ஆறு அல்லது ஏழு வயதில் திருமணம் செய்யப்பட்டு, அடுத்த வருடமே கைம்பெண் ஆகி, பிராமண சமூகத்தின் பிடியிலிருந்து ஒரு பெரியாரின் தொண்டரால் மீட்கப்பட்டு டாக்டர் சவுந்தரம் ராமச்சந்திரனால் வளர்க்கப்பட்டு, அவர்களையும் எதிர்த்து, கலப்புத் திருமணம் செய்து கொண்டு தன் காலில் நின்று, 73 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெண்குழந்தை போதும் என்று கருத்தடை அறுவை சிகிசை செய்துகொண்டு என்னை ஈன்றெடுது வளர்த்தவர்தான் என் அம்மா சீதாலட்சுமி அவர்கள்.**

**சீதாலட்சுமி,** என்னிடம் திரும்பத் திரும்ப சொன்னவை எல்லாம், பெண்கள் படிக்கவேண்டும், தங்கள் கால்களில் நிற்க வேண்டும், பிறருக்கு உதவியாக வாழவேண்டும் என்பதே. அவர் தன் வாழ்வையும் அதன் அடிப்படையிலேயே வாழ்ந்தார். அவரைச் சுற்றியிருந்த பெண்களுக்கெல்லாம் எழுத்தறிவித்தார், கைவேலை ஏதாவது கற்றுக்கொடுத்துப் பொருள் ஈட்ட வழிவகை செய்து தந்தார்.

இன்றும் என்னை அணுகும் பல பெண்கள் படித்து வேலையில் இருந்தாலும் அவர்களுடைய தனிப்பட்ட வாழ்வில் ஒடுக்கபட்டவர்களகவே இருக்கிறார்கள். B.Tech., MBA படித்து, ஐந்து இலக்க ஊதியம் பெறும் ஒரு பெண் நேற்றைக்கு என்னிடம் வந்தாள். தன்னுடன் வேலை பார்க்கும் சம கல்வியும், வேலையும் உள்ள ஒருவரைக் காதல் திருமணம் செய்து ஒரு பெண் குழந்தையையும் ஈன்றெடுத்துள்ளாள். நேற்று அவள் கணவன் வெளியூருக்குச் சென்றுள்ளதால், அவனுக்குத் தெரியாமல் என்னிடம் ஆலோசனை கேட்க வந்ததாகச் சொன்னாள். அவள் எதிர் கொள்ளும் அவல வாழ்வைக் கேட்டபோது கல்வி அறிவு, வேலை, ஊதியம் என்று எதுவும் பெண்களை விடுவிக்காமல் இருப்பதன் காரணம் புரியாமல் ஒரு மலட்டுக் கோபம்தான் வந்தது. ஒவ்வொரு முறை அடி வாங்கி இரத்தக் காயங்களுடன் மருத்துவரிடம் சென்ற போதும், தான் தவறி விழுந்ததால் ஏற்பட்ட காயங்கள்தான் அவை என்று கூறி மருதுவர்கள் பல முறை கேட்டாலும் உண்மையைச் சொல்லாது கணவனைக் காட்டிகொடுக்காமல் காப்பாற்றியுள்ளாள். இது ஒரு விதிவிலக்கான வழக்கு இல்லை. குடும்ப கௌரவத்திற்காக, குழந்தைகளின் எதிர்காலத்திற்காக, தன்னை வேறு எவரும் தவறாக எண்ணிவிடக் கூடாது என்று பல ஏற்க முடியாத காரணங்களைக் கற்பித்துக்கொண்டு பல பெண்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எத்தனை பெரியார்கள் வந்தாலும், சுயமரியாதை பற்றிக் கற்பித்தாலும் பெண்கள் இன்னும் பின்தங்கியே இருக்கிறார்கள். வீட்டிலும், பணி இடங்களிலும் மற்ற இடங்களிலும் பெண்களின் பாதுகாப்பிற்குப் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

மேலும் வீட்டில் பெண்களின் பாதுகாப்பிற்குக் குற்றவியல் சட்டங்கள், குழந்தைத் திருமணங்களைத் தடுக்க, வரதட்சணை வாங்குவதைத் தடுக்க, மனைவியைக் கொடுமைப்படுத்துவதைத் தடுக்க, அவர்கள் தற்கொலை செய்துகொள்ளாமல் இருக்க, குடும்ப வன்முறையில் இருந்து தடுக்க என்று பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் **பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு) சட்டம், 2013,** முறைசார் மற்றும் முறைசாராப் பணியிடங்களில் வேலை செய்யும் பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறது. எந்தவொரு பெண்ணும் பணி இடத்தில் பாலியல் தொல்லைக்கு

உட்படக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்தில் பெண்கள் வேலை செய்யும் அனைத்துப் பணியிடங்களிலும் உள் புகார்கள் குழு (ICC) ஏற்படுத்தி, அந்தக் குழுக்களில் ஒரு வெளி நபரையும் நியமித்து அவை அமைதியான முறையில் பாதிக்க பட்ட பெண்களுக்குத் தேவையான பாதுகாப்புடன் விசாரணை நடத்தி நியாயம் கிடைக்க வழிவகுக்கிறது. விவசாயம், கட்டடவேலை, சாலை அமைக்கும் வேலை போன்ற முறைசாராப் பணிகளில் இருக்கும் பெண்களின் பாதுகாப்பிற்கு, இந்தச் சட்டத்தில் மாவட்டம்தோறும் மாவட்டப் புகார்க் குழுக்கள் (DCC) ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெண்களைக் கண்ணியத்தோடு அணுக வேண்டும் என்பதற்காக அவர்கள் மேல் புகார் ஏதும் இருப்பினும், அவர்களை அவர்களது வீட்டில் வைத்து விசாரிக்கவும், பெண் காவலர்களால் மட்டும் கைது செய்யவும், பெண்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க மகளிர் காவல் நிலையங்களும் மகளிர் நீதி மன்றங்களும், தேசிய மற்றும் மாநிலப் பெண்கள் ஆணையங்களும், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவிட "ஒரே நிறுத்த மையம்" (One Stop Centre) திட்டம் என்று பலதும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கூறிய பல சட்டங்கள் பெண்கள், குழந்தைகள், நலிவுற்றோர் பலரின் நலனுக்காகவும் இயற்றப்பட்டிருப்பினும் மக்கள் இன்றும் அவதியுற்றுக்கொண்டும், நியாயம் நீதி மறுக்கப்பட்டும், பல போராட்டங்களுடன் வாழ்வதுதான் நடைமுறையாக உள்ளது. இது மாறவேண்டும் என்றால் பொது வாழ்க்கையில் சுத்தமாக, பொய்களைத் தண்டித்து விருப்பு வெறுப்பற்ற நீதி பரிபாலனைக்கு வழிகோலச் செய்தல் வேண்டும். இவை நம் அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகப்பில் உள்ள பிரிவுகளின்படி நம் அரசாங்கத்தை நடத்தி சென்றால்தான் முடியும்.

♦♦♦

★ கட்டுரையாளர்
மூத்த வழக்கறிஞர்
சென்னை உயர்நீதிமன்றம்

# பெண்ணிய நோக்கில் இருத்தலும் இருத்தல் நிமித்தமும்...

புதியமாதவி

நடுவண் ஐந்திணை என்றும் அன்பின் ஐந்திணை என்றும் சிறப்பு அடைமொழியோடு குறிக்கப்படும் ஐந்திணைகளின் வரிசையை நோக்கினால் அதில் முதலிடத்தில் வைத்து எண்ணப்படுவது முல்லைத்திணை. இதற்கு உரையாசிரியர்கள் கூறும் காரணம் யாதெனின், ‘‘கற்பு நெறி பிறழாது மகளிர் இல்லில் ஆற்றியிருந்து நல்லறம் செய்தலே ஒழுக்கங்களில் தலை சிறந்தது. ஆகவே தொல்காப்பியர் முல்லைத்திணையை முதலில் வைத்தார்’’ என்பதாகும்.

அகவொழுக்கத்தில் ஆற்றியிருத்தல், புணர்தல், ஊடல், இரங்கல், பிரிதல் முறையே முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை ஆகியவற்றின் உரிப்பொருளாகச் சுட்டப்படுகின்றன. முதற்பொருளின் உரிப்பொருள்கள் சங்க காலத்தில்தான் முகிழ்த்தன என்று சொல்ல முடியாது. ஐந்திணைப் பிரிவுகளும் பாடல்களும் சங்க காலத்தில் பாடப்பட்டிருக்கின்றன என்றாலும் அப்பாடல்களின் உரிப்பொருள்களில் பல சங்க காலத்திற்கு முந்தைய சமூகத்தின் பாடுபொருளாக இருந்திருத்தல் வேண்டும். நிலப்பாகுபாடும் அதை சார்ந்தே நிலத்திற்கான ஆண் பெண் உறவு நிலையும் அறிவியல் பார்வைக்குப் பொருந்தாது.

காரணம், முல்லையிலும் ஊடலும் கூடலும் இருந்திருக்கும், ஆண் பெண் உறவில் ஊடல் கூடல் பிரிதல் ஆகியவை நிலப்பாகுபாடின்றி இருப்பது வாழ்வின் நியதியாகும். ஆதலால், ஒவ்வொரு நிலத்திற்கும் இதுவே உரிப்பொருளாகும் என்று கூறுவது இலக்கிய கொள்கையாக - கோட்பாடாக அமையுமே தவிரச் சமூகவியல் கொள்கையாக அமையாது. அப்படியானால், இதன் அடிப்படை என்ன ? இந்தக் கேள்வியின் ஊடாகவே "இருத்தலும் இருத்தல் நிமித்தமும்" பெண் ஒழுக்கமாக, கற்பு நெறியாக குறிப்பாக பெண்ணுக்கு மட்டுமேயான கற்பு நெறியாக மாற்றம் பெற்ற காலத்தின் மனித வரலாறு புலப்படுகிறது. இன்னொரு வகையில் சொல்லப்போனால், **ஆண்வழித் தலைமையின் தொடக்கம் முல்லையில் ஆரம்பம்**.

"ஆதிகாலத்துக் கூட்டுச் சமுதாய வாழ்க்கை குறிஞ்சி நிலத்தில் நிலவியிருந்தது. அதனை அடுத்து முல்லை நிலத்தில் உருவான வாழ்க்கை, முதல் வர்க்கப் பிரிவினையை வெளிப்படுத்திய வாழ்க்கை. அது அடிமைச் சமுதாயத்தை விளக்குவது. அச்சமுதாயம் சிதைந்து மருத நிலத்தில் மிக விரிவான அளவில் உருவான சமுதாயம் நிலப்பிரபுத்துவ சமுதாயமாக அமைந்தது" என்பார் கு. மா. பாலசுப்பிரமணியன்.

எனவே, உலகில் தொன்மைச் சமூகத்தில் பொதுவுடைமை நிலவியதையும் அங்கு வரன்முறையற்ற ஆண் பெண் புணர்ச்சி நிலவியது என்பதையும் இதில் தமிழ் நிலமும் விதிவிலக்கல்ல என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். இக்கருத்து மனித இனத்தின் ஆதிக்குடிகள் அனைவருக்கும் பொதுவானது. ராகுல சாங்கிருதித்தியாயனின் வால்காவிலிருந்து கங்கைவரை நினைவுக்கு வருகிறது.

ஆதி தமிழ்ச் சமூகத்தில் நிலவிய வரன்முறையில்லா ஆண் பெண் உறவை, புணர்வுகளையே தொல்காப்பியர் குறிஞ்சி உரிப்பொருளாகிய புணர்தலும் புணர்த்தல் நிமித்தமும் என்று உணர்த்தி இருக்க வேண்டும். எனவே குறிஞ்சித் திணை தமிழரின் தொன்மையான சமூகத்தின் ஆண் பெண் உறவை விளக்குவதாகக் கருதலாம். ஆனால் சங்க காலத்தின் குறிஞ்சித் திணைப்பாடல்களில் காட்டப்படும் ஆண் பெண் உறவு இவ்வாறாக இருக்கிறதா என்று கேட்டால் "இல்லை" என்பதுதான் உண்மை. குறிஞ்சித்திணைப் பாடல்கள் விவரிக்கும் ஆண் பெண் உறவு தொன்மைச் சமூகத்தின் அதே உறவு நிலையைப் பிரதிபலிக்கவில்லை. தொன்மைக்காலப் புணர்ச்சியே

குறிஞ்சியின் பாடுபொருளாக இருந்தாலும் காலப்போக்கில் நிகழ்ந்துவிட்ட நிகழ்காலப் பண்பாட்டிலிருந்து விலகாமல் புணர்ச்சியைப் பாடுகிறது. நிகழ்காலக் கற்பு நெறி சமூகத்தின் வழியாகவே ஆதித்தொல் சமூகத்தைப் பிரதி எடுத்திருக்கிறது. எனினும் தொன்மையான ஆதிச் சமூகத்தின் எச்சங்களைக் குறிஞ்சிப் பாடல்கள் பதிவு செய்திருக்கின்றன.

> “தாய்வழித்தலைமை
>
> சுதந்திரத் திருமணம் - களவு மணம்
>
> உடன்போக்கு - பெற்றோர் தலையீடு இல்லாமல் - கற்பு மணம்.
>
> இக்கூறுகள் ஆதிச்சமூகத்திற்கும் ஒரு தார மணமுறை, கற்பு நெறி கொண்ட ஆநிரைச் சமூகத்திற்கும் இடைப்பட்ட சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளாகும்”

என்பார் பேரா. சிலம்பு நா. செல்வராசு.

மனித சமூகத்தின் தொடக்க கால வாழ்விடமாக மலைகளும் குகைகளுமே இருந்தன. குறிஞ்சி நில மக்களே உலகின் ஆதிக்குடிகள். மக்கள் தொகை பெருகப் பெருக அவர்கள் காட்டுப்பகுதியில் குடியேறத் தொடங்கினார்கள். அங்குதான் மனித நாகரிகத்தின் இரண்டாம் படி நிலை ஆரம்பமாகிறது. மலையை விடக் காட்டுப்பகுதி உணவுக்குத் தட்டுபாடின்றி வாழ வழிவகுத்தது. காட்டுப்பகுதி வாழ்க்கையில்தான் மனிதன் ஆடு மாடுகளை வளர்க்கத்தொடங்கினான். தமிழ்க்குடி “ஆயர்கள்” என்று பெயர் பெற்ற இடம் முல்லை. பசு வளர்க்க ஆரம்பிக்கும்போது பால் விற்பனை தொடங்கியது செல்வப்பெருக்கு ஏற்படுகிறது. அதனால் தான் ‘பசு என்றால் செல்வம் என்றும் பொருள்படும். ‘மாடல்ல மற்றையவை’ என்று திருவள்ளுவர் சொல்வதும் இதைத்தான். ஆநிரைகள் தனியுடைமையின் முதல் சொத்துடைமையாக வரலாற்றில் இடம் பெறுகின்றன. கோ என்ற சொல் உணர்த்திய பசு என்பது பசுக்கள் அதிகமுடையவனைக்கோ என்றழைக்கும் மக்களின் வேந்தனாக மாறுகின்றான். சொத்துடைமை அறியாத பொதுவுடைமை கொண்ட குறிஞ்சிச் சமூகம், சொத்துடைமை, தனியுடைமையாக முல்லையில் மாற்றம் பெறுகிறது

மருத நிலத்திற்கான அதிகாரவெளி முல்லையில்தான் திறக்கிறது. அதிகாரம் சொத்துடைமை இரண்டும் சேரும்போது தனியுடைமையின் இன்னொரு பக்கமான வாரிசுரிமைக்

கருத்தாக்கம் தோன்றுகிறது. இந்த வாரிசுகளை உருவாக்கும் விளை நிலமாக ஆண் மகனின் சொத்துடமையாக பெண் மாறுகிறாள். வாரிசுரிமையை நிலை நாட்டக் குறிஞ்சி நிலத்தின் புணர்தல் என்பது கட்டுப்பாட்டுக்குரியதாகி பெண் தன் கணவன் தவிர பிற ஆண்களுடன் பாலுறவு கொள்வது என்பது தடை விதிக்கப்பட்டு அது மட்டுமே பெண்ணின் சிறப்பாகவும் பெண்மையின் அடையாளமான "கற்பு" என்பதாகவும் கற்பிக்கப்படுகிறது. அதாவது தொன்மைச் சமூகத்தில் நிலவிய ஆண் பெண் உறவில் மாபெரும் மாற்றத்தை முல்லையின் 'இருத்தல்' என்ற உரிப்பொருள் உணர்த்துகிறது.

"இருத்தல்" என்பது ஆற்றியிருத்தல். கணவன் பொருள்வழி பிரிவினை அல்லது ஆநிரை மேய்க்கப் பிரிதல் அல்லது பிற காரணங்களுக்காகப் பிரியும்போது அவன் மனைவி காதல் உணர்வுகளை, (காமத்தை) அடக்க வேண்டுமே தவிர அவள் தன் உணர்வுகளுக்கு வடிகால் தேடுவது குற்றம்.

அப்படி ஆற்றியிருத்தலே அறம், ஆற்றியிருத்தலே கற்பு நெறி என்று பெண் வாழ்க்கையில் பெண்ணுடல் மீது இச்சமூகம் முதல்முறையாகக் கட்டுப்பாடுகளைக் கொண்டுவருகிறது. இக்கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் பெண்கள் மட்டுமே போற்றுதலுக்குரியவர்கள் ஆகிறார்கள், ஆனால் இக்கட்டுப்பாடுகள் அனைத்தும் பெண்ணுக்கானவை மட்டும்தானே தவிர ஒழுக்கம், அறம், குடும்பம், தனியுடமை, சொத்துடமை, அதிகாரம் என்று எதன் பெயராலும் எந்த ஓர் ஆண்மகனையும் பாதிக்காது என்பதையும் இதே கட்டுப்பாடுகளின் மறுபக்கம் உணர்த்தியது. அதிகாரத்தின் உச்சத்தில் மருத நிலத் தலைவன் பல பெண்களுடன் உறவு கொள்கிறான். அப்போதும் அவன் மனைவி "ஊடல்" கொள்வது மட்டும்தான் மருதத்திணையின் உரிப்பொருளாக்கி அதையும் அந்த ஊடலையும் கூடலில் கொண்டு முடிக்கிறது மருதத்திணையின் பெண் வாழ்வு.

இவ்வாறு குறிஞ்சி வாழ்க்கையும் அதை அடுத்து முல்லை மருத நில வாழ்க்கையும் தோன்றி இருக்க வேண்டும். இக்கருத்துச் சமூகவியல் அறிஞர்களின் கருத்துகளுடன் ஒத்துப்போகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம் கடந்து உற்பத்திப் பெருக்கம் நிகழ்கிற காலத்தில் மனித சமூகத்தில் ஆண் நிலவழிப் பிரிதலுடன் நீர்வழிப் பிரிதலும் செய்கிறான். இந்தப் பிரிதல் முன்னைய பிரிவுகளைக் காட்டிலும் கால நீட்டிப்புக்

கொண்டது. எனவேதான் நெய்தல் பிரிவின் உரிப்பொருள் ‘இரங்கல்’’ என்றாகிறது.

கற்பு என்று சொல்ல வரும்போது ‘முல்லை சார்ந்த கற்பு’ என்று சொல்வது ஏன்? பிற நிலங்களில் அப்பெண்களிடம் கற்பு நெறி இல்லையா? என்ற கேள்வி எழுகிறது. அதனால் **கற்பு நெறி என்ற கருத்தாக்கம், முல்லை நில வாழ்க்கையில் உருவானது** என்பதன், வரலாற்றை உய்த்துணர முடியும்.

முல்லை சான்ற கற்பின் மெல்லியள், **சிறுபாணாற்றுப்படை 30**

முல்லை சான்ற கற்பின் மெல்லியல் குறுமகள் -
**அக நானூறு 274 - நற்றிணை 142.**

கற்பைச் சுட்டும்பொழுது முல்லை மலரையும் சேர்த்தே அடையாளப்படுத்துகிறார்கள். கற்பாகிய இருத்தலை இருத்தலின் தூய்மையைக் குறிக்க பயன்படுத்தப்பட்ட முல்லை மலர், பிற்காலத்தில் இருத்தலை வலியுறுத்திய சமூகத்திற்குக் குறியீடாக மாறி, முல்லை சான்ற கற்பு என்று கற்பின் அடையாளமாகப் புனிதமாக மாறி இருக்கிறது. இன்றும் வெள்ளை நிறத்தைப் பயன்படுத்துவது வெள்ளை நிறம் தூய்மையின் அடையாளமாகக் கருதப்படுவதால்தான்.

“சங்க காலப் படைப்பு ஆழ் மனங்களில் இருந்த கற்பு மூலபடிவம் முல்லை மலரின் வழியாக வெளிப்பட முயன்றுள்ளது. சேக்ஸ்பியரின் கற்பு மூலபடிவம் வெண்பனி வழி வெளிப்பட முயன்றுள்ளமை எண்ணத்தக்கது. முல்லை மலரும் வெண்பனியும் ஒரே நிறத்தைக் கொண்டவை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. என்பார் நலங்கிள்ளி. (1988 தமிழிலக்கியத்தில் மூலப்படிவ மாதிரிகள் தேடல்)

முல்லை நில உரிப்பொருளான இருத்தல்தான் தமிழ்ச் சமுதாயத்தில் ஆண் தலைமையைப் பெண் மீது சுமத்திய முதல் கற்புக் கோட்பாடாகும். இதிலிருந்துதான் பெண், பெண்ணுடல், கற்பு, ஆண் பெண் உறவில் பெண்ணின் ஒழுக்கம் குடும்பத்தில் பெண்ணுடல் என்று பல கருத்துருவாக்கங்கள் உருவாகி இன்றுவரை பெண் வாழ்க்கையில் பல வடிவங்களில் இடம் பெற்றிருக்கின்றன.

♦♦♦

★ கட்டுரையாளர் - முற்போக்கு எழுத்தாளர்

# சீர் மரபினரும்
# அரசமைப்புச் சட்ட உரிமைகளும்

**அஜீதா**

அண்மையில் நவம்பர் 15 ஆம் தேதி அன்று இந்திய ஒன்றிய அரசு “பழங்குடி கௌரவ தினம்” என்று அந்த நாளை அனுசரிக்கும்படி மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டதோடு தானும் அந்த நாளைக் கொண்டாடியது. பழங்குடியினரின் கௌரவ தினம் என்று பெயரிட்டது சரி. ஆனால், பழங்குடியினரைக் கௌரவமாக இந்த நாடு கருதுகிறதா? அவர்களுக்கான சமத்துவத்தை அளிக்கிறதா என்றால் அவர்களை மனிதர்களாகவே கருதாமல் பாரபட்சமாகவே நடத்தியது என்பதுதான் பதிலாக இருக்க முடியும்.

சீர் மரபினர் என்று சொல்லப்படும் சொல்லுக்குப் பின்னால் மிகப்பெரும் காலனி அரசியல் உள்ளது. சொந்த மண்ணில் அந்நியராக்கப்படுதல், வந்தேறிகள் ஆதிக்கத்தின் கோரமுகம், தொல்குடிகளுக்கு நிகழ்த்தப்பட்ட அநியாயம், அவல நிலைக்குத் தள்ளப்பட்ட வாழ்க்கை, இரண்டாம் தரக் குடிமக்களாகச் சட்டத்தின் அடிப்படையிலேயே அவர்கள் மீதான பாரபட்சமான நடவடிக்கை ஆகியவை அவர்களின் வரலாறாக இருக்கிறது.

ஆங்கிலேயர் இந்தியாவில் வணிகம் செய்ய வந்தபோது தங்கள் மண்ணில் இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்த

மக்கள், வனங்களைத் தமது குடியிருப்பாகவும் வனவிலங்குகளை தமக்குள் ஒருவராகவும் கருதி வாழ்ந்தனர். இம்மக்கள் பிரிவினர் நாகரிகமான வாழ்க்கை என்ற பெயரில் அரசு அதிகாரம், ஆள்பவர்களின் சட்டம் ஆகியவற்றுக்கு உட்பட்டு வாழ்பவர்களிடமிருந்து விலகியே வாழ்ந்தனர். தமது இயற்கை வளம் தமக்கானது என்று போராடும் இம்மக்களை இந்நாட்டின் தொல் குடிகளின் இயற்கையான கோரிக்கைக்கான போராட்டம் என்று பார்க்காமல், அவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் வைத்து விலங்குகளைப் போல் அடிமைப்படுத்தித் தளை யிட்டுத் தமக்காகப் பயன்படுத்திக் கொள்ளுவதோடு, பல்வேறு மக்கள் குழுக்களைக் குற்றம் இழைப்பவர்களாக முத்திரை குத்தி அடையாளம் காட்டி மிக மோசமான வன்முறைக்கும் ஆதிக்கத்திற்கும் ஆட்படுத்துகிறது அதிகார வர்க்கம்.

தம்முடைய வன்முறைக்கு நியாயம் கற்பிக்கும் வகையில் உள்ளூர் அதிகார அமைப்பின் துணையோடு குறிப்பிட்ட மக்கள் இனக்குழுக்களை மனிதத் தன்மையற்ற வகையில் கையாளுவதற்காக ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி முதன்முதலில் கொண்டு வந்த சட்டம்தான் **தக்கீஸ் சட்டம்**. 1837 முதல் 1848 வரையில் பல்வேறு திருத்தங்களைச் செய்து நடைமுறையில், போராடும் மக்கள் பிரிவினரைத் திருடர்களாகவும் கொள்ளைக்காரர்களாகவும் வழிப்பறிக்காரர்களாகவும் உருவமைத்து அதற்கான சட்ட அங்கீகாரம் கொடுத்ததுதான் கிழக்கிந்தியக் கம்பெனியின் முதல் முன்னெடுப்பாக இருந்தது.

தக் என்றும், தக்கீஸ் என்றும் வரையறுக்கும் ஒரு நபர் பொதுவாகப் பிறருக்கு ஊறு விளைவிக்கக்கூடிய குற்றச்செயலைச் செய்யக்கூடிய போக்கிரி என்று அகராதிகள் பொருள் கூறுகின்றன. இந்த மக்கள் பிரிவினர் இளைஞர்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் வரைமுறையற்ற சுரண்டலுக்கு எதிராகத் தங்கள் நாட்டின் வளங்களைக் கொண்டு செல்லும் அறிவிக்கப்படாத திருடர்களாகப் பார்க்கப்பட்டனர். பாரம்பரியமாகத் தாங்கள் பயன்படுத்தும் ஆயுதங்களோடு கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரிகளை, அவர்களுக்குத் துணையாக இருக்கக்கூடிய நிலக்கிழார்களை அல்லது பெரும் பணக்காரர்களை அச்சுறுத்தி அவர்களின் சொத்தை, பணத்தைக் கொள்ளையடிப்பவர்களாகச் சித்தரிக்கப்பட்டு, அவர்களைத் தடைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதுதான் இந்தச் சட்டம்.

சொந்த நாட்டில் திருடர்களாகவும், கொலைகாரர்களாகவும், கொள்ளைக்காரர்களாகவும் மிகப்பெரிய மக்கள் பிரிவினரை அடக்கி ஆளுவதற்காகப் போடப்பட்ட சட்டம், **1871ஆம் ஆண்டுக் குற்றப் பரம்பரையினர் சட்டம்** என இன்னும் விரிவாக்கபட்டது.

இச்சட்டம், குறிப்பிட்ட மக்கள் பிரிவினரை இனக் குழுக்களை அல்லது சாதிகளை ஒட்டுமொத்தமாக அவர்கள் பிறக்கும் போதே குற்றவாளிகள் என்கிற முத்திரை குத்தியது. இச்சட்டத்தின் நோக்கம், அதை உருவாக்க வேண்டிய தேவை ஆகியவற்றைப் பற்றிய ஆவணங்களைப் பார்த்தால் வில்லியம் ஹென்றி ஸ்லிம் ஏன் என்பவர்தான் இச்சட்டத்தை இயற்றவும், இதற்கு முன்னால் அடி எடுத்துக் கொடுத்த தக்கீஸ் சட்டத்தை கொண்டு வருவதற்கும் 1835இல் தக்கீஸ் துறை என இதன் கீழ் கொண்டுவரப்பட்ட மக்களைப் பதிவு செய்யவும் கண்காணிக்கவும் அவர்களைப் பிறப்பு முதல் இறப்பு வரை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளவும் காரணமாக இருந்தார்.

எனவே குற்றப்பரம்பரையினர் சட்டத்தில், குற்றப் பரம்பரையைச் சார்ந்தவர் எனக் கூறப்பட்டவர் கொலை கொள்ளை, திருட்டு, வழிப்பறி ஆகியவற்றைத் தமது வாழ்வியலாகக் கொண்டவர்கள் என்றும், இப்பணிகளைத் தம்முடைய சடங்காகவும் மதமாகவும் போற்றுபவர்கள் என்றும் வரையறுக்கப்பட்டு இருந்தார்கள்,இவர்கள் காளி என்கிற தெய்வத்தை வணங்குபவர்கள் என்றும், சுருக்கைப் பயன்படுத்தி எதிராளிகளைக் கொல்லக் கூடியவர்கள் என்றும், இவர்கள் சாதாரண மக்கள் பிரிவினராக இல்லாமல் தனித்து வாழும் நெறியற்ற ஒரு கூட்டத்தினர் என்றும், வடக்கு மற்றும் மத்திய இந்தியாவில் வாழும் குழுவினர்கள் என்றும், இயல்பிலேயே குற்றம் செய்வதைத் தொழிலாகவும் மதமாகவும் கொண்டவர்கள் என்றும், தமக்குத் தொழில் இல்லாத காலத்தில் குறுநில மன்னர்களைச் சார்ந்து வாழ்ந்தவர்கள் என்றும் கிழக்கிந்தியக் கம்பெனி பதிவு செய்திருந்தது.

ஆனால் இந்தக் காலகட்டத்தில் மக்கள் மத்தியில் இப்படி ஒரு சமூகம் இருப்பதாகவோ, இவர்களைக் கண்டு அஞ்சி வாழ்ந்ததாகவோ எவ்விதக் கருத்தும் நிலவவில்லை என்பதையும் வரலாற்றுப் பூர்வமான ஒரு கருத்தைத் தற்போதைய இந்திய ஒன்றிய அரசும் ஏற்றுக் கொள்கிறது. (Dept of Denotified Tribes Government of India)

1871ஆம் ஆண்டு இயற்றப்பட்ட குற்றப்பரம்பரையினர் சட்டம் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, 1924ஆம் ஆண்டு "குற்றப் பரம்பரைச் சட்டம்" என்று ஏறக்குறைய இந்தியா முழுவதுமாக நடைமுறைக்கு வரும்படியாக மாற்றப்பட்டது. மதராஸ் மாகாணத்தில் இச்சட்டம் 1911இல் இருந்து நடைமுறைக்கு வந்தது. அப்போது, இந்தச் சட்டத்திற்கு கீழ் கொண்டுவரப்படுகிற மக்கள் பிரிவினர், செட்டில்மெண்ட் பகுதிகளாகத் தனித்தனியாகத் தங்க வைக்கப்பட்டனர். அவர்கள் தங்கள் கைவிரல் ரேகையை அருகிலுள்ள காவல் நிலையத்தில் பதிவு செய்வதோடு, எப்பொழுது எந்த ஊருக்குச் சென்றாலும் அந்தத் தகவலைத் தெரிவித்து விட்டுத்தான் செல்ல வேண்டும் என்றும், வந்த பின்னால் மீண்டும் ஒருமுறை கையொப்பம் கைரேகை பதிய வைக்க வேண்டும் என்றும் இச்சட்டத்தில் பல கட்டுப்பாடுகள் தனிமனித சுதந்திரத்திற்கு எதிராகவும், வாழ்வுரிமைக்கு எதிராகவும், தாங்கள் விரும்பிய தொழில் செய்யும் உரிமைக்கு எதிராகவும் பல பிரிவுகள் இருந்தன. மேற்கூறியவாறு **கைரேகை பதிவு செய்த குடும்பங்களில் பிறக்கும் குழந்தைகளையும் கூடப் பதிவு செய்யும் வழக்கம் மிகக் கொடூரமானதாக இருந்தது. அடிப்படையில் பிறப்பிலேயே அவர்கள் குற்றம் செய்பவர்கள் என்பதுதான் சட்டத்தின் பார்வையாக இருந்தது**. எனவேதான் இந்தக் குழந்தைகளும் சீர்திருத்த பள்ளிகளிலேயே சேர்க்கப்பட்டனர். சாதி இழுக்கு போல, பிறப்பிலேயே குற்றவாளி எனும் இழுக்கு அவர்களை மனித மாண்புகள் அற்ற வாழ்க்கையை வாழும்படி தள்ளியது. இதன் மூலம் **இச்சட்டம் இந்தியாவெங்கும் ஏறக்குறைய 10 கோடி மக்களைக் குற்றவாளிகளாக ஆக்கியது**. இச்சட்டத்தின் படி தாழ்த்தப்பட்ட பழங்குடி மற்றும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட பிரிவினர் எனப் பல்வேறு படிநிலையில் இருந்த மக்களைக் குற்றப் பரம்பரையினராக ஆக்கியது இச்சட்டம்.

இச்சட்டத்தின் அடிப்படைக் கருத்துகளை உள்வாங்கிக் கொண்ட அரசும், அதிகார வர்க்கமும், நீதித் துறையும் குறிப்பாகக் காவல்துறையும் பல அநீதியான முன் முடிவுகளோடு இவர்களைக் கையாண்டன.

## 1947 இன் அரசியல் சுதந்திரம்

நாடு சுதந்திரம் அடைந்த பின், தன்னுடைய மக்களில் ஏறக்குறைய ஒரு கோடி பேருக்கும் மேலானவர்களைக் குற்றப்

பரம்பரையில் பிறந்தவர்களாக மனித மாண்புகள் அற்று சமத்துவமற்ற நிலையில் வைத்திருந்த இச்சட்டம் விவாதத்திற்கு உள்ளானது. **1952 இல் தொடர் குற்றவாளிகள் சட்டம்** என மாற்றியமைக்கப்பட்டு, ஒரு கோடிக்கும் மேலானவர்கள் பழைய சட்டத்தின் கீழிருந்து அறிவிப்பு நீக்கம் செய்யப்பட்டனர். இவர்கள்தான் டிஎன்டி என்று (Denotified Tribes) பெயர் மாற்றம் செய்யப்பட்டனர்.

## தொடர் குற்றம் இழைப்பவர்கள் சட்டம் 1952

ஆங்கிலேயக் காலனி அரசால் அறிவிக்கப்பட்ட குற்றப்பரம்பரையினரைச் சேர்ந்த மக்கள் அறிவிப்பு நீக்கம் செய்யப்பட்ட பின்னால், சுதந்திர மனிதர்களாக உலா வர முடியவில்லை. அதே காவல்துறை, அதே வர்க்கச் சார்புடன் கூடிய அதிகார வர்க்கம் மனித உரிமைகளைபற்றிய பார்வை சிறிதளவும் இல்லாத அரசியல் தலைமை, சாதி உணர்வுகள் மேலோங்கி இருந்த கட்சியின் தலைமையில் இருந்த ஒன்றிய அரசு ஆகியவை இச்சட்டத்தில் புரட்சிகரமான எந்த மாற்றத்தையும் செய்துவிடவில்லை.

இச்சட்டம், சில குறிப்பிட்ட மக்களைக் குற்றம் செய்ய பழக்கப்பட்டவர்கள், அதைத் தொழிலாகக் கொண்டவர்கள், அவர்கள் பிறக்கும் போதே இந்தக் குற்றம் செய்யும் தன்மையைத் தங்கள் மரபணுவில் கொண்டிருக்கிறார்கள் என்பது போன்ற தவறான கருத்துக்களை முன் முடிவுகளாக 1952 க்கு பின்னாலும் தொடர்ந்தன. இதன் காரணமாக இவர்களுடைய சுதந்திரத்திற்கான உரிமை, சமத்துவத்திற்கான உரிமை, தொழில் செய்யும் உரிமை ஆகியவை மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி சமூக ஒதுக்குதலுக்கு ஆளாகியவர்களாக இருந்தனர்.

## தேசியப் பட்டியல் இன ஆணையத்தின் உண்மை அறியும் அறிக்கை

2014 ஆம் ஆண்டு, தேசியப் பட்டியல் இன ஆணையம் குறவன் எனும் பட்டியல் இன மக்கள் மீதான காவல்துறையின் அத்துமீறல்களைக் குறித்து ஆய்வு செய்யக் **கேப்டன் துரை** என்பவருடைய தொடர்ச்சியான கோரிக்கை மனுக்களைக் கருத்தில் கொண்டு ஓர் உண்மை அறியும் குழுவை

அமைத்தது. அக்குழுவில் **தேசிய ஆணையத்தின் சார்பாக சில அதிகாரிகளும் மூன்றாம் தரப்பு உறுப்பினராக நானும் கள ஆய்வு செய்தோம்**. அதில் 5 மாவட்டங்கள் 10 காவல் நிலையங்கள் சுமார் 20க்கும் மேற்பட்டவர்களின் மீதான வழக்குகள் என ஆய்வு செய்தபோது கீழ்க்கண்ட உண்மைகள் ஆவணப்பூர்வமாகக் கண்டறியப்பட்டு தேசியப் பட்டியல் என ஆணையத்தின் முன் அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்பட்டது

- குறவன் இன மக்களைக் காவல்துறை எவ்வித அடிப்படைச் சான்றும் இன்றிக் குற்றவாளிகளாக நடத்தி இருந்தனர்
- ஒவ்வொரு குறவன் இன ஆண்களின் மீதும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக 10 முதல் 30 வழக்குகள் வரை பதியப்பட்டிருந்தன,
- பலர் கடந்த 10 / 15 வருடங்களாக நீதிமன்றங்களுக்கும் சிறைக்கும் சென்று வருவதை மட்டுமே வழக்கமாகக் கொண்டுள்ளனர்.
- இளம் சிறார்களைப் பெற்றோர் காவல் நிலையங்களுக்குத் தெரியாமல் மறைத்து வைத்து வேறு ஊர்களில் ஒளிந்து வாழ வைக்கிறார்கள்,
- பெரும்பான்மையான திருட்டு வழக்குகளில், இந்த அறிவிப்பு நீக்கப்பட்ட சமூகங்களைச் சார்ந்த நபர்களைப் பல காவல் நிலையங்கள் பங்கு போட்டுக் கொண்டு, உண்மையான குற்றவாளி யார் எனத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் இவர்கள் மீது வழக்குகள் போடுவதை வழக்கமாக்கி வைத்திருந்தனர்.
- தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு பகுதியில், ஆயுத பூஜை அன்று காவல் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள், அன்று மட்டும் குறவன் இன மக்களை லாக்கப்பில் உட்கார வைக்க வேண்டும் என்று சட்டத்திற்குப் புறம்பாக லாக்கப்பில் வைத்த சம்பவங்களும் அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது.
- சித்ரவதை மற்றும் அச்சுறுத்தல் மூலமாகக் கட்டாய ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, ஒரு நபர் அந்த ஊரில் அந்த நாளில் இல்லாவிட்டாலும் கூட அவருடைய ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில் வழக்குப் பதிந்து சிறையில்

அடைத்த உண்மைகள் கண்டறியப்பட்டன,

- இவ்வாறு பல போராட்டங்களுக்குப் பின்னால் படித்து முன்னேற்றம் காண்பவர்கள் தங்கள் அடையாளத்தை மறுத்து உறவுகளையும் சொந்த ஊரையும் மறுதலித்து வாழ்வதை விரும்புகின்றனர்.

மேற்கண்ட உண்மைகள்தான் சீர் மரபினரின் வாழ்க்கை. இப்படி ஒரு சூழ்நிலை சுதந்திரத்திற்கு முன்னால் இருந்தபோதுதான் கள்ளர் மற்றும் மறவர் உள்ளிட்ட பல சமூகங்களைக் குற்றப்பரம்பரையினராக அறிவிப்புச் செய்ததை எதிர்த்து முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் மிகப் பெரும் போராட்டங்களை நடத்தினார். அதன் காரணமாகக் குறிப்பாக கள்ளர் மற்றும் மறவர் என்கிற சமூகங்கள், பல முன்னேற்றங்களைக் கண்டு பின்னாளில் முக்குலத்தோர் என அறியப்பட்டு அரசியல் ரீதியாகத் தங்கள் குரல் ஒலிக்கும் வகையிலும், பொருளாதார ரீதியாகப் பெரும் முன்னேற்றம் காணும் வகையிலும் உயர்ந்தனர்.

ஆனால் பிற குற்றப்பரம்பரையினர் என அறிவிக்கப்பட்ட சமூகங்கள், அரசியல் ரீதியான கவனம் பெறும் வகையில் தாங்களோ தங்கள் தலைவர்களோ எவரும் போராடாத காரணத்தால் ஒன்றிணைந்த ஓங்கிக் குரல் கொடுக்க வாய்ப்பற்ற பழங்குடித் தொல்குடிச் சமூகங்கள் இன்றளவும் ஒதுக்குதலுக்கும் குற்றப் பணிகளுக்கும் கொடுமையான வாழ்க்கைக்கும் ஆளாக்கப்பட்டு வருகிறார்கள்.

## பிர்சா முண்டா தொல்குடிகளின் தலைவன்

ஆங்கிலேய காலனி ஆதிக்கத்தை எதிர்த்துத் தங்கள் ஆயுதங்களை தரித்து கவன் கல், கம்பு மற்றும் வில் அம்பு ஆகியவற்றைக் கொண்டு பெருவலிமை கொண்ட ஆதிக்க அரசாங்கத்தை எதிர்த்துப் போராடி உயிர் நீத்தவர்கள் பலர். காலனி அரசின் பார்வையில் தொல் குடிகளின் தலைவனாக, தங்களின் வனம், நிலம் மற்றும் நீர் உரிமைகளுக்காகப் போராடிய பிர்சா முண்டாவும் அவரது தந்தையும் அவருடைய உறவுகளும் குற்றப்பரம்பரையினர் என்றும், சீர் மரபினர் என்றும் சொல்லப்படும் சமூகங்கள் இந்தியாவில் சுமார் 11 கோடி பேர் இருக்கிறார்கள். 2000 ஆவது ஆண்டில் தேசிய மனித உரிமை

ஆணையம் இந்தத் தொடர் குற்றம் இழைப்பவர்கள் சட்டம் 1952, பல வகைகளில் குற்றவியல் சட்டத்தினுடைய அடிப்படை பாதுகாப்பை வழங்கவில்லை. மேலும் இச்சட்டத்தின் கீழ் வழக்குப் போடப்படும், குற்றம் சாட்டப்படும் நபர்களுக்குச் சாதகமாக இது பயன்படுத்தப்படுவதில்லை. சந்தேகத்தின் காரணமாக அடிப்படை இல்லாமல் குற்றவாளிகளாக நடத்தப்படுவதைச் சுட்டிக்காட்டி இச்சட்டத்தை நீக்க வேண்டும் எனப் பரிந்துரை செய்தது. அதைத் தொடர்ந்து 2007 இல் ஐநாவின் நிறப் பாகுபாடுகளுக்கு எதிரான அமைப்பு இந்தச் சட்டத்தை முற்றிலுமாக நீக்க வேண்டும் என இந்தியாவுக்குப் பரிந்துரை செய்தது.

தற்போது 2025 மார்ச் மாதம், இந்தியா முழுவதும் ஏறக்குறைய 14 மாநிலங்களில் நடைமுறையில் உள்ள இந்த சட்டம், அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படைகளைக் கேள்விக்கு உள்ளாக்குவதாகக் கூறி, அறிவிப்பு நீக்கப்பட்ட மக்கள் சமூகங்களை, வரலாற்று ரீதியாகப் பாதிப்புக்குள்ளான அம்மக்களை மீண்டும் குறி வைப்பதாகக் கூறி, அச்சட்டத்தை நீக்குவது குறித்து அப்போதைய தலைமை நீதிபதி மாநிலங்களின் கருத்துக்களைக் கேட்டபோது, குஜராத் போன்ற மாநிலங்கள் இவை முறைகேடாகப் பயன்படுத்தப்படவில்லை என்றும், அவற்றின் தேவை இன்னும் மாநிலத்தில் இருக்கிறது என்றும் வாதிட்டன. பல மாநிலங்கள் அச்சட்டம் வழக்கொழிந்து போனதாகவும் அது தற்போது தேவையற்றது எனவும் வாதித்தனர். **தமிழ்நாட்டில் இன்னும் இச்சட்டம் நடைமுறையில் இருக்கிறது.** 2014 தேசிய பழங்குடி பட்டியல் இன மக்கள் ஆணையம் அமைத்த உண்மை அறியும் குழு கண்டறிந்த உண்மைகளும் அப்படியே உள்ளன.

**சீரற்ற வாழ்க்கையும், அரசால் சீரழிக்கப்படுகின்ற வாழ்க்கையையும் கொண்ட மக்களைப் பார்த்து சீர் மரபினர் என்று சொல்வது ஒரு நகை முரண்.**

♦♦♦

★ கட்டுரையாளர்
மூத்த வழக்கறிஞர்
சென்னை உயர்நீதிமன்றம்

# இந்தியாவில் பெண்களுக்கு எதிரான பாலினப் பாகுபாடு முழுவீச்சில்!

**சமந்தா**

**ஒரு நாட்டின் நாகரிகம், பண்பாட்டு வளர்ச்சி, முற்போக்கு நிலையை, அங்குள்ள பெண்களின் சமூகநிலையைக் கொண்டு அறிந்து கொள்ள முடியும்** என்பது பொதுமொழியாக அறிந்தேற்கப்படுகிறது. பாலின சமத்துவமின்மையும், பாலின இடைவெளியும் சமூக முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் முடக்கும் எதிர்மறை ஆற்றலாகச் செயல்படுகிறது. நம் பெண்கள் எவ்வளவுதான் துரத்திப் பிடிக்க முயற்சித்தாலும் இந்த 21ஆம் நூற்றாண்டிலும் கூட பாலின சமத்துவமும், பெண் விடுதலையும் நெருங்க முடியாத கனவுகளாகவே தொலைதூரத்தில் நிற்கின்றன. சமையல், வீட்டுவேலைகள், குழந்தை வளர்ப்பு, முதியோர் பராமரிப்பு என இத்தனை பாரங்களையும் முதுகில் சுமந்திருக்கும் பெண்கள், இத்தகைய சுமைகளில்லாத ஆண்களுக்கு இணையாக ஈடுகொடுத்து ஓடவேண்டும் என்று எதிர்பார்ப்பது எப்பேர்ப்பட்ட சமூக அநீதி என்பதை ஏன் நாம் கண்டும் காணாமல் கடந்துசெல்கிறோம். ஆனாலும் கூட பல பெண்கள் குடும்பப் பொதிகளுடன் ஆண்களுக்கு நிகராக மட்டும் இல்லாது, அவர்களைத் தாண்டியும் சாதனை படைக்கும் வீராங்கனைகளாகவும் இருக்கத்தான் செய்கின்றனர். வயிற்றில் குழந்தையுடன் ஓடும் ஒலிம்பிக் வீராங்கனைகளும்

இருக்கிறார்கள். ஆனாலும் கூட இந்த ஆணாதிக்கச் சமூகம் பெண்களுக்கு சம வாய்ப்புகளை அளிக்காமல், பெயரளவில் பசப்பிவிட்டு அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாகவே நடத்துகிறது. ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் உள்ளார். ஆனால் ஒவ்வொரு பெண்ணின் தோல்விக்குப் பின்னும் குடும்பச்சுமை உள்ளது என்பது தானே உண்மையாக உள்ளது. பெரும்பாலான பெண்கள் அரசியல் அகதிகளாகவும், ஏன் சமூக அகதிகளாகவும் வீட்டில் முடங்கிக் கிடப்பதற்கு யார் காரணம்? இந்த ஆணாதிக்க சமூகம் அவர்கள் மீது திணிக்கும் இந்தக் குடும்பப் பாரங்களும், மதமரபுசார் கட்டுப்பாடுகளும் தானே முதன்மையான காரணமாக உள்ளது.

பெரும்பாலான உழைக்கும் பெண்களுக்கு வெளி வேலை, அலுவலக வேலை என்பது கூடுதல் சுமையாகவே உள்ளது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்குக் காலை நேரம் மிகக் கொடுமையானது. அதிகாலையில் எழுந்து இரண்டு வேளைகளுக்கும் அவசர அவசரமாகச் சமைத்து வைத்துவிட்டு அவதிப்பட்டு அலுவலகத்துக்கு ஓடுகிறார்கள், அலுவலகம் விட்டு வீட்டுக்கு வந்தால் அடுத்தடுத்து வேலைகள் கியூவில் நிற்கும். இப்படித்தான் **உழைக்கும் பெண்களுக்கு ஓய்வு என்பது ஓய்வாக இல்லை, ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலைக்குத் தாவுவதாக உள்ளது.**

இதனால் படித்த திறமைசாலியான பல பெண்கள் திருமணம், குழந்தைப் பிறப்புக்குப் பின் சுமை தாங்க முடியாமல் வீட்டிலேயே முடங்கிவிடுகின்றனர். முழு நேரமும் அடுத்த வேளைக்கு என்ன சமைக்கவேண்டும் என்ற சிந்தனையே பெண்களை ஆக்கிரமிக்கும் விதமாக சமூகத்தால் நிர்பந்திக்கப்படும் போது எப்படி அவர்களால் மற்ற துறைகளில் சிறப்பாக செயல்படமுடியும்? இதனால்தான் ஒரு சில பெண்கள் இந்தச் சுமைகளே வேண்டாம் என்று திருமணம் செய்து கொள்ளாது தனியாகவே இருந்துவிடுகின்றனர். பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்ளாமல் தனியாகவே இருந்துவிட்டால் பிறப்புவிகிதம் குறைந்துவிடும், அது நாட்டுக்கு நல்லதல்ல, ஆரோக்கியமான சமூகத்திற்கு இது அழகல்ல என அக்கறை கொள்ளும் சமூகம் அதே அக்கறையைப் பெண்களின் குடும்பச் சுமையைக் குறைப்பதைப் பற்றி மட்டும் காட்டுவதில்லை.

இந்தியாவின் தேசியப் புள்ளியியல் அலுவலகம் 2019ல் முதன் முதலாக நேரப் பயன்பாட்டுக் கணக்கீட்டின் முடிவுகளை வெளியிட்டது. அது ஊதியமற்ற உழைப்பில் காணப்படும் பாலின இடைவெளியைத் தரவுகளின் அடிப்படையில் வெளிச்சம் போட்டுக் காட்டியது. 2024ல் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது கணக்கீட்டில் மொத்தம் 9 லட்சத்து 8 ஆயிரத்து 333 நபர்கள் பங்கேற்றுள்ளனர். இந்த **ஆய்வுமுடிவுகள் பெண்களில் 87% பேர் ஊதியமற்ற உழைப்பில் ஈடுபடுவதாகவும், ஆண்களில் 20.7% பேர் ஊதியமற்ற உழைப்பில் ஈடுபடுவதாகவும், மாற்றுப்பாலினத்தவர்களில் 54.1% பேர் ஊதியமற்ற உழைப்பில் ஈடுபடுவதாகவும் கூறுகின்றன.** குடும்ப உறுப்பினர்களை பராமரிப்பதற்கான ஊதியமற்ற உழைப்பில் ஈடுபடும் நபர்களின் விகிதாச்சாரம் பெண்களில் 34%ஆகவும், ஆண்களில் 17.9%ஆகவும் மாற்றுப்பாலினத்தவர்களில் 25.9%ஆகவும் உள்ளது.

**பெண்கள் ஒரு நாளைக்கு சராசரியாக 4.82 மணி நேரம் (289 நிமிடங்கள்) வீட்டு உறுப்பினர்களுக்கான ஊதியம் தராத வீட்டு வேலைகளைச் செய்துள்ளனர்.** ஆண் உறுப்பினர்கள் ஒரு நாளைக்கு 1.46 மணி நேரமும் (88 நிமிடங்கள்), மாற்றுப்பாலினத்தவர் 3.97 மணி நேரமும் (238 நிமிடங்கள்) இத்தகைய செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். அதாவது பெண்கள் ஆண்களைப் போல் 3.3 மடங்கு ஊதியம் பெறாத வீட்டுவேலைகளைச் செய்துள்ளனர். மாற்றுப்பாலினத்தவர் ஆண்களைப் போல் 2.7 மடங்கு ஊதியம் பெறாத வீட்டுவேலைகளைச் செய்துள்ளனர். பெண்கள் ஒரு நாளைக்கு 2.28 மணி நேரம் (137 நிமிடங்கள்) தங்கள் வீட்டு உறுப்பினர்களைப் பராமரிப்பதில் செலவிட்டனர், ஆண் உறுப்பினர்கள் 1.25 மணி நேரமும் (75 நிமிடங்கள்), மாற்றுப்பாலினத்தவர் 1.93 மணி நேரமும் 116 நிமிடங்களும் தங்கள் வீட்டு உறுப்பினர்களைப் பராமரிப்பதில் செலவிட்டனர். அதாவது பெண்கள் ஆண்களைப் போல 2.61 மடங்கு பராமரிப்பு வேலைகளை செய்துள்ளனர். மாற்றுப்பாலினத்தவர் ஆண்களைப் போல் ஒன்றரை மடங்கு பராமரிப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

ஊதியமுள்ள வேலை செய்பவர்கள் ஒரு நாளைக்கு 7.73 மணி நேரம் (440 நிமிடங்கள்) இதற்காக செலவிட்டனர். இதில்

ஆண் பங்கேற்பாளர்கள் 7.88 மணி நேரம் (473 நிமிடங்களும்), பெண் பங்கேற்பாளர்கள் 5.68 மணி நேரமும் (341 நிமிடங்களும்) மாற்றுப்பாலினத்தவர் 7.33 மணி நேரமும் (440 நிமிடங்கள்) ஊதிய வேலைகளுக்காக செலவிட்டிருந்தனர்.

ஊதியமற்ற வேலை, ஊதியம் தரும் வேலை இரண்டையுமே கணக்கில் கொண்டால் ஆண்கள் ஒரு நாளில் உழைப்பில் ஈடுபடும் நேரம் 10.59 மணி நேரமாகவும், பெண்கள் உழைப்பில் ஈடுபடும் நேரம் 12.76 மணி நேரமாகவும், மாற்றுப்பாலினத்தவர் உழைப்பில் ஈடுபடும் நேரம் 13.23 மணி நேரமாகவும் உள்ளது. மொத்தத்தில் ஆண்களை விட பெண்களும், பெண்களை விட மாற்றுப்பாலினத்தவர்கள் அதிக நேரம் வேலையில் ஈடுபடுவதை இதிலிருந்து தெரிந்துகொள்ளமுடியும். இது வெறும் மாதிரி ஆய்வு தான். ஒட்டு மொத்த இந்தியாவையும் ஆய்வுக்கு உட்படுத்தினால் நிலவரம் இன்னும் மோசமாக இருக்கும் என்பதை எளிதில் கணிக்கமுடியும். நேரப் பயன்பாடு பற்றிய 2019, 2024 ஆய்வு முடிவுகள் இரண்டுமே வெறும் செய்திகளாக வெளிவந்தனவே தவிர அவை இந்திய சமூகத்தில் எந்த சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. இதுவும் உடனடி கவனத்துக்கு அவசியமில்லாத விசயங்களின் பட்டியலுக்கு நகர்த்தப்பட்டதைத் தான் இந்த அலட்சியம் சுட்டிக்காட்டுகிறது.

இந்தியாவில் குடும்பத்திற்கான பெண்களின் ஊதியமற்ற வீட்டுவேலைகள் குடும்ப நிர்வாகத்துக்கான செலவுகளைக் கணிசமாகக் குறைக்கிறது. இதுவே இந்தியாவில் குறைந்த கூலிக்கான கட்டமைப்பை உறுதிசெய்யும் முக்கியப் பொறிமுறையாக உள்ளது. இந்தியாவின் சாதிய முதலாளித்துவம் சாதிப் படிநிலைகள், ஆணாதிக்கம் ஆகியவற்றின் மூலமே மலிவான உழைப்புச் சக்தியையும், அதன் மூலம் கணிசமான இலாபத்தையும் நிலை நிறுத்தும் கட்டமைப்பாகவே உள்ளது. **ஊதியமற்ற உழைப்பு, ஊதிய உழைப்பு என இரண்டு வகையிலும் சுரண்டும் கட்டமைப்பாக இந்தியாவின் சாதிய ஆணாதிக்க முதலாளித்துவம் செயல்படுகிறது**. ஒவ்வொரு சாதிப் படிநிலையும் அதற்கு கீழே உள்ள சாதியினரின் உழைப்பைச் சுரண்டும் வகையில் செயல்படுகிறது.

இந்தியாவில் பெண்களின் சமூகநிலை என்பது அனைத்துப் பெண்களுக்கும் ஒரே மாதிரியாக இல்லை. அவர்கள் சார்ந்த

சாதி, மதம், தொழில்முறை ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபட்ட நிலைகளைக் கொண்டதாக உள்ளன. இந்தியாவின் சாதியக் கட்டமைப்பால் ஆணாதிக்கமும் சாதியப் படி நிலைகளைக் கொண்டதாக உள்ளது. இந்தியாவில் ஒவ்வொரு சாதிப் படிநிலையிலும் உள்ள பெண்கள் ஆண்களை விடக் கீழ் நிலையில் உள்ளனர். இந்தியாவில் பெண்கள் எதிர்கொள்ளும் பாலின சமத்துவமின்மையும் சாதியப் படிநிலைகளைக் கொண்டதாகவே உள்ளது.

ஆண்களுக்கு நிகரான சம வாய்ப்புகள் பெண்களுக்கு கிடைக்கவில்லை என்ற போதும், பெண்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளையும் அதிகம் பெறக்கூடிய நிலையில் உயர்சாதிப் பெண்கள் உள்ளனர். இவர்களுக்கு அடுத்த நிலையில் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண்களும், இவர்கள் அனைவரையும் விடப் பின் தங்கிய நிலையில் தலித் பெண்களும் உள்ளனர். தொழிலாளர் பங்கேற்பில் உயர்சாதிப் பெண்களை விடத் தலித் பெண்களே அதிகம் பங்கேற்றாலும் கூட, உயர் ஊதியம் தரும் வேலைகளில் ஈடுபடுபவர்களாக உயர்சாதிப் பெண்கள் உள்ளனர். குறைந்த ஊதியம் தரும் திறன் குறைந்த உடலுழைப்பு வேலைகளிலே தலித் பெண்கள் உள்ளனர். . உயர் சாதி முதலாளித்துவப் பெண்ணும், தலித் தினக்கூலிப் பெண்ணும் வெவ்வெறு சமூக நிலையில் வாழ்பவர்கள். பாலின சமத்துவமின்மையின் தீவிரம் சாதிப்படி நிலையில் மேலிருந்து கீழே செல்ல செல்ல அதிகமாகிறது. இந்தியாவின் சாதிய முதலாளித்துவத்தில் பாலின சமத்துவமின்மையின் முதல் படியில் உயர்சாதி முதலாளித்துவப் பெண்ணும் கடைசிப் படியில் தலித் தினக்கூலிப் பெண்ணும் உள்ளனர். **சாதி, பொருளாதாரநிலை, பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் சமூகத்தின் கடைசிப் படிநிலையில் உள்ள தலித் பெண்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறை மூன்று முகங்களைக் கொண்டதாக உள்ளது.**

2022ல் ஆக்ஸ்ஃபாம் இந்தியாவால் வெளியிடப்பட்ட பாகுபாட்டைப் பற்றிய அறிக்கை அதிர்ச்சியூட்டும் தகவல்களை அளித்துள்ளது. 2005 முதல், 2020 வரை 15 ஆண்டுகளுக்கான தரவுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்தியாவில் முழு வீச்சில் பாலினப் பாகுபாடு நடைமுறையில் இருப்பது தெரியவந்துள்ளது. கிராமப்புறங்களில் மட்டுமல்லாது, நகர்ப்புறங்களிலும் உள்ள

அனைத்து வகை வேலைவாய்ப்புகளிலும் பாலின அடிப்படை யிலான பாகுபாடு மிக அதிகமாகக் காணப்படுகிறது. மேலும், தகுதிவாய்ந்த பெண்களில் கணிசமான பகுதியினர் "குடும்பப் பொறுப்புகள்" அல்லது சமூக விதிமுறைகள், சாதிக்குள் அந்தஸ்து, படிநிலை சமூக, குடும்ப மரபுகள் போன்றவற்றுக்கு இணங்க வேண்டியதன் காரணமாகத் தொழிலாளர் சந்தையில் சேரத் தயாராக இல்லை, அவை பெரும்பாலும் தொழிலாளர் படையில் பங்கேற்பதற்கு முரணாக உள்ளன. ஆண்களைப் போலவோ அல்லது அதற்கு மேற்பட்ட தகுதிகளைக் கொண்ட பெண்களில் பெரும் பகுதியை வேலைக்கு வெளியே தங்க வைப்பது ஆணாதிக்கமாகும், இது காலப்போக்கில் எந்த முன்னேற்றத்தையும் காட்டவில்லை என்கிறது அறிக்கை.

பெண் பாலினம் தொடர்புடைய தப்பெண்ணங்கள் காரணமாகப் பெண் விண்ணப்பதாரர்கள் முதலாளிகளால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. பல முதலாளிகள் நியாயமாகவும் வெளிப்படையாகவும் இருந்தபோதிலும், தாமதமான வேலை நேரம், தொலைதூரப் பகுதிகளுக்குப் பயணம், வேலை நிலைமைகள் போன்ற வேலைத் தேவைகள் காரணமாகப் பெண்களை விட ஆண்களை வேலைக்கு அமர்த்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகக் கருதுகின்றனர். 201920ல் **வேலைவாய்ப்பில் தலித்துகளுக்கு எதிரான பாகுபாடு 39.3%ஆகவும், முஸ்லிம்களுக்கு எதிரான பாகுபாடு 3.7%ஆகவும், பெண்களுக்கு எதிரான பாகுபாடு 100%ஆக இருப்பதாக மதிப்பிட்டுள்ளது**. வேலைவாய்ப்பில் பெண்களுக்கு எதிரான பாலினப்பாகுபாடு 15 ஆண்டுகளில் எந்த முன்னேற்றமும் அடையவில்லை. வேலைவாய்ப்பில் பெண்களுக்கு எதிரான பாலினப்பாகுபாடு 2004-05ல் 100%ஆக இருந்தது 2018-19ல் 99.5%ஆக குறைந்து 2019-20ல் மீண்டும் 100%ஆக உயர்ந்துள்ளது.

பெண்களுக்கு எதிரான பாகுபாடு மிக அதிகமாக உள்ளது என்பதையே பகுப்பாய்வு வெளிப்படுத்துகிறது, மதம் அல்லது சாதி அடிப்படையிலான துணைக் குழுக்களிடையே இதில் எந்த வித்தியாசமும் இல்லை; அதாவது, பெண்களின் சமூக பொருளாதார இருப்பிடத்தைப் பொருட்படுத்தாமல் அனைத்துப் பெண்களும் மிகவும் பாகுபாடு காட்டப்படுகிறார்கள் என்கிறது இந்த அறிக்கை.

2019-20 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் படைக் கணக்கெடுப்பின் (PLFS) தரவுகளின் படி, கிராமப்புற, நகர்ப்புறப் பகுதிகளில் நிலையான ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளில் ஒரு பெரிய பாலின இடைவெளி காணப்படுகிறது. 15 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் 53.8% பேர் நிரந்தர ஊதியம் பெறும் வேலைகளில் ஈடுபட்டிருந்தாலும், பெண்களில் 23.3% பேர் மட்டுமே நிரந்தர ஊதியம் பெறும் வேலைகளில் உள்ளனர்.

இதுமட்டுமல்லாமல் கிராமப்புறம், நகர்ப்புறங்களில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே கணிசமான ஊதிய இடைவெளியும் காணப்படுகிறது. 201920 ஆம் ஆண்டில் நகர்ப்புறங்களில் நிரந்தர வேலைவாய்ப்பில் கூட ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான வருவாயில் குறிப்பிடத்தக்க இடைவெளி காணப்படுகிறது. ஆண்களின் சராசரி வருவாய் 19,779 ரூபாயாகவும், பெண்களுக்கு இது 15,578 ரூபாயாகவும் உள்ளது. சுயதொழில் வேலைவாய்ப்புகளில் ஆண்களின் சராசரி வருவாய் 15,996 ரூபாயாகவும், பெண்களின் சராசரி வருவாய் 6,626 ரூபாயாகவும் உள்ளது. ஆண்களின் வருவாய் பெண்களை விடக் கிட்டத்தட்ட 2.5 மடங்கு அதிகமாக உள்ளது. தற்காலிக வேலைகளில் ஆண்களின் சராசரி வருவாய் 9,017 ரூபாயாகவும், பெண்களின் சராசரி வருவாய் 5,709 ரூபாயாகவும் உள்ளது.

நகர்ப்புறங்களைக் காட்டிலும் கிராமப் பாலின அடிப்படையிலான பாகுபாடு கடுமையாக உள்ளது. நிரந்தர வேலைவாய்ப்புகளில் கிராமப்புற ஆண்களின் சராசரி மாத வருமானம் 13,600 ரூபாயாகவும், கிராமப்புற பெண்களுக்கு சராசரி மாத வருமானம் 9,757 ரூபாயாகவும் உள்ளது. கெடுவாய்ப்பாக, 2004-05 முதல் கிராமப்புறங்களில் பாலினப் பாகுபாட்டின் அளவு அதிகரித்துள்ளது. கிராமப்புறங்களில் சுயதொழில் செய்பவர்களில் ஆண்கள் பெண்கள் சம்பாதிப்பதை விட இரண்டு மடங்கு சம்பாதிக்கிறார்கள். கிராமப்புறங்களில் தற்காலிக வேலைகளில் ஆண்கள் பெறும் சராசரி வருவாய் 7,463 ரூபாயாகவும் பெண்கள் பெறும் சராசரி வருவாய் 4,604.6 ரூபாயாகவும் உள்ளது.

கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் தற்காலிக வேலைகளில் ஈடுபடும் ஆண்கள், பெண்களுக்கு இடையிலான ஊதிய இடைவெளி 50% முதல் 70% வரை இருப்பது கவலையளிக்கிறது. நிரந்தர வேலைகளில் உள்ள ஆண்கள்

பெண்களுக்கு இடையிலான வருவாய் இடைவெளி 20 முதல் 60% வரை அதிகமாக உள்ளது. இதற்கு பெண்கள் கீழ் மட்ட வேலைகளைப் பெறுவதும், பதவி உயர்வுகளைப் பெறாததும் காரணமாக உள்ளது. சுயதொழில் செய்பவர்களைப் பொறுத்தவரை, இந்த வேறுபாடு மிக அதிகமாக உள்ளது, ஆண்கள் பெண்களை விட 4 முதல் 5 மடங்கு அதிகமாகச் சம்பாதிக்கிறார்கள். நகர்ப்புறங்கள், கிராமப் புறங்கள் இரண்டிலும் உள்ள எல்லாவிதமான வேலைகளிலும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே காணப்படும் ஊதிய இடைவெளிக்கு 90%க்கும் மேல் பாலின பாகுபாடே காரணம் என்கிறது இந்தப் பகுப்பாய்வு. ஆகவே இந்தியாவில் வேலைவாய்ப்புகளிலும், ஊதிய இடைவெளிகளிலும் காணப்படும் பாலினப் பாகுபாட்டை முற்றிலும் களையும் விதத்தில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இந்தியாவில் ஊதியமற்ற உழைப்பில் பெண்கள் அதிகம் ஈடுபடுவதால் அவர்கள் பொருளாதாரத் தற்சார்பு இல்லாமல் குடும்பத்தில் உள்ள ஆண்களைச் சார்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஜிடிபி கணக்கீட்டு முறை பெண்களின் ஊதியமற்ற உழைப்பைப் புறக்கணிக்கிறது. குடும்பத்திற்கான பெண்களின் ஊதியமற்ற உழைப்பு, நாட்டின் பொருளாதாரத்திற்கு நேரடியாகப் பங்களிக்கும் விதமாக உழைப்புச் சக்தியில் அதிகளவில் பங்கேற்க விடாமல் அவர்களை முடக்கிப்போடுகிறது.

குடும்ப வேலைகள், குழந்தை வளர்ப்பு, முதியோர் பராமரிப்பு ஆகிய பணிகளில் ஆண்களிடமும் சம பொறுப்பைக் கோரும் விதமான சட்ட முன்னெடுப்புகள் மிக அவசியமாக உள்ளது. அதை நாம் குடியுரிமையைப் பிடுங்கும் பாசிச நச்சு சக்திகளிடம் எதிர்பார்க்க முடியாது. இந்த விசயங்களில் கியூபா நமக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

1975ல் கியூபாவில் குடும்பச் சட்டநெறிமுறை உருவாக்கப்பட்டது. இது குடும்பத்தில் பெண்குழந்தைகள், பெண்கள் மீதான பாகுபாட்டைத் தடைசெய்தது. கியூபப் பெண்கள் வீட்டுக் கடமைகளைத் தங்கள் வாழ்க்கைத் துணைவர்களுடன் நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளும் விதமாகவே 1975 குடும்பச் சட்டநெறிமுறை வடிவமைக்கப்பட்டிருந்தது. கணவன் மனைவி இருவரும் குடும்பத்தில் சமமான பொறுப்புகளைப்

பகிர்ந்து கொள்ளவேண்டும் எனவும், அதுவே இளம் தலைமுறை யினருக்குக் கல்வி அடிப்படையிலான முன்னுதாரணமாக அமையும் எனவும் 1975 குடும்பச் சட்ட நெறி குறிப்பிடுகிறது. கியூபப் பெண்கள் பல்வேறு சமூக இனப் பின்னணியிலிருந்து (ஆஃப்ரிக்கா, இலத்தீன் அமெரிக்கா) வந்தவர்கள். சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட விளிம்பு நிலையில் உள்ள கியூபப் பெண்கள், எல்ஜிபிடி சமூகத்தினர் உட்பட அனைத்துக் குடிமக்களுக்கும் இலவசமான உயர் கல்வியையும், சமமான முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளையும் கியூப அரசு வழங்கியுள்ளது. ஆனால் இந்தியாவில் கல்வித்துறையில் அதிகரித்து வரும் தனியார்மயம் பெண்களின் கல்வி வாய்ப்புகளை, குறிப்பாகத் தலித் பெண்களின் கல்வி வாய்ப்புகளையும், முன்னேற்றத்தையும் தடுப்பதாக உள்ளது. கல்வி வாய்ப்புகளில் காணப்படும் பாலினப் பாகுபாடுகளை நீக்க தொடக்கக் கல்வியிலிருந்து, உயர் கல்வி வரை அனைவருக்கும் இலவசப் பொதுக் கல்வி அளிக்க வேண்டும்.

பெண்களின் அரசியல் பங்கேற்பில் கியூபா உலகளவில் முன்னிலையில் உள்ளது. **கியூபாவில் தேசிய சட்ட சபையில் பெண்களின் பங்கேற்பு விகிதம் 55%ஆக உள்ளது. இந்தியாவில் மக்களவையில் பெண்களின் பங்கேற்பு விகிதம் 13.6%ஆகவும், மாநிலங்களவையில் 17%ஆகவும் உள்ளது.** இந்தியாவில் பெரும்பாலான பெண்கள் அரசியல் அகதிகளாக இருப்பதற்குக் குடும்பச் சுமைகள் தான் முதன்மையான காரணமாக உள்ளது.

கியூபாவைப் போல் இந்தியாவிலும் குடும்ப வேலைகளிலும், குழந்தைகளைப் பராமரிப்பதிலும் ஆண்களின் சம பங்களிப்பைக் கோரும் வகையில் குடும்பச் சட்ட நெறிமுறை உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தவேண்டியது உடனடி அவசியமாக உள்ளது. அதுவே பெண்களின் பொருளாதாரத் தற்சார்பு, முன்னேற்றத்துக்கான வாய்ப்புகளைத் திறக்கும். அதன் மூலமே உழைப்புச் சக்தியிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் பெண்களின் முழுமையான பங்கேற்பை உறுதிசெய்யமுடியும்.

♦♦♦

★ கட்டுரையாளர்
முற்போக்கு எழுத்தாளர்

# விண்ணோடி

ரேவதி சுயம்புலிங்கம்

கமலினிக்கு இன்றுடன் எழுபத்தைந்து வயது நிறைவடைகிறது. அவள் டென்மார்க் நகரத்திற்கு நகர்ந்து நாற்பது வருடங்கள் ஆகின்றன. கணவன் செல்வநாதன் இறந்து பத்து ஆண்டுகள் ஆகின்றன. கமலினியின் கனவு ஓர் எழுத்தாளராவது. கடைசியில், டென்மார்க்கில் ஓர் ஆங்கிலப்பத்திரிகை நிறுவனத்தில் பத்திரிகையாளராக இணைந்து பணியாற்றும் கனவாகச் சுருங்கிப் போயிருந்தது. எழுதுவதற்கான வாழ்வியலும் குணங்களையும் வளர்த்துக்கொள்ள அவள் போராடினாள். பத்திரிகையாளராக நிலைபெற்ற பின் இரண்டு நாவல்களை ஆங்கிலத்தில் எழுதினாள். அதில் இரண்டாவது நாவல் அதிகப் புகழ்பெற்றது. அவள் பல நகரங்களுக்கு விருந்தினராக அழைக்கப்பட்டுப் பாராட்டப்பட்டாள். கணவன் செல்வநாதன் அவளை அவ்வண்ணம் பார்த்துக்கொண்டார் என்று சொல்லவேண்டும். எழுத்தாளராவது தான் அவளுடைய இலட்சியம் என்பதை அறிந்தது முதல் அவர் அதில் ஈடுபடும்படி அவளை ஊக்குவித்துக்கொண்டே இருந்தார். வருமானமும் தேவைப்பட்டதால் பத்திரிகைப் பணியும் முக்கியமானதாக இருந்தது. ஓய்வு பெற்ற இரண்டு ஆண்டுகளிலேயே செல்வநாதன் இறந்து போனார். வீட்டு வாசலில் இருந்து இறங்கித் தெருவில் நடந்தவர் மாரடைப்பு ஏற்பட்டு மயங்கி வீழ்ந்த இடத்திலேயே உயிர்பிரிந்தார்.

செல்வநாதன் இல்லாமல் தன்னால் வாழமுடியும் என்று கமலினியால் நினைத்துப் பார்க்கமுடியவில்லை. இரண்டு பெண்களும் வெவ்வேறு நாட்டில் வாழ்கிறார்கள். இந்த எழுபத்தைந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடவேண்டும் என்று வற்புறுத்தியவர்கள், நாள் நெருங்கும்பட்சத்தில் வெவ்வேறு காரணங்கள் சொல்லி டென்மார்க் வரும் திட்டத்தை ரத்துச் செய்துவிட்டார்கள். அவள் முன் இருக்கும் பெரிய கேக்கை என்ன செய்வது என்று தெரியாமல் பார்த்துக்கொண்டே இருந்தவள் அதைத் தனியே வெட்டும் எண்ணத்தைக் கைவிட்டு எழுந்து அதை ஃப்ரிட்ஜில் வைத்துவிட்டு வெளியே ஒரு நடை போக விரும்பினாள். தன் வீட்டிலிருந்து வெளியே வந்து உலகத்தைப் பார்த்தவளுக்கு அதன் வெறுமை இன்னும் கூடியதாக இருந்தது. குளிர் அதிகமாய் வீசியது. அவள் வீட்டை ஒட்டி ஓர் ஓடை ஓடுகிறது. அதன் கரை வழியே ஒரு கிலோமீட்டராவது நடந்து வரலாம் என்று நினைத்தவளால் ஓர் அடி கூட நடப்பதற்கான மன ஊக்கம் இல்லாமல் இருந்தது. மூத்தவள் சசி தமிழகத்தில் இருக்கிறாள். இந்நேரம் உறங்கிக்கொண்டிருப்பாள். இளையவள் மத வேலைக்காக அலுவலகத்திற்குக் காரில் சென்று கொண்டிருக்கும் நேரம். அழைத்தால் துண்டித்துவிட்டுப் பிறகு அழைக்கிறேன் என்று சொல்லிவிடுவாள். தன் பிறந்த நாள் அவளுக்கு நினைவில் இல்லாமல் போயிருக்கலாம் என்று நினைத்துக்கொண்டே கமலினி சற்று முன் பூட்டிய வீட்டைத் திறந்து உள்ளே வந்து கதவைச்சாத்தினாள். தன் தோழி வசந்தியை அழைத்தாள். எந்த நேரம் என்றாலும் அவளைத்தான் அழைக்கமுடியும். அவள்தான் மனம் சுளிக்காமல் அழைப்பை ஏற்பாள். ‘கமலினி, வாழ்த்துகள். கொஞ்ச நேரம் கழிச்சி அழைக்கலாம்னு நெனைச்சேன். நீயே கூப்பிட்டிட்ட. என்ன ஆச்சு. ஏதும் பிரச்சனை இல்லையே’, என்றாள். கமலினிக்கு மனம் சட்டென்று இறகு போல காற்றில் ஏகியது. ’75 பாரமில்ல வசந்தி?’, கேட்டாள். ‘எனக்கு இல்லை. உன் புருஷன் உன்னைய உள்ளங்கையில வச்சி தாங்குனாரு. எம் புருஷன்டேர்ந்து எப்பத் தப்பிக்கலாம்னு நினைச்சிக்கிட்டு இருந்தேன். இப்பத்தான் எனக்கு வாழத்தொடங்குற மாதிரி இருக்கு’, என்று வெளிப்படையாய்ச் சொன்னாள். ‘ஆமா வசந்தி. பிறந்த நாளும் அதுவுமா கூட யாரும் இல்லாதது என்னவோ போல இருக்கு. உன்னைய வரவழைச்சிருக்கலாம்.’,

என்று கமலினி பெருமூச்சுடன் சொன்னாள். ‘இங்க பாரு. என் பெர்த்டேக்கு என் பையன் அவன் கூடத்தான் இருக்கனும்னு சொல்லிட்டா. மருமகள் பாயசம் செஞ்சி வச்சிருந்தா. இந்த ரெண்டு நாள் வித்தியாசம் இல்லேன்னா நான் வந்திருப்பேன். அடுத்த வருசத்துக்கு அப்படித் திட்டம் போட்டுருவோம். நீ என்ன பண்ணுன, சொல்லு’, என்றதும் கமலினி மகள்கள் வராததையும் தன் வெறுமையையும் சொல்லித் தீர்த்தாள். ‘ஆமா, உன் பொறந்த நாளுக்காவது யாராவது உங்கூட இருந்துருக்கலாம். வீடியோ கால் வா’, என்றாள். உடனே கமலினி உற்காசமாய்ச் சென்று தன் மீது ஜன்னல் வழியே வெளிச்சம் படும்படி நின்று கொண்டு ஃபோனின் கேமராவை இயக்கினாள். ‘யப்பா, எப்படி இருக்கிற பாரு. எழுபத்தைஞ்சுன்னு நீயே சொன்னாத்தான் யாருமே நம்புவாங்க. நான் எப்படி இருக்கேன் பாரு. முடிக்கு டை அடிக்கிறத விட்டுட்டேன். அவ்வளவு அழகா இருக்க, கமலினி. இந்தத் தோடு, நெக்லஸ் எல்லாம் உன்னைய நதிக்கரையில இருக்கிற ஒரு அம்மனைப் போலக் காட்டுது. சொல்றேன்னு தப்பா நெனைச்சிக்காத. இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாம்’, என்று வசந்தி சொன்னாள். கமலினி உண்மையாகவே வெட்கப்பட்டாள். யாராவது தன்னைக் கூடவே இருந்து ஒவ்வொரு நாளும் அப்படிச் சொல்லிக்கொண்டிருந்தால் இன்னும் கொஞ்சம் ஆண்டுகள் தெம்பாய் வாழ்ந்துவிடலாம். இந்த நிலையிலேயே எப்படி வாழ்வைத் தொடர்வது என்று கமலினிக்குக் குழப்பமாகத் தான் இருந்தது.

இருவரும் ஒரு மணி நேரத்திற்கு மேல் பேசிக் கொண்டிருந்தார்கள். உரையாடலில், பழைய ஆண் நண்பர்களைப் பற்றியும், இளம் பிறந்த நாள் கொண்டாட்டங்களையும் நினைவுபடுத்திப் பேசினார்கள். இருவருக்குமே நினைவுகளைத் துல்லியமாகப் பகிர்ந்துகொள்ளும் அளவிற்கு நல்ல உடல்நலம் இருந்தது என்பதை இருவருமே உணர்ந்தார்கள். அழைப்பை முடிக்கப் போகையில் நினைவிற்கு வந்தவளாய், வசந்தி சொன்னாள். ‘ஏய் கமலினி. என்னோட தூரத்துச் சொந்தம் விமலன். டென்மார்க் வரான். ஸ்பேஸ் சயின்ஸ் சம்பந்தமா டென்மார்க்ல கருத்தரங்கமாம். அங்க உங்கூட வந்து தங்கச் சொல்லட்டுமா. நீயும் தனியாத்தான இருக்க. அவனுக்கு முப்பத்தைஞ்சு வயசு இருக்கும். நல்ல பையன் தான். என்னமோ தெரியல. போன வருசம் டைவர்ஸ் பண்ணிட்டான். கேரியர்ல

கவனம் செலுத்தனும் அத்தைன்னு சொல்லிக்கிட்டு இருந்தான். இந்தச் சின்னதுங்கெல்லாம் பொசுக்கு பொசுக்குன்னு டைவர்ஸ் பண்ணிடுதுங்க. எனக்கும் விவரம் இருந்துருந்தா நானும் என் புருஷன விவாகரத்து பண்ணியிருப்பேன்', வசந்தி சொன்னதும், 'சரி திரும்ப மொதல்லேர்ந்து ஆரம்பிக்காத. என் அட்ரச திரும்ப அனுப்பிவைக்கிறேன். பேரு என்ன சொன்ன. விமலன் தான. வைக்கிறேன். பசிக்குதுடி', என்று சொல்லிவிட்டு தொலைபேசியைத் துண்டித்தாள். விமலன் வருவது அவள் எதிர்பார்த்திருக்க ஒரு நல்ல காரணமாக இருந்தது. வீட்டை ஒழுங்கு செய்யவேண்டும். விமலனுக்கு ஓர் அறையை நேர் செய்யவேண்டும். கொஞ்சம் ஆண்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் எல்லாம் வாங்கவேண்டும் என்று நினைத்தவள், வேக வேகமாகச் சாப்பிட்டாள். ஒரு கேக் துண்டை வெட்டிச் சாப்பிட்டுக்கொண்டு, காரை வெளியே எடுத்தாள். அதற்குள் இளைய பெண் அழைத்தாள், 'அம்மா ஹேப்பி பெர்த்டே', என்றாள். 'வந்துருக்கனும்மா. ரொம்ப மிஸ் பண்ணுறேன்', என்று சொன்னது போலியாக இருந்தது. 'தாங்க்ஸ்', என்று சொல்லிவிட்டு, 'ஷாப்பிங் போறேன். அப்புறம் கூப்பிடட்டுமா', என்று சொல்லித் துண்டித்தாள். அன்றைய நாளுக்குக் கமலினிக்கு ஓர் உருப்படியான வேலை கிடைத்துவிட்டதாகவே நினைத்தாள். ஒரு நல்ல பெர்ஃபியூம் வாங்கவேண்டும். ரூம் ஸ்பிரே, சோப், பெட் கவர், வால் ஹேங்கிங் மாத்தனும். மனதில் நீளமானதொரு பட்டியல் போட்டாள். அவளுடைய கணவனின் ரசனை ஒட்டியே தான் சிந்திப்பதாய்த் தோன்றியது. ஆம், செல்வா இறந்து ஆண் தொடர்பான பொருட்கள் எதுவுமே வாங்கவில்லை என்பதும் அவளுக்கு நினைவிற்கு வந்தது. பொறுமையாக ஷாப்பிங் செய்தாள். தன் கணவன் என்றால் அவருக்கான தேவைகளை வாங்க ஒரு முழு நாள் எடுத்துக் கொள்வார்கள். இருவரும் ஒருவருடன் ஒருவர் கையைக் கோர்த்துக்கொண்டு திரிவது அவர்களுக்கே புது காதலர் போன்று தோன்றும். 'யப்பா, நாம ரெண்டு பேரும் எப்பவும் இப்படித்தான் ஒட்டிக்கிட்டு திரியுறோம், கமல். ஆனா ஏதோ ஒன்னு எனக்குத் தெரியாத மர்மமான அழகு ஒன்னு இன்னும் உங்கிட்ட இருந்துட்டே இருக்கு', என்று செல்வா சொன்னதுமே அவளுக்கு அது அதிக நாணம் கலந்த ஒரு புன்சிரிப்பை வரவழைக்கும். இருவரும் ஒருவர் கண்ணில் இன்னொருவர் ஆழமாய் நுழைந்து பார்த்துக்கொள்ளும் தருணம் அது.

அவ்வப்பொழுது அவள் உதடுகள், ‘விமலன்’, என்று அவன் பெயரை நினைவுபடுத்திக்கொண்டது. நல்ல சாப்பாடு கூடச் சமைத்துக் கொடுக்கலாம். அவனுக்கு என்ன பிடிக்கும் என்று வசந்தியிடமே கேட்டுவிடலாம். இப்பொழுது உடனே அழைத்தால் நன்றாயிருக்காது. அடுத்த முறை பேசும்போது, பேச்சோடு பேச்சாகக் கேட்டுவிடலாம். ஏன் இப்படி ஒரு புளகாங்கிதம். தனிமை வெறுத்துப் போய்விட்டது. ஆனால், அவள் யாரையும் பிறகு சந்திக்காததற்குக் காரணம், செல்வாவைப் போல யாருமே உண்மையாக அவளிடம் அன்பு காட்டமாட்டார்கள். அவள் வயதுப் பெண்களின் கணவர்கள் எல்லோருமே வசந்தியின் கணவர் போலவே இருந்தார்கள். செல்வா மட்டும் விதி விலக்கு. நகப்பூச்சு போட்டுவிடுவார். தன் ஒப்பனை தொடர்பான எல்லாமே அவருக்குத் தெரியும். எந்த நிறத்தில் உதட்டுச்சாயம் பூசுவாள் என்பதைக் கூட அவர் அறிந்து வைத்திருப்பதுடன் பல சமயங்களில் அவரே அவளை அழகு செய்வதில் ஈடுபட்டுவிடுவார். கமலினிக்குத் தன்னை ஒப்பனை செய்து கொள்வதுதான் முழுநாள் வேலை. தொழில்முறை ஒப்பனையாளர் போலவே நல்ல தரமான ஒப்பனை மேசை, பை, கண்ணாடி வைத்திருந்தாள். செல்வாவும் கமலினிக்குத் தன் அழகின் மீது இருக்கும் நம்பிக்கை ஆர்வம் குறித்து அறிந்து வைத்து அவள் மனமொப்பச் செயல்பட்டார். அவர் வாழ்க்கையில் அவர் சந்தித்த முதல் பெண்ணே கமலினி தான். அவர் அம்மா இளம் வயதிலேயே இறந்து விட்டார். அப்பா தான் வளர்த்துவந்தார். அப்பா, தாத்தா, மாமா மூவருக்கு இடையே வளர்ந்தவர் செல்வா. கமலினியைப் பார்த்ததுமே பிடித்துப் போ யிற்று. கமலினியின் அறியாமையும் குழந்தைமையும் அவளிடம் அவரை ஒப்படைக்கச் செய்தது. ஆனால் வாழ்க்கை நீள நீள, கமலினிதான் தன்னைச் செல்வாவிடம் ஒப்படைத்திருந்தாள். செல்வாவின் ஆண்மைக்கு ஈடு இணை என்று யாரையுமே இந்த உலகில் சொல்லமுடியாது என்று கமலினி உறுதியாக நம்பினாள்.

அவ்வப்பொழுது வசந்தியுடன் பேசிக்கொண்டிருந்தாள். விமலனைப் பற்றி அவள் ஏதாவது ஒரு துணுக்குச் செய்தி சொல்வாள். அதைக் கேட்டு அதற்கேற்றபடி அசைபோட்டு ஏற்பாடுகள் செய்யவேண்டும். ஒரு ப்ராஜெக்ட் போல அவள் அதை நுணுகி நுணுகிச் சிந்தித்துச் செயல்பட்டாள்.

விமலன் வருவதற்கு ஒரு வாரம் முன்பு, சசி வந்தாள். அவள் அவ்வப்பொழுது திடீரென்று வருவதுண்டு. கமலினியைச் சந்திப்பது நோக்கமென்றாலும் அதற்கெல்லாம் நேரமெடுத்துக் கொண்டு வரமாட்டாள். தன் வேலையாக வந்தால், அந்த நேரத்தை, பணத்தைச் சிக்கனப்படுத்திக்கொண்டு கமலினியைப் பார்த்துவிட்டுப் போவாள். மிகவும் சிக்கனமானவள். கமலினியை அவ்வப்பொழுது அவள் கடிந்துகொள்வாள். ‘இப்ப எதுக்கு எவனோ ஒருவன் வாரான்னு, அதுவும் முன்ன பின்ன பாத்ததுல்ல. இப்படி ரூம ரெடி பண்ணி வச்சிருக்க’, என்று சிடுசிடுவெனக் கடிந்தாள். கமலினி பொருட்படுத்தவில்லை. கமலினி, சசி சமைத்துவைத்ததையெல்லாம் சாப்பிட்டுவிட்டு டையசின் மாத்திரைகளையும் கொஞ்சம் கூடவே எடுத்துக்கொண்டாள். சசி கிளம்பிச்செல்லும் வரை தனக்கு வயிறு அளைந்துகொண்டே இருக்கும். தயாரிக்கும் உணவும் அப்படி, அவள் பேசும் பேச்சும் அப்படி. தன் வீட்டில் அவள் வந்து நின்று இப்படிச் சட்டம் செய்யவில்லை. சசியின் இயல்பு அப்படி. அப்பா இறந்ததும் என்னவோ கமலினியைப் பார்த்துக்கொள்ளும் முழுப்பொறுப்பு அவளுக்கு வந்துவிட்டது போல ஓர் அங்கலாய்ப்பு. அவளால் கமலினியைப் பார்த்துக்கொள்ளமுடியவில்லையே என்ற எரிச்சல் வேறு.

கிளம்பும் முன், சசி கமலினியிடம், ‘ஒரு காபி கொடேம்மா’, என்றாள். கமலினி அருமையாகக் காபி போடுவாள். காபிக்கொட்டைத் தூளை அதற்கென இருக்கும் வடிகட்டி பாத்திரத்தில் இட்டு வெந்நீரைக் கீழே இட்டு அதை அடுப்பில் வைத்தால் பொங்கி ஊற்று போல காபி கசாயம் மேலே வரும். மணம் வீட்டைத் தூக்கும். நன்றாகக் கொதித்த பாலை டிகாக்ஷன் விழுங்கிவிடுவது போல ஊற்றினால் போதும். அது வயிற்றில் இறங்குவதும் அப்படித்தான். வழுக்கி இறங்கும் ஒரு விதக் கமழ்தலுடன். தான் வளர்த்த ரோஜாச் செடிகளுக்கு இடையே இட்டிருந்த நாற்காலியின் இருபுறமும் அமர்ந்து காபி அருந்தினர், இருவரும். ரம்யமாக இருந்தது. அவள் அப்படியே அப்பாவைப் போல. ‘அம்மா, நீ லோன்லியா ஃபீல் பண்ணுற தான. எங்கூட வந்துரு. ப்ளீஸ்’, என்றாள். ‘எனக்கு உன்னைய விட்டுட்டு அங்க இருக்கவே முடியல.’, அவள் பல முறை இப்படிச் சொல்லிவிட்டாள். இங்கே இருக்கும் வசதிகள், சூழல் கமலினிக்கு வேறு எங்கும் கிடையாது. நடு நிசி மூன்று மணிக்குக்

கூட, தனியே வெளியே போகமுடியும். இருவரும் காபியை ருசித்துக் குடித்தார்கள். ‘இவ்வளவு ரோஜாப்பூவ எப்படிம்மா வளர்க்குற’, பேச்சு திசை மாறியதும் கமலினி மகிழ்ச்சியானாள். அவள் தலைக்குச் சில பூக்களை வைத்துக் கொடுத்தாள். அவள் கிளம்பிச் சென்றதும் கமலினிக்கு அவ்வளவு விடுதலையாக இருந்தது. ஒரு வழியாக, விமலன் வந்து சேர்ந்தான்.

கமலினி இதயத்திற்குள் சத்தியம் செய்தாள். ‘இவ்வளவு அழகான ஆம்பிளை இவளத் தேடி வரான்னா ஏதோ காரணம் இருக்கு, என்று’. விமலன், வசந்தியிடமிருந்து நிறைய அன்பளிப்புகளைக் கொண்டு வந்திருந்தான். செல்வாவின் இளையவடிவம் போலவே இருந்தான். ‘ஆன்ட்டி எப்படி அழக இவ்வளவு நல்லா மெயிண்டெய்ண் பண்ணுறீங்க. வசந்தி அத்தை உங்களைப் பத்தி நிறைய சொல்லுவா. நீங்க ஐம்பது வயசுக்கு குறைவா தெரியிறீங்க.’ கருத்தரங்கு சென்று வீடு திரும்பும்போதே கூப்பிடுவான். கமலினி சென்று அவனைக் காரில் ஏற்றிக்கொண்டு அங்கங்கே ஊர் சுற்றி வருவார்கள். கமலினியை அழகழகாக வீடியோ எடுத்தான். அவளுக்கு ரீல்ஸ் போடக்கத்துக் கொடுத்தான். இன்ஸ்டாவில் அவள் ரீல்சுக்கு கவனம் கிடைத்தது. அதற்காகவே தினம் தினம் அவளிடம் இருக்கும் வெவ்வேறு புடவை நகை எனக் கலந்து புதிய பொலிவிற்கு மாறினாள். இளையவள் மது அழைத்துச் சொன்னாள். ‘அம்மா என்ன ஓவரா பண்ணுற’, என்றாள். ‘அப்படித்தான் ஓவரா பண்ணுவேன்’, என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டாள் கமலினி. விமலன், கமலினியை அணைத்துக்கொண்டான். செல்லமாக முத்தமிட்டுக் கொண்டான். தலையை வருடினான். முடியைக் கோதினான். அதிய வயது வித்தியாசம் இருவரையும் நெருக்கமாக்கியது. கமலினிக்கு அது பரவசத்தைக் கொடுத்தது. விமலன் கிளம்பும் நாள் வந்தது. கமலினி சோகமானாள். அதை விமலன் நல்ல அர்த்தத்தில் எடுத்துக்கொண்டான். ‘நீங்க என்னைய மிஸ் பண்ணாத மாதிரி பாத்துக்கிறேன், ஆண்ட்டி’, என்றான். ‘இனியாவது ஆண்ட்டி கூப்பிடாம கமலினி அல்லது கமல் இப்படிக் கூப்பிடலாமில்ல’, செல்லம் கொஞ்சினாள். விமலனிடம் சிறு பெண்ணைப் போல நடந்துகொண்டாள்.’புரியுது, மிஸ் கமல். நான் தினமும் வீடியோ கால் பேசுறேன். யூ வோன்ட் மிஸ் மீ’, எழுந்து அவளை இறுக அணைத்துக்கொண்டு அப்படியே கைகளுக்கு இடையே மெல்ல சரித்துத் தாலாட்டுவது போல்

செய்தான். கமலினிக்குத் துக்கம் தாளவில்லை. மெலிதான விரகமும் வீசியது. மெல்ல அழுதாள். விமலன் ஆற்றினான்.

கமலினி அவன் எங்கே பணியாற்றுகிறான் என்று கேட்கும்போது அவன் சொன்னதையெல்லாம் மனதில் கோர்த்து வைத்துக்கொண்டாள். அவன் நிலவு பற்றிய ஆராய்ச்சிக்குழுவினருடன் இருக்கிறான். குழுவில் அவனுடைய பெயர் இது அன்று. அது அவளுக்கு அவசியமில்லை, என்றான். நிலவில் மனிதர் சென்று வாழ்வதற்கான வாய்ப்பு எவ்வளவு இருக்கிறது என்று எல்லோரும் ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள் குழுவினர் அங்கே நெல் விளைவிக்க முடியுமா என்ற திட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்களாம். அதற்கு முதலில் நிலவின் மண் மாதிரி சேகரிக்கவேண்டும். அங்கே ஆக்சிஜன் இல்லை. என் மூச்சிற்கே நான் கடினப்பட்டுத்தான் ஆக்சிஜனை பூமியிலிருந்து எடுத்துச் செல்லவேண்டியிருக்கிறது. எதிர்காலத்தில் நிலவில் மனிதக்குடியேற்றம் சாத்தியம். நாம் இருவரும் போய் வாழலாம் என்றான். அவன் அப்படிச் சொன்ன தருணத்திலிருந்து அவள் உடலில் சிறகுகள் முளைத்தது போல் ஆனாள். இதயத்தின் வேட்கையை விட உடலின் வேட்கை அதிகமானது. உடலின் வேட்கையை இதய வேட்கை கண்டுகொள்ளாமல் போனது. உடலில் ஹார்மோன்கள் எல்லாம் தீர்ந்து போயிருந்தாலும், இதயத்தின் சுரப்பிகள் கமழ்ந்து மணக்கும் வாழ்விற்கான வேட்கை உதயமாகியது. உடலில் இளமை அசைந்தாடியது.

டென்மார்க்கிலிருந்து விமலன் கிளம்பிச் சென்றது முதல் கமலினி மனம் இடிந்து போனாள். தன்னால் அவன் இல்லாமல் இருக்கமுடியாமல் போய்விடுமோ என்று நிலைகுலைந்தாள். வசந்தி அழைத்தபோது, விமலனைப் பற்றிப் பேசுவதைத் தவிர்த்தாள். அவனைப் பற்றிப் பட்டும் படாமல் பேசினாள். அறைகளில் எல்லாம் அவன் ஆங்காங்கே நடந்து கொண்டிருந்ததைப் போல இருந்தது. எங்கு திரும்பினாலும் அவனுடைய திருத்தமான முகம் பின்னணியிலிருந்து ஒளிவீசும் கதிர்க்கற்றையுடன் அவள் முன்னால் தோன்றியது. அவன் அவளுக்குச் செய்யும்பணிவிடைகளை எல்லாம் கமலினி தவறவிட்டாள். அவன் அவளைத் தொட்டுத் தொட்டுத்தான் பேசினான். தொடாமல் அவனால் பேசவே முடியவில்லை.

அவன் தொடுவது ஒவ்வொரு கணமும் அவளுக்குத் தேவையாக இருந்தது. சென்று இறங்கியதும் அழைப்பேன் என்றவன் அழைக்கவே இல்லை. கமலினியே அழைத்தாள். விமலன் பதில் சொன்னான். ‘யெஸ் டியர் கமலினி. ஜெட்லாக் ரொம்ப. அப்புறம் உங்கள ரொம்ப மிஸ் பண்ணுறேன். என்னவோ போல இருந்துச்சி. அடுத்த ஃப்ளைட்டே பிடிச்சி வந்துரலாம்னு தோனுச்சி. இதையெல்லாம் மறைக்கத்தான் கொஞ்சம் டிலே பண்ணலாம்னு நினைச்சேன்’, என்று உருக்கமாய்ச் சொல்லவும் கமலினி சமாதானமானாள். விமலனுக்கும் தன் போலவே உணர்வுகள் தோன்றுகின்றன என்பதை உறுதி செய்துகொள்ள அவனுடைய இந்த வார்த்தைகள் போதுமானதாக இருந்தன. விமலன் மின்னஞ்சல்கள் எழுதினான். இனி ஃபோனில் தொடர்பு கொள்ளமுடியாது. விண்வெளிப் பயிற்சிக்காக, மறைமுகமாகுவதாகச் சொன்னான். இன்னும் ஒரு மாதத்திலோ, இரு மாதத்திலோ அவன் விண்வெளி செல்லவேண்டியிருக்கும் என்றான். அவனுடைய மின்னஞ்சல்களுக்காக அவள் காத்திருந்தாள். அவன் தாமதப்படுத்தி எழுதினான். அது அவள் ஏக்கத்தை அதிகப்படுத்தியது. ஒரு மாதத்திற்குப் பின் ஒரு நாள் அவன் விண்வெளி செல்ல வேண்டிய நாள் வந்துவிட்டது என்றும் அவன் நிலவிலிருந்து அவளைப் பார்ப்பான், நினைத்துக்கொண்டிருப்பான் என்றும் எழுதியிருந்தான். தனக்கு ஓர் ஐந்து இலட்சம் பணம் தேவைப்படுவதாகச் சொன்னான். உடனே, கமலினி பம்பரம் போல சுழன்று இயங்கி அவன் கேட்ட தொகையை அவளின் அன்பைக் குழைத்து அவனுக்கு அனுப்பினாள். அன்றெல்லாம் அவளுக்குச் சொல்லொணா மகிழ்ச்சி, கிளர்ச்சி. தன்னால் அவனுக்குப் பயனுடையவளாய் இருக்கமுடிகிறது என்று காலத்தின் ஒரு சுற்று தான் வயது குறைந்ததைப் போல நினைத்தாள். ஆள் உயரக் கண்ணாடி முன் நெடு நேரம் நின்று தனக்குத்தானே பேசினாள். தூக்கம் குறைந்தாள். ஒருவிதமான பேதலிப்பும் கொந்தளிப்பும் பொங்கி நுரைத்துக்கொண்டே இருந்தன. தொடர்ந்து அவனிடமிருந்து மின்னஞ்சல் வந்திருக்கிறதா என்று கவனிப்பது களைப்பைக் கொடுத்தது. முழு ஒப்பனையில் வீட்டிற்குள் நடையாய் நடந்தாள். ஓர் அறையிலிருந்து இன்னோர் அறைக்குச் சென்று பால்கனியைத் திறப்பாள். நிலவை நோக்கிப் பார்த்துக்கொண்டே இருப்பாள். நடுநிசியில் மென்குரலில்

பாடுவாள். அவள் பொழுதுகள் அவள் கையில் இல்லாமல் விமலனின் நினைப்பில் கரைந்துகொண்டிருந்தன. இன்னொரு மின்னஞ்சல் வந்தது. இன்னோர் ஐந்து இலட்சம் அனுப்பிவிடவும் என்று எழுதியிருந்தான். மிகச்சுருக்கமான மின்னஞ்சல். பூமியிலிருந்து எடுத்துவந்திருந்த ஆக்சிஜனில் கமலினியின் மூச்சும் கலந்திருப்பது போல அப்படி ஒரு மணம் தன் மனதில் சுரந்துகொண்டே இருக்கிறது என்றும் எழுதியிருந்தான். கமலினிக்கு பெருமூச்சு வந்தது. அலைபாய்ந்தது. ஏதும் செய்யமுடியாதவளானாள். காரை எடுத்துக்கொண்டு நூறுகிலோ மீட்டர் வேகத்தில் எங்கு செல்லமுடியுமோ அங்கெல்லாம் சென்றாள். ஏதோ ஒரு கஃபேயில் காபி குடித்தாள். இன்னும் வேகமெடுத்தது கார்.

அவள் சற்றும் எதிர்பாராத ஒரு நாள் சசி வந்து இறங்கினாள். ‘அம்மா, கிளம்பு. கிளம்பு. உன் பேரனோட இண்டர்னேஷனல் கான்சர்ட். அவன ஆடிட்டோரியத்தில விட்டுட்டு வந்துருக்கேன். மகிழன் அவனோட பெர்ஃபார்மன்சுக்கு அவசியம் நீ வேணும்னு சொல்லிட்டான். கெட் ரெடி. யூ ஹேவ் ஒன் ஹவர்’, என்று சொன்னாள். தலைகால் புரியாத நிலை. கமலினிக்குக் கிளம்பும் மனநிலை சற்றும் இல்லை. சசி அப்படித்தான். விரட்டுவாள். கடுமையான பரபரப்பு. குளிக்கச் சென்றாள். சோப்பு தீர்ந்திருந்தது. எரிச்சலாக இருந்தது. ஷவரைத் திறந்து விட்டுச் சசியைக் கடிந்து கொண்டாள். வழக்கமாகப் பொறுமையாக உடையைத் தேர்ந்தெடுத்து உடுத்துபவள், ஏதோ ஒன்றை வரிசையிலிருந்து இழுத்து அணிந்துகொண்டாள். விமலன் இந்தக் காட்டுமிராண்டிக் கூட்டத்திலிருந்து அவனுடன் தன்னை இழுத்துச்சென்றால் என்ன என்று நினைத்துக்கொண்டாள். உடையுடுத்தி வெளியே வரும்போது, சசி அவளை என்னவோ போல பார்த்தாள். ‘என்ன சசி. இந்த டிரெஸ் சரியில்லையா’, என்று கேட்கவும், ‘நல்லாயிருக்கு. மொதல்ல கிளம்பு. ஒரு மணி நேரத்துக்குள்ள நாம போயி சேரனும்’, என்று அவசரப்படுத்தினாள். ஆனால், வரும்போது இருந்த உற்சாகம் வீட்டிலிருந்து கிளம்பும்போது சசியிடம் இல்லை. ஏதோ நடந்திருப்பதைக் கமலினியின் உள்ளுணர்வு சொல்லியது. காரில் சசியும் கமலினியும் வழக்கத்திற்கு ஒவ்வாத அமைதியுடன் பயணித்தனர். கமலினி சில அவசியமற்ற கேள்விகளை எழுப்பிக்கொண்டே வந்தாள். என்றாலும் சசி பெரிதாகப்

பதில் சொல்லவில்லை. சரியான நேரத்திற்கு இடத்தைச் சேர்ந்தனர். மகிழன் ஓடிவந்து கமலினியைக் கட்டிக்கொண்டான். ‘எங்க உங்க மேல வீசுற வழக்கமான பெர்ஃப்யூம் வாசனை இல்லை’, என்று பொய்க்கோபம் கொண்டான். கமலினி வாசனை திரவியம் வீசிக்கொள்ளக்கூட மறந்திருந்தாள். ‘உன் அம்மா படுத்தின அவசரத்துல எல்லாத்தையும் மறந்துட்டேன். முன்னாடியே எனக்குத் தெரிவிச்சிருந்தா ஜோரா வந்துருப்பேன், செல்லம்’, என்று கமலினி சொல்லவும், மகிழன், ‘அம்மாக்கிட்ட சொல்லிக்கிட்டே இருந்தேன் கிராண்ட்மா, உனக்குச் சொல்லச் சொல்லி. சர்ப்ரைசா இருக்கட்டும்னு சொல்லிட்டா’, என்று மகிழன் சொல்லிவிட்டு அவனையொத்த குழந்தைகளுடன் ஓடிவிட்டான்.

மகிழன் அவ்வளவு நன்றாக, விசையுடன் பியானோ வாசித்தான். கமலினிக்கு உடல் வழியாக இசையைச் சுவாசித்துக்கொண்டது போல இருந்தது. நிகழ்வு முடிந்ததும், இரவு உணவு எல்லோரும் சேர்ந்து உண்டனர். சசியின் கணவர், கணவரின் அம்மா, அப்பா எல்லோரும் வந்திருந்தனர். கமலினிக்குச் சூழலுடன் ஒட்டவே இல்லை. அவ்வப்பொழுது ஃபோனில் மின்னஞ்சல் வந்திருக்கிறதா என்று பரிசோதித்துக்கொண்டே இருந்தாள். படபடப்பாக இருந்தாள். சசி அடிக்கடி, ‘என்னம்மா அன்யூஷுவலா இருக்க.’, என்று கேட்டால், கமலினி, ‘ஒன்றுமில்லை’, என மறுத்தாள். எல்லோரையும் அனுப்பிவிட்டு சசி, கமலினியை வீட்டில் கொண்டு விடுகிறேன் என்றும் அவளுடன் ஓர் இரவு தங்கிவிட்டுச் செல்கிறேன் என்றும் சொல்லி வந்தாள். கமலினிக்குத் தான் ஏற்றுக்கொண்ட தனிமை பிடித்திருந்தது. அதில் அவளுடன் எப்பொழுதும் விமலன் மட்டுமே இருந்தான். வானத்தைப் பார்த்தால் நிலவின் வடிவழகில் அவன் தெரிந்தான். அன்றைய நாளில் எல்லாவற்றிற்குப் பின்னும் அவ்வளவு களைப்பாக இருந்தது. ஏன் இந்த சசி இப்படித் தன்னைத் துன்புறுத்துகிறாள் என்று மனதில் நொந்துகொண்டாள். கமலினி இரவு உடைக்கு மாறியதும் சசி கேட்டாள். ‘அம்மா, யாரும்மா அந்த விமலன்? அஞ்சு லட்சம் எவ்வளவுன்னு தெரியுமா உனக்கு’, என்று கேட்டதும் கமலினிக்கு நெஞ்சத்தில் இடி இடித்தது போல இருந்தது. ‘நீ... என்ன என்னோட கம்ப்யூட்டர ஈமெயில பாத்தியா. ஹௌ டேர்’, கமலினி கதறினாள். அவள் குரல்

நடுங்கியது. தன் இதயத்தில் போற்றி ரகசியமாய் வைத்திருந்த மலரின் இதழ்கள் அங்கே உதிர்ந்து காலின் கீழே ஆங்காங்கே கிடப்பதை உணர்ந்தாள். ‘அம்மா, கிளம்பும்மா. இனி நீ ஒரு நாள் கூட இங்க இருக்கக்கூடாது. நான் மதுக்கிட்ட பேசிக்கிறேன். உனக்கு செல்லம் கொடுத்தது தப்பாப்போச்சு. அவனுக்கு என்ன வயசும்மா. அவன் யாரும்மா. அவன் எப்படி உன்னை மயக்கினாம்மா’, என்று நூறு கேள்விகள் வரிசையாகக் கேட்டாள், சசி. கமலினி மயக்கம் போட்டு விழுந்துவிடுவாள் போல. அப்படியே நாற்காலியில் உட்கார்ந்து ஜன்னல் வழியே தெரிந்த வானத்தையும் அதன் மத்தியில் எரிந்த பாதி நிலவையும் பார்த்தாள்.

எல்லாம் மாறியிருந்தது. சசியின் வீட்டில் ஒரு மூலையறையில் கமலினிக்கு அடைக்கலம் கொடுத்தனர். அவளுடைய மின்னஞ்சல் முடக்கப்பட்டது. அவளுடைய வங்கிக்கணக்கிலிருந்து சசி அறியாமல் அவள் எந்தப்பணமும் எடுக்கமுடியாது. வசந்திக்கும் சசி தெரிவித்துவிட்டாள். ‘அவன் இப்ப எங்க இருக்கான்னே தெரியாது. இங்க அவனால அவன் குடும்பத்துலயும் பெரிய பிரச்சன. அவன உங்கூடத் தங்க அனுப்பியிருக்கக்கூடாது. ரொம்ப சாரி, கமலினி’, என்று வசந்தி வருந்தினாள். கமலினி தன் அறையின் ஜன்னல் கதவின் திரையை ஒதுக்கினால் வானம் தெரிந்தது. வெவ்வேறு நாளில் வெவ்வேறு நிலவு தெரிந்தது. விமலனின் வெவ்வேறு காதல் வெப்பம் தகித்தது. கமலினி எப்பொழுதும் அவனை வானத்திலேயே தேடிக்கொண்டிருந்தாள். அடுத்த வருடம் வந்தால் அவளுக்கு எண்பது வயது. செல்வாவைப் போல, விமலனைப் போல அவளை அழகு என்று சொல்லும் இன்னொரு நபரை அவள் அதற்குப் பிறகு சந்திக்கவே இல்லை.

♦♦♦

★ கட்டுரையாளர்
கவிஞர் / முற்போக்குப் படைப்பாளி

# மாலதி மைத்ரி கவிதைகள்

## சித்திர வரிக்குதிரை

கோடுபோட்ட நோட்டுப்புத்தகம்
நின்று பெய்யும் மழை
கருப்புக் குடைபிடித்து
மிதிவண்டியில் ஆசிரியர்
வாசலைக் கடக்கும்
வரிக்குதிரைச் சித்திரம்

முந்தானை உதறி முடிந்து
கரும்பலகையில்
அவர் வரைந்த அ
ஒரு தலைமுறை உயிரெழும்.

✦

## தோணி

ஊரில்
பாதையில்
பள்ளியில்
நீரில்
உணவில்
உட்காரும் இருக்கையில்
விளையாடும் திடலில்
சொல்லில்
சாதி நீலகண்டம்
வழியில் கல்லெறியும்
காலிப்பயல்கள்
முந்தானை தலைப்பை
இறுக சொருகியிருக்கும்
ஆசிரியருக்கு
தெருவில் கால்கள் இறக்கை
வகுப்புக்கு வந்ததும் எங்களுக்கு
அணிவார்
சமைத்து முடித்து
'லேடீஸ் சைக்கிளில்'
கட்டுச்சோறு முன்தொங்க
தன் குழந்தை பின்தொங்க
பள்ளிக்கு வரும் ஆசிரியர்
மாணவரின் ஒழுகும்
மூக்குத்துடைத்து
தலைதடவி ஆசிர்வதிக்கும்
ஆனை

சாலை தீ பிடிக்க
'பைக்கில்' வந்திறங்கி
கனவின்
பேரண்டப் பூட்டைத் திறக்கும்
சாவித்திரிபாய் எள்ளுப்பேத்தி

தாயுமானவர் சிலர்
கரைசேர்க்கும் தோணி.

✦

## கடலின் சதை

பத்துத்தலை கனவு
இருபது கைகள்
இருபது கால்கள்
உலகளந்து
சமுத்திரத்தைத் தலையில்
சுமந்தலையும்
தெய்வங்கள்
எங்கள் பேரம்மைகள்
அரிந்து கொடுத்த கடலின் சதை
ஊர் கொதிமணக்கும்
உப்பிட்டவரை உள்ளவும்
நினையாத ஊண்.

♦♦♦

# இளம்பிறை கவிதைகள்

## புத்தக அலமாரி

தற்போது மாறிய வீட்டிலும்
வாங்கும் படியாயிற்று
புதிதாக இரண்டு புத்தக
அலமாரிகள்

இல்லாமல் போகும் காலத்தில்
எடுத்துக் கொள்ளக்கூடும்
எவரேனும்
தமக்குப் பிடித்ததை
வைத்துக்கொள்ள
அலமாரிகளை மட்டும்

வீடு மாறும் போதெல்லாம்
என்னால் தான்
சுமை அதிகம் என்றும்
இவ்வளவுப் புத்தகங்கள் எதற்கு
என்றும்
கோபமாக கேட்கிறார்கள்
பிள்ளைகள்

நான்
சொல்லிக் கொள்வதில்லை
அவர்களிடம்

இந்தப் புத்தகங்கள்தான்
பழைய குப்பைகள்
வலிந்து அடைக்கப்பட்டு
மூச்சு திணறிக் கொண்டிருந்த
என் அகத்தைச் சுத்தம்
செய்தவை என்று

முறிந்த எலும்புகளின்
வலியை நினைவிற்கொள்ளாது
இன்னும் வேகமாக
நடக்க வைத்தவை என்று

இருண்ட காலத்தில்
எழு கதிர்களாய்
ஒளி தந்தவை என்று

யாரும் செல்லாதப் பாதையில்
செல்கின்ற துணிவையும்
விடுதலையைப் பாடி
பறக்கவும் வைத்தவை என்று

கடும் பாலைத் தனிமையின்
நீரும் நிழலும் என்று

இந்தப் புத்தகங்கள்தான்
அடைபட்ட சூழலில்
வனத்தை அருவி ஒலியை
பறவைகளின் பாடலை
மனசுக்குள் இசைத்தவை என்று

வாழ்வின் கதையை
சொல்லித் தந்தவை என்று

இந்தப் புத்தகங்கள் தான்
இருட்டிய பொழுதுகளில்
மூத்திர சந்துகளில்
அச்சமின்றி நடக்க வைத்து
வீடு சேர்த்தவை என்று

என்னுடன் நின்று
கம்பீரமாக அவர்களை
வளர்க்க வைத்தவை என்று

மனிதர்களின்
இழிவான தந்திரங்களை
இனங்காண வைத்து
உண்மையை அன்பை
உணர்த்தியவை என்று

இந்தப் புத்தகங்கள்தான்
வாழ்வை
வண்ணங்களாக்கும்
எண்ணங்களின்
தீராக் கொண்டாட்டமென்பதை
நான்
சொல்லிக் கொள்வதில்லை
அவர்களிடம்.

✦

## கொஞ்சம் புன்னகைக்கலாமே..

உங்களிடம்
உயர்பதவியும் அதிகாரமும்
இருக்கின்ற போதே
கையேந்துபவர்களுக்கும்
கருணை புரியுங்கள்.

உங்களின்
அரியப் பொழுதுகளை
பெருமைக்கு விருந்துவைத்தே
வீணடித்து விடாதீர்கள்
பசித்தவர்களுக்கும்
பரிவு காட்டுங்கள்.

குறைந்தபட்சம்
அவர்களிடம்
கனிவான சொற்களையேனும்
பேசப் பழகுங்கள்

அவர்களிடம் நீங்கள்
பேசி
மறந்துவிடும்
சொற்கள்
ஆயுளுக்கும் அவர்கள்
மனதிலிருப்பவை
என்பதை
மறவாதிருங்கள்

உங்களின்
பரிவுச் சொற்களால்
ஒருவரின் பெருந்துன்பம்
தீருமெனில்
தயங்காது அச்சொற்களை
உடனே உபயோகப்படுத்துங்கள்

எதிர்க்க வலுவற்ற
சாமானியர்களை மட்டும்
விதிகள் சான்றுகளென
விரட்டிக் கொண்டே
இருக்காதீர்கள்
உண்மைகளுக்கும்
அநாதரவிற்கும்
பெரும்பாலும் சான்றுகள்
இருப்பதில்லை
கிடைப்பதுமில்லை

மனமில்லையெனில்
சூசகமாகவேனும்
சொல்லிவிடுங்கள்
நம்பிக் காத்திருந்து
ஏமாறும் வலி
எதனினும்

கொடிய வலியென்பதை
எப்போதாவேனும்
உணர்ந்திருப்பீர் நீங்களும்

கரங்களையும் மனதையும்
கட்டிவைத்துக்கொள்வதே
நேர்மை எனக் கருதி
ஒன்றுமே செய்யாமல்
ஓய்வு பெற்று விடாதீர்கள்.

இயலாதவர்களின்
கண்ணீர்த் துளிகளுக்கு
இளகியும் பழகுங்கள்.

தெரிந்திருந்தால்
சொல்லியிருந்தால்
கேட்டிருந்தால் எனப்
பின் உதிர்க்கும்
பாசாங்குச் சொற்கள்
உடனே வெளுத்து
உதிர்ந்து போகும்

வண்ணங்கள் என
உங்களுக்கா தெரியாது

கடைநிலையை ஓயாது
மிரட்டிக் கொண்டே இருக்கும்
பெருமிதம் இருக்கட்டும்

புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு
உதவும் துணிவு
உம்மிடம் உள்ளதா என
உங்களையும் நீங்கள்
பரிசோதித்துப் பாருங்கள்.

கூடவே
உம் காலடியில்
உலகென்ற
கர்வ கீரிடத்தை
எப்போதாவேதனும்
கழட்டி வைத்து ..
அவ்வப்போது
கொஞ்சம்
புன்னகைக்கலாமே ...

♦♦♦

# பெண் கல்வி கடந்து வந்த பாதை

**சு. உமா மகேஸ்வரி**

இருபத்து ஒன்றாம் நூற்றாண்டில் பயணிக்கும் இன்றைய தலைமுறையினருக்குப் பெண்கல்வி குறித்தான புரிதல் என்பது எந்த வகையில் இருக்கும்? சமூகத்தில் தங்களைச் சுற்றிலும் வாழும் பெண்கள் பள்ளிக்குச் செல்வது, கல்லூரிக்குச் செல்வது பிறகு உயர்கல்வி பெறுவது அல்லது வேலைவாய்ப்புகளை நோக்கி நகர்வது என்ற அளவில் மட்டும்தான் அந்தப் புரிதல் இருக்கும். அதே போல, பெண் குழந்தைகளின் கல்வி தடைபடுகிறது எனில், அது வறுமையின் காரணமாக அல்லது குடும்பச் சூழல் காரணமாக என்ற அளவில் மட்டுமே அந்தப் புரிதல் விரிந்திருக்கும். காலம் காலமாக பெண்களுக்குக் கிடைத்த கல்வி இத்தனை எளிதாக இப்படியேதான் இருந்ததா அல்லது சிக்கல்கள் நிறைந்ததாக இருந்ததா என்பதை அறிந்துகொள்ள, காலச்சக்கரத்தைப் பல நூற்றாண்டுகள் பின்னோக்கிச் சுழற்றிப் பார்க்க வேண்டும்.

மனித சமுதாயம் தோன்றிய காலத்திலிருந்து தாய்வழிச் சமூகமாக உருவாகி வளர்ந்துவந்த இந்தச் சமூகத்தின் நிலை கொஞ்சம் கொஞ்சமாக பாதைமாறி, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் பெண்களை அடிமைப் படுத்தும் தந்தை வழிச் சமூகமாக மாறியது. பெண்களிடமிருந்து கல்வி கற்கும் உரிமையைப் பறித்துக் கொண்டதுதான் அவர்களை

அடிமைப்படுத்த மிக வசதியாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

## சங்ககாலத்தில் பெண் கல்வி

தமிழர் மரபில் பன்னெடுங்காலத்திற்கு முன்பே பெண்கள் கல்வியறிவில் சிறந்து விளங்கினர் என்பதற்கான ஆதாரங்கள் சங்க இலக்கியங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. **ஔவையார், பொன்முடியார், ஆதி மந்தியார், காக்கைப் பாடினியார், வெள்ளி வீதியார், இளவெயினி, வெண்ணிக்குயத்தியார், காவற்பெண்டு, நப்பசலையார் என சங்க காலப் பெண்பாற் புலவர்களின் பெயர்ப் பட்டியல் நீள்கிறது**. 42 பெண்பாற் புலவர்களின் பாடல்கள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.. பண்டைத் தமிழக மகளிர், சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருந்தனர். பெண் கல்வியில் சிறந்த நாடாகச் சங்ககாலத் தமிழகம் விளங்கியது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுபாடின்றி கல்வி பயிலும் வாய்ப்பு சிறந்திருக்கின்றது. சோழர்கள் காலத்திலும் கூட பெண்கள் கல்வியறிவு பெறுவது சிறப்பாகவே இருந்து வந்துள்ளது. அதன் பிறகு இடைக்காலத்தில்தான் பெண்கள் கல்வி பெறுவதில் குடும்ப, சமுதாய சிக்கல்கள் உருவாகி முற்றிலும் கல்வி கற்பதிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளனர். மீண்டும் பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய சமூக சீர்திருத்தவாதிகளால் பெண்கல்வி இங்கே மீட்டெடுக்கப்பட்டு வளர்ந்தது.

## பெண் கல்விக்காகக் குரல் தந்தவர்கள்.

சமூகத்தில் பெண் விடுதலைக்கான முதன்மைப் பேராயுதம் கல்வி ஒன்றே. பெண்கள் கல்வியறிவு பெற்றால்தான், அவர்களது அடிமைத்தளையை வெட்டி எறியமுடியும். ஆகவே பெண்கள் கல்வி கற்க வேண்டும், அப்போதுதான் இந்தச்சமூகத்தில் உயர்வு பெற முடியும் என்று, பெண்கல்விக்காகப் போராடி தங்கள் வாழ்க்கையைப் பெண் கல்விக்காகவே அர்ப்பணித்த பலரையும் நமது கடந்த கால வரலாற்றில் நினைவு கூறலாம்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் வந்த போது உருவான கிறித்தவ மிஷினரிகளால் பெண்களுக்கான கல்வி பரவலாக

வளர்ந்த வரலாற்றை அறிவோம். **பெண்கள் கல்வி பெற்று வந்ததில் கிறித்தவ மிஷனரிகள் மற்றும் சிறுபான்மைக் கல்வி நிறுவனங்களின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.**

**வங்காளத்தில் ஈஸ்வர சந்திர வித்யாசாகர், மகாராஷ்டிராவில் ஜோதி ராவ் சாவித்திரிபாய் பூலே தம்பதி, பாத்திமா ஷேக், தென்னிந்தியாவில் தருமாம்பாள், கமலாதேவி சட்டோபாத்யாயா, பாரதியார், பெரியார் ஈ.வெ.ரா** உள்ளிட்ட பலரும் பிற்காலத்தில் பெண் கல்விக்காகக் குரல் கொடுத்துள்ளனர். இங்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் பெண்கள் கல்வி கற்பது என்பது அத்தனை சுலபமல்ல என்பதுதான் எதார்த்தம்.

“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம், எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை”, என்றான் பாரதி ஒரு நூற்றாண்டுக்கு முன்பே. அதே போல் பெண்களின் கல்விக்காகக் கவிதைகளால் உரக்கக் குரல் கொடுத்தவர் நமது பாவேந்தர் பாரதிதாசன்.

அண்மைக் காலத்தில் இந்தக் கால் நூற்றாண்டில், தற்போது வாழ்ந்து வரும் **மலாலா யூசுப்** நமது அண்டை நாடான பாகிஸ்தான் நாட்டில் வசிக்கும் முஸ்லீம் பெண்கள் கல்வி கற்பதற்கான தடைகளை உடைக்கும் பணியைச் செய்து வருவதையும் சேர்த்து கவனத்தில் கொள்ள வேண்டும்.

## பெண்களுக்கான முதல் பள்ளி

**இந்தியாவிலேயே நமது தமிழ்நாட்டில்தான், பெண் குழந்தைகளுக்கான முதல் பள்ளி தொடங்கப்பட்டது. ஆம், சென்னை வேப்பேரியில் பெண்டிங்க் மேல்நிலைப் பள்ளிதான் (Bentick HSS) 21 மாணவிகளுடன் முதன் முதலில் தொடங்கப்பட்ட பெண்களுக்கான பள்ளி.** இதை, இலண்டன் மிஷனரி சொசைட்டியைச் சேர்ந்த அன்னா ட்ரூயூ (Mrs Anna Drew) 188 வருடங்களுக்கு முன்பு, 1837 ஆம் ஆண்டு தொடங்கினார், இன்று வரை பெண்கள் கல்வி கற்பதற்கான சிறந்த பள்ளிகளுள் ஒன்றாகச் சென்னையில் இயங்கி வருகிறது. தற்போது இங்கு 2000 பெண் குழந்தைகள் பயின்று வருகின்றனர். அதே போல் 1864 இல் சென்னை ஃபோர்ட் மிஷன் பள்ளியை அகஸ்டா

பிளாண்ட்போர்ட் (Augusta Blandford) என்பவர் பெண்கள் கல்வி பயிலத் தனிப்பள்ளியைத் தொடங்கினார். சுமார் 160 ஆண்டுகளாகக் கல்விச் சேவையை செய்து வருகிறது இந்தத் துறைமுகப் பள்ளி.

அதே காலகட்டத்தில், வங்காளத்தில் பெண் கல்விக்காக கிராமம் கிராமமாகச் சென்று பள்ளிகளை உருவாக்கியவர் ஈஸ்வர சந்திர வித்யாசாகர்.மகாராஷ்டிராவில் ஜோதிராவ் பூலேவும் சாவித்திரிபாய் பூலேவும் தாழ்த்தப்பட்ட மற்றும் விதவைப் பெண்களுக்காக முதல் பள்ளியை 1847 இல் துவங்கிய வரலாற்றையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும். பெண்களுக்குக் கல்வி தர முன்வந்ததால் கற்பித்தல் பணிக்காக சாலையில் நடந்து செல்லும் போது, சாவித்ரி பாய் பூலே மீது சேற்றையும் மண்ணையும் மலத்தையும் வீசிய இந்தச் சமூகத்தின் பார்வையிலிருந்து பெண் கல்வியின் போதாமையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பல்வேறு சமூகப் போராட்டங்களின் விளைவாகத்தான் பெண்கள் கல்வி பெறுவது சாத்தியமானது என்பதை வரலாற்றின் வழியே நாம் அறியலாம்.

மேலும் 1894 இல் தமிழ்நாட்டில் கோவையில் வணிகர் சங்க உறுப்பினர்கள் சேர்ந்து பெண்களுக்கான பள்ளியை கோவை இராஜ வீதியில் உருவாக்கினர். இரண்டாயிரம் மாணவிகளுடன் இன்றும் மிகச் சிறப்பாக நடந்து வரும் இப்பள்ளி நூற்று இருபது வருடங்களைக் கடந்து பெண் குழந்தைகளுக்காகச் சேவை செய்து வருகிறது.

திருப்பூர் மாவட்டத்தில் ஜெய்வாபாய் என்ற பெண்கள் பள்ளியை 1942 இல் குஜராத்தின் சேர்ந்த டி. ஒ. ஆஷர் தனது மனைவி ஜெய்வாபாய் நினைவாக நிறுவினார். இன்று 7000 ற்கும் மேற்பட்ட பெண் குழந்தைகள் கல்வி பயிலும் மிகப்பெரிய பள்ளியாகத் திகழ்கிறது.

தபிதா பாபு, இவர் பெண்கள் வீட்டிலிருந்தே கல்வி பயிலவேண்டும் என்ற நோக்கத்திலும், அவர்கள் அறிவை வளர்க்கும் ஆர்வத்திலும் 1865ல் ‘ஜெனானா கற்பித்தல்’ என்ற கல்வி பயிற்றுவிக்கும் முறையை அறிமுகப்படுத்தினார். தானே நேரடியாகப் பெண் குழந்தைகளின் வீட்டிற்குச் சென்று கல்வி போதித்தார். அதற்கென ஒரு குழு அமைத்துச் செயல்பட்டார். சென்னையில் ஜெனானா முறைக் கல்வியை முதன்முதலில்

ஏற்படுத்தியவர். ஆறு பள்ளிகள் தபிதா பாபுவின் மேற்பார்வையில் இயங்கின. அதனைப் பரவலாக்கி, பெண்கள் கல்வி பயில்வதில் இருந்த தடைகளை நீக்க முயற்சித்தார். பெண்கள் பயிலும் பள்ளிகளில் பெண் ஆசிரியர்களையே நியமித்தார். அதற்காகப் பெண்களுக்கு ஆசிரியர் பயிற்சி அளிக்க, ‘மெட்ராஸ் கிறிஸ்தவப் பெண் பயிற்சிப் பள்ளி’யை 1871ல் தொடங்கினார். அதன்மூலம் பயிற்சி பெற்றவர்களை, பல்வேறு மிஷன்களின் ஜெனானா நிறுவனத்தில் போதிப்பதற்காக அனுப்பினார்.

திருநெல்வேலிப் பகுதியில், பெண்களுக்கான பள்ளியை உருவாக்கி, பிறகு அது கல்லூரியாக வளர்ந்து இன்றும் சிறப்பு வாய்ந்த கல்வி நிறுவனமாக இருப்பது **சாரா டக்கர் பெண்கள் கல்லூரி. தென்னிந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பெண்கள் கல்லூரி** இது. 1895 இல் இங்கிலாந்து நாட்டின் சாரா டக்கர் தனது நண்பர்கள் மற்றும் தனது நகைகளை விற்று இங்குள்ள பெண்கள் கல்வி பயிலப் பள்ளி, கல்லூரிகளைக் கட்ட உதவியவர். வரலாறு நெடுகிலும் பெண் கல்வியின் வளர்ச்சி இப்படிப் பல உயர்ந்த எண்ணங்களைக் கொண்ட மனிதர்களாலேயே சாத்தியப்பட்டு வந்தது.

## 1819 ஆம் நூற்றாண்டில் பெண்கல்வி

கடந்த இருநூறு ஆண்டுகளில் நமது சமூகத்தில் பெண்கள் கல்வியறிவு பெற்று வந்ததை, கல்வியறிவு பெற்ற ஆண்களுடன் ஒப்பிடுகையில், பாலின வேறுபாடு மிக அதிகமாக இருப்பதைக் காணலாம். பெண்கள் மிகக் குறைந்த சதவீதத்திலேயே கல்வி அறிவு பெற்றதற்கான தரவுகள் பிரிட்டிஷார் ஆட்சி செய்த பொழுது எடுக்கப்பட்ட தரவுகளிலிருந்து பல செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன.

தாமஸ் மன்றோ 1822 இல் மேற்கொண்ட ஆய்வின்படி, வருவாய்த்துறையினர் வழியாக ஒவ்வொரு மாவட்டக் கலெக்டரிடமிருந்தும் கல்வி பற்றிய விரிவான அறிக்கைகள் கேட்கப்படுகின்றன. அதில் மாவட்டத்தின் மக்கள் தொகை, பெண்கள் எண்ணிக்கை, ஆண்கள் எண்ணிக்கை, பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை, உயர்கல்வி வாய்ப்புகள் அங்கு பயின்ற ஆண் பெண் மாணவர்கள் எண்ணிக்கை உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் அனுப்பக்

கோரப்பட்டுள்ளது. அதன் படி ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் கல்வி குறித்த தகவல்களைக் கடிதங்கள், விவரப் பட்டியலாக அனுப்பியுள்ளனர். அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தும் போது நமக்குப் பெண்கல்வி குறித்த விபரக்குறிப்புகள் கிடைக்கின்றன.

மலபார் விசாகப்பட்டினத்தில் ஜெய்ப்பூர் பகுதிகள் நீங்கலாக பிராமண, செட்டியார், வைசியர் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் யாருமே பள்ளிகளில் கல்வி கற்றதாகத் தெரியவில்லை. பாரசீகப் பள்ளிகளில் கணிசமான பெண் குழந்தைகள் கல்வி கற்றதாகத் தெரிகிறது பிராமண மற்றும் இந்துப் பெண்களுக்குப் பொதுவாகக் கல்வி தரப்பட்டிருக்கவில்லை. ஏனென்றால் கல்வி தரப்பட்டால் அவர்களின் ஒழுக்கம் கெட்டுவிடும் என்று சொல்லிப் பொதுவாக நடனமங்கைகளுக்கு மட்டுமே கல்வி தரப்பட்டிருக்கிறது.

திருச்சியில் 56 சேலத்தில் 27 முஸ்லிம் பெண் குழந்தைகள் கல்வி பெற்றுள்ளனர். இந்துக் குழந்தைகளின் எண்ணிக்கையும் அவ்வளவு ஒன்றும் அதிகமாக இல்லை. நடன பெண்கள் அல்லது கோவில்களில் தேவதாசிகளாக இருந்த பெண்கள் கல்வி பெற்றதாக மசூலிப்பட்டினம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் போன்ற பகுதிகளின் கலெக்டர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் பெண்களில் நடனமகளிருக்கு மட்டுமே கல்வி தரப்பட்டிருக்கிறது அவர்கள் பொதுவாக நெசவுத் தொழில் செய்யும் கைக்கோளர் சாதியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். சில விதிவிலக்குகள் உண்டு என்றாலும் அதன் எண்ணிக்கை மிகவும் குறைவே.இதை ஜே. சல்லிவன் பிரதான கலெக்டர் 23/11/1822 அன்று வருவாய்த் துறைத் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மதராஸ் பிரசிடென்சியின் பொதுக் கல்வி இயக்குனரின் 1879-1880 ஆம் ஆண்டுக்கான அறிக்கையைப் பார்த்தால் கல்லூரிகள் மேல்நிலை, இடைநிலை, ஆரம்பப்பள்ளிகள், விசேஷப் பள்ளிகள் தொழிற்கல்விமையம் உட்பட மதராஸ் பிரசிடென்சியில் அனைத்து வகைப் பள்ளிகளின் எண்ணிக்கை 10,553. ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை 10,106 அங்கு

படித்தவர்களில் பெண்கள் 29,419 ஆனால் ஆண்களின் எண்ணிக்கையோ 2,38,960 பேர். ஆண்களுடன் ஒப்பிடும்போது வெறும் 12% தான் பெண்கள் கல்வி பயின்றுள்ளனர். 1823 இல், மலபாரில் தனிப்பட்ட முறையில் உயர் கல்வி பெற்றவர்களில் 1,545 ஆண்கள் எனில் 41 பேர் மட்டுமே பெண்கள். ஆனால் மொத்தமாக வாழும் எண்ணிக்கையில் ஆண்கள் எண்ணிக்கையும் பெண்கள் எண்ணிக்கையும் சமமாக இருந்திருக்கின்றனர். இரு தரப்பிலும் ஏறக்குறைய நாலரை இலட்சம் (4,58,364 ஆண்கள் - 4,49,207 பெண்கள்) என்று இருந்தாலும் கல்வி பெறுவதில் எவ்வளவு இடைவெளி என்பதனை நாம் கவனிக்க வேண்டும்.

மதராஸ் பிரசிடென்சி அரசால் 1826 இல் பரிசீலிக்கப்பட்ட ஆய்வுத் தகவல்களில் கவர்னரான தாமஸ் மன்றோவின் கூற்றுப்படி, பள்ளிக்கல்வி பெற்ற பெண்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு என்பதே. அதேபோல மதராசில் வீடுகளில் இருந்து கல்வி பெற்றவர்களை எடுத்துக் கொண்டால் ஏறக்குறைய இரண்டரை இலட்சம் பெண் குழந்தைகளில் 517 பேர் (O.20%) மட்டுமே கல்வி பெற்று இருக்கின்றனர். ஆனால் அதே இரண்டரை இலட்சம் ஆண்களில் 26,446 (10.58%) பேர் கல்வி பெற்று இருக்கின்றனர் என்கிறது ஆவணம்.

1854 இல் வெளிவந்த சார்லஸ் உட் டெஸ் பாட்ச் அறிக்கை பெண் கல்வியால் சமூகத்தில் ஏற்படும் சிறப்பான மாற்றங்கள் பற்றிப் பேசுகிறது.1882 இன் சர் வில்லியம் ஹண்டன் அறிக்கையும் பெண் கல்விக்கு ஆதரவாகவே இருந்தது. ஆனால் சமூகத்தின் எதார்த்தம் என்னவோ பெண்களைக் கல்வி கற்க அனுமதிக்காத சூழ்நிலையுடன்தான் தொடர்ந்தது என்பது வரலாறு. 1901இல் சென்னை மாகாணத்தில் எழுத்தறிவு பெற்ற பெண்கள் 0.9% மட்டுமே. ஆனாலும் நாடு விடுதலை அடைந்தபோது கல்வி பெற்றவர் மொத்தம் 12 சதவீதம் பேர் தான். 2011 இல் எழுத்தறிவு பெற்றவர்களான 74 சதவீதத்தில் பெண்களின் சதவிகிதம் 65.46. தமிழ்நாட்டில் எழுத்தறிவு பெற்ற பெண்கள் 73.86 சதவீதம். இதை 1826 கணக்கீட்டுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப்போது மொத்த கல்வி பெற்றவர்கள் 10.78%. அதில் பெண்கள் 0.20%. மட்டுமே. இன்று சூழ்நிலை மாறி உள்ளது. உயர் கல்வியில் பெண்கள் இன்று நல்ல உயரத்தை எட்டி உள்ளனர். இன்று நாம் பெண் கல்வியில் வளர்ச்சி நிலையில் பயணிக்கிறோம்

என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.தமிழகத்தில் கல்வி கற்கும் பெண்களின் சதவீதம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்து வருவதனை நம்மால் காண முடிகிறது. இந்தியாவில் முதல் பெண்கள் கல்லூரி வங்கத்தில் உருவான பெதுன் கல்லூரி. **தமிழகத்தில் 1914 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ராணி மேரி கல்லூரிதான் முதல் பெண்கள் கல்லூரி**. அப்போது இந்தியாவிலிருந்த மூன்று பெண்கள் கல்லூரிகளில் இதுவும் ஒன்று. மும்பையில் உள்ள ஸ்ரீமதி நதிபாய் தாமோதர் தக்கர்சே மகரிஷி டாக்டர் தாந்தோகேசவ் கரேம் தான் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலேயே பெண்களுக்காக 1916 இல் தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம். இதன் உருவாக்கம்தான் இந்தியப் பெண்கள் உயர்கல்வி பெறுவதற்கு போடப்பட்ட முதல் விதை. 1921 இல் இந்தியாவில் முதல் ஐந்து பெண் பட்டதாரிகள் இங்கிருந்துதான் உருவானார்கள் என்கிறது வரலாறு. உயர் கல்வியில் பெண்கள் இன்றைய நிலையை அடைவதற்குப் பின்னால் ஏராளமானவர்களின் உழைப்பு அடங்கியுள்ளது. 1952 இல் இலட்சுமண சாமி முதலியார் தலைமையில் அமையப்பெற்ற கல்விக் குழுவின் முன் ஈ.வெ.ரா பெரியாரும் ஜி.டி நாயுடுவும் நேரில் சென்று பெண்களுக்காகத் தனியாகக் கல்வி நிறுவனங்கள் அதிக அளவில் தொடங்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர். மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் 2016-17 அறிக்கையின் படி இந்தியாவில் பெண்களுக்காக தனியாக 15 பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. தற்போதுள்ள 4026 கல்லூரிகளில் 9.3% கல்லூரிகள் மட்டுமே பெண்கள் கல்லூரிகள். நமது கல்வி முறையில் பயில்பவர்களில் 46.9% பேர் பெண்கள் என்பதும் இந்த வரலாற்றுப் பார்வையுடன் சேர்த்து பெண் குழந்தைகளுக்காகப் பல பிரிவுகளில் போராடியவர்களையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவர்களுள் பெண் போராளிகள் சிலர்... **இஸ்லாமியச் சிறுமிகளின் கல்விக்காகப் பாடுபட்ட கியாச சகாவத் ஹூசேன், பெண் கல்விப் பாகுபாட்டுக்கு எதிராகக் குரல் கொடுத்த சந்திரப் பிரபா சைக்கியானி, குழந்தைகள் கல்வி உரிமைக்காகக் குரல் எழுப்பிய மத்தியப் பணியாளர் தேர்வாணையத்தின் முதல் பெண் தலைவர் இந்தர்ஜித் கௌர்** எனப் பட்டியல் நீளும். இவற்றின் நீட்சியாக அண்மைக் காலமாக 25 ஆண்டுகளுக்குள்ளான பெண்கல்வி குறித்த வளர்ச்சியையும்

நாம் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டியிருக்கிறது. பெண்கள் கல்வி பெறுவது இங்கு அரசியல், சமூகப் பொருளாதாரக் காரணங்கள் சார்ந்ததாகவும் இருப்பது பெண்கல்வியை இன்னும் ஆழமாகப் புரிந்து கொள்ள நமக்கு உதவும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் தமிழக அரசு பெண் கல்விக்கான பல முயற்சிகளை எடுத்து வருவதை மறுக்க முடியாது. இங்குள்ள கல்வி முறையின் அடிப்படையில் மதிப்பெண்கள் சார்ந்த, தேர்ச்சி சதவீதம் சார்ந்த கல்வி முறையில் முன் வரிசையில் நிற்பவர்கள் பெண் குழந்தைகளே. பத்தாண்டுகளுக்கு முன்பு வரை கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு வரை, முதல் வகுப்பிலிருந்தே தேர்ச்சி பெறாதவர்களை ஒரே வகுப்பில் தேக்கம் செய்வது நடைமுறையில் இருந்து வந்தது. கிராமங்களில் பெண் குழந்தைகளை வீட்டு வேலை செய்ய, கை வேலைகளுக்கு அழைத்துச் செல்லும் பெற்றோர்கள், பருவ வயது அடைந்தவுடன் திருமணம் செய்தல் என்று பலவாறு பெண் குழந்தைகள் கல்வி பெறுவதில் கூடுதல் தடைகள் இருந்தன. ஆனால் கல்வி உரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு எட்டாம் வகுப்பு வரை கட்டாயத் தேர்ச்சி முறை கொண்டு வந்ததும், அனைவருக்கும் கல்வித் திட்டம் உருவாகிக் கடந்த இருபது ஆண்டுகளாகப் பள்ளிக் கல்வியில் கொண்டு வந்த திட்டங்களும் பெண் கல்வியைப் பாதுகாப்பதில் குறிப்பிட்டளவில் பங்கு வகித்தவை என்பதை நாம் ஏற்க வேண்டும். ஆனால் மேற்குறிப்பிட்ட SSA திட்டத்தில் பல குறைபாடுகள் இருந்தாலும் பெண் கல்விக்காக அதில் எடுக்கப்பட்ட முயற்சிகள் பாராட்டத் தகுந்தவை.பெண் குழந்தைகள் பள்ளிக் கல்வியை முடிப்பதிலும், உயர் கல்வி பயில முயற்சிகள் செய்வதிலும், அரசுப் பள்ளி மாணவிகளுக்குப் பல வழிகளில் அரசும் கல்வித் துறையும் வழிகாட்டிக் கொண்டே இருக்கின்றன. மிகச் சமீபமாக உயர்கல்வி சேர அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவிகளுக்கு மாதம் ரூ 1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம் வரையில் பெண் கல்வியை நேர்மறை வளர்ச்சியாகப் பார்க்கலாம். ஆனால் பெண் கல்வியின் மற்றொரு பகுதியை கவனித்தால் மாற்றங்கள் அவசியமானதாக இருப்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். பாலியல் ரீதியான பிரச்சனைகள், குழந்தைத் திருமணம், இணைய வழிக் கல்வியின் எதிர்மறை அம்சங்கள், நமது ஆண்மய சமூக அமைப்பு, குடும்ப அமைப்புகள், பெண்கள் மீதான சமூகத்தின்

கற்பிதங்கள், பொருளாதார சமத்துவமின்மை. கல்வியில் தனியார் மயப் போக்கின் அதீதத் தாக்கம் ஆகியவற்றாலும் பெண்கள் கல்வி பெறுவதில் பல தடங்கல்களைச் சந்தித்து வருகிறோம். இந்நிலை மாற வேண்டும், அப்போதுதான் பெண் கல்வியின் வளர்ச்சி இன்னும் விரும்பத்தகும் வகையில் வளரும் என்பதில் ஐயமில்லை.

குறிப்பு : தரவுகள் உதவி -அழகிய மரம் நூல் - தரம்பால் - தமிழில் - B.R. மகாதேவன்) பெண்ணே பேராற்றல் - ப.திருமலை)

♦♦♦

★ கட்டுரையாளர்
ஆசிரியர், கல்விச் செயல்பாட்டாளர்

# தனித்து வாழ்பவளின் துயரமும் மீளுயிர்ப்பும்

**இரா. செங்கொடி**

பெண்களின் பிரச்சினைகளைப் பேசுகின்ற கலையும், படைப்புகளும் குறைவாகவே உள்ளன. பெண்கள், தம் நிலையைப் பேசக்கூடிய சுயசரிதை நூல்கள் மிக அரிதாகவும் குறைவாகவுமே வெளிவந்துள்ளன. ஆணின் வரலாறே சமூகத்தின் வரலாறாகக் கொண்டாடப்படுகிறது. பெண்கள் அவர்களுடைய அனுபவங்களை வெளிப்படையாக எழுதினால், வெளிப்படுத்தினால், இந்தச் சமூகம் என்னவாகப் பார்க்கும், சமூகத்தின் எதிர்வினையை எதிர்கொள்ள முடியுமா என்கிற அச்சத்திலேயே பல பெண்களும் அவர்களுடைய அனுபவங்களை வெளிப்படுத்தத் தயங்குகின்றனர். ஓர் ஆண் எதை வேண்டுமானாலும் எழுதலாம், எழுத முடியும். எல்லா அசிங்கங்களையும் கூட எழுதிவிட முடியும். அதையும் இந்தச் சமூகம் அங்கீகரித்துப் பெரிய படைப்பாளியெனக் கொண்டாடும்.

கல்வி மற்றும் பொருளாதார நிலையில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் குடும்பம் என்கிற நிறுவன அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. காலங்காலமாக கெட்டிதட்டிப் போயிருந்த குடும்ப அமைப்பில் ஏற்பட்டுள்ள தளர்வுகள், திருமண வாழ்வில் மணமுறிவுகள் அதிகமாவதற்கான ஒரு காரணமாய் அமைகின்றது. மணமுறிவினால், தனிப் பெற்றோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஐரோப்பிய

நாடுகளில் தனிப் பெற்றோர்களின் பிரச்சினைகளைக் களைவதற்கான உரையாடல்கள் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன. **இந்தியா போன்ற இறுகிப்போன குடும்ப அமைப்பு கொண்ட நாட்டில் தனிப் பெற்றோர்களின் பிரச்சினைகள் மீதான உரையாடல்கள் இன்னமும் தொடங்கப்படவில்லை என்பது வேதனைக்குரியதாகும்**.

ஒற்றைப் பெற்றோராக ஆண் பெண் இருபாலரும் இருப்பினும் பெரும்பான்மை தனிப்பெற்றோர்களாகப் பெண்களே இருக்கின்றனர். தனிப்பெற்றோராய் இருக்கும் ஆணைவிடவும், தனித் தாய்மார்கள் சந்திக்கும் பிரச்சினைகள் கூடுதலானது. தனித் தாய்மார்கள், சமூகத்தால் ஊனமுற்றவர்களாக, பரிதாபத்திற்குரியவர்களாக, விளிம்பு நிலையில் வைத்துப் பார்க்கப் படுகின்றனர். இதில் சமூகக் கட்டமைப்பின் அழுத்தம் ஆண்களைவிடப் பெண்களுக்கே கூடுதலான சிக்கல்களை ஏற்படுத்துகிறது. இதுநாள் வரையிலும் பெண்கள் மீதான குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை குறித்தெல்லாம் பேசியும், எழுதியும், போராடியும் தீர்வு கண்டு வந்துள்ளதைப்போல, தனித் தாய்மார்களின் பிரச்சினைகள் குறித்தும் உரையாட வேண்டியது இன்றைய காலத்தின் அவசியத் தேவையாக உள்ளது. அவ்வாறான உரையாடலை இன்றைய சமூக அமைப்பின் மதிப்பீடுகளை, உள்வாங்கிக்கொண்டு பண்பாட்டுத் தளப் புரிதலிலிருந்து நடத்த வேண்டும்.

இந்தத் தலைப்பை நான் தேர்ந்தெடுத்ததற்கான இரண்டு நியாயமான காரணங்கள் இருக்கின்றன.

(1) சொல்லப்படாத காயங்களை, மனவலிகளை, மௌனங்களை புதைத்துக்கொண்டு வாழும் தனித்தாய்மார்களின் குறியீடாக நான் இருக்கின்றேன்.

(2) என் தனியொருத்தியின் பிரச்சினை மட்டுமல்ல, என்னைப் போன்ற இலட்சக்கணக்கான பெண்களின் பிரச்சினை. தனி மனுஷியாகவும், சமூக மனுஷியாகவும் இந்தப் பிரச்சினைகளை எதிர்கொண்ட அனுபவத்திலிருந்து இதற்கான தீர்வுகள் சிலவற்றை முன்வைக்கின்றேன். இந்த உரையாடல் சமூகத்தில் ஒற்றைப் பெற்றோர் குறித்த பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைத்துச் சிறிதளவேனும் அவர்களைப் புரிந்துகொள்ள உதவுமென்று நம்புகிறேன்.

## தனித்தாய்மார்கள் எதிர்கொள்ளும் பொருளாதாரச் சிக்கல்கள்:

கணவன் மனைவி என இருவருடைய வருமானத்தில் சமாளிக்க வேண்டிய குடும்பச் செலவுகளை ஒருவரே சுமக்க வேண்டிய நிலையில் அதிகப்படியான அழுத்தங்களை தனித் தாய்மார்கள் எதிர்கொள்கின்றனர்.இதனால், தனித் தாய்மார்களின் உடல்நலமும் மனநலமும் பாதிப்படைகின்றது. சீரான தூக்கம் இல்லாமை, தன்னைப் பராமரிப்பதற்கான நேரத்தை ஒதுக்க இயலாமை, மனக்குழப்பம் போன்ற இடர்ப்பாடுகளைச் சந்திக்கின்றனர்.

தனித்தாயாக இருப்பதால் அவர், பணிக்குச் செல்லும் நேரம், பணி முடிந்து வீடு திரும்பும் நேரம், விடுமுறை நாட்கள் இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டும் தன்னுடைய வருமானத்திற்குட்பட்ட கல்விக் கட்டணம் செலுத்தக் கூடிய பள்ளி எது என்பதையெல்லாம் கருத்தில் கொண்டும்தான் முடிவுகளைத் தான் ஒருவரே எடுக்க வேண்டிய நிலை உள்ளது. இதுகுறித்து யாரிடமும் பேசுவதற்கோ, ஆலோசனைகள் பெறுவதற்கோ வாய்ப்பில்லாத நிலையில் தனித்தாய் உணர்வு நிலையில் பாதிப்படைகிறாள்.

## ஆணாதிக்கச் சமூகத்தின் உடைமைப் பார்வையும் நுகர்வுப் பார்வையும்:

ஆணைக் குடும்பத் தலைவனாகக் கொண்டு, ஆணால் நிர்வகிக்கப்படும் குடும்பமே உயர்வானது, நிறைவானது, அதே சமயம் ஆணின் துணையில்லாமல் தனிப் பெற்றோராகப் பெண்களால் நிர்வகிக்கப்படும் குடும்பங்கள் ஒழுங்கில்லாதது, முழுமை பெறாதது என்பன போன்ற ஆணாதிக்க மதிப்பீடுகள் நிறைந்த சமுதாய அமைப்பில் தனித் தாய்மார்கள் இழிவாகவே பார்க்கப்படுகின்றனர். சமூகத்தின் விதிவிலக்குகளாகப் பார்க்கப்பட்டுப் புறக்கணிக்கப்படும் தனித்தாய்மார்கள் சமூகத்தால் அதீதக் கண்காணிப்புக்கு உள்ளாகின்றனர். எங்கு செல்கிறார்கள், யாருடன் பேசுகிறார்கள், எத்தனை மணிக்குத் திரும்புகிறார்கள், என்ன உடை உடுத்துகிறார்கள், அவர்கள் வீட்டிற்கு யார் யாரெல்லாம் வந்து போகிறார்கள் என ஒரு குற்றவாளியைப் போலீஸ்காரர் கண்காணிப்பதைப்

போல சுற்றியுள்ளோர்களால் கண்காணிக்கப்படுகின்றனர். இந்தக் கண்காணிப்பினால் தனித்தாய்மார்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகின்றனர். கணவனைப் பிரிந்த பெண்கள் குடும்பத்து ஆண்களிடமும், சமூகத்திலும் பணி செய்யும் இடங்களிலும், ஆண் நண்பர்களிடமும், இயல்பாகப் பேசமுடியாத அச்சத்திலேயே வாழ்கின்றனர். வாழ்வின் இயல்பான நிகழ்வுகளைக்கூட இந்தச் சமூகம் நம்மைத் தவறாக நினைத்துவிடுமோ என்ற அச்சத்தில் மிகுந்த எச்சரிக்கையோடு கையாள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தனித்தாய்மார்கள் நன்றாக உடைஉடுத்துவதும், மனம் விட்டுச் சிரிப்பதும் கூட இயல்பாகப் பார்க்கப்படாமல் அப்பெண்களின் ஒழுக்க நிலை கேள்விக்குட்படுத்தப்படுகிறது. நல்ல உடை உடுத்தினால் “எப்படி மினுக்கிக் கொண்டு திரிகிறாள் பாருங்கள்” என்றும், சிரித்துப் பேசினால்,” புருஷன் இல்லையென்னும் கவலை கொஞ்சமேனும் இருக்கிறதா பாரேன்” என்பன போன்ற வன்மம் படைத்த பேச்சுகளுக்கு அஞ்சி வாழ வேண்டிய சூழலே இன்றளவும் நிலவுகின்றது.

திருமண விழாக்களில், சுப நிகழ்வுகளில் மற்றும் நிகழ்த்தப்படும் சடங்குகளில் தனித்தாய்மார்கள், அபசகுனமாகக் கருதிப் புறக்கணிக்கப்படுகின்றனர். குடும்ப விழாக்களில் கணவரின் துணை இல்லாமல் தனியே செல்லும் பெண்களிடம், ‘அவர் ஏன் வரவில்லையா? எங்கு இருக்கிறார் எனத் தெரிந்தே கேட்கப்படும் வியாக்கியானங்களுக்கும், விசாரணைகளுக்கும் பதில் சொல்ல அஞ்சியே வீட்டை விட்டு வெளி நிகழ்வுகளுக்குச் செல்லாமலும், எந்த இடத்திலும் வெளிப்படுத்திக்கொள்ளாமலும், தன்னை மறைத்துக்கொண்டு வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

தனித்தாய்மார்கள் பணிசெய்யும் இடங்களும், இவ்வகையான விசாரணைகளுக்கு விதி விலக்கல்ல. தனித்தாய் நன்றாகப் படித்து உயர் பதவியில் இருக்கும்போதும் இதுபோன்ற விஷமத்தனமான கேள்விகள் அவளை நோக்கிக் கேட்கப்படுகின்றன. பணி யிடத்தில் அறிவுநிலையில் அவர்களை எதிர்கொள்ள இயலாதபோது, தனித்தாயின் தனிப்பட்ட வாழ்க்கையைக் கேள்விக்குட்படுத்தி அவர்களைக் காயப்படுத்துவதன் மூலம் அவர்களை வெற்றிகொண்டதாக நினைக்கும் குரூர மனம் கொண்டவர்களே அதிகமாக இருக்கின்றனர். மேடம், நீங்க தாலி போடவில்லையா? மெட்டி எங்கே? புருஷன் எங்கே? என்ற

விசாரிப்புகள் ஒரு புறமும், நேற்று அவருகூட கல்யாணத்துக்கு போயிட்டு வந்தேன். அவருகிட்ட கேட்டுத்தான் முடிவெடுக்கணும், அவர் எனக்கு புடவை வாங்கீட்டு வந்தார், என அவர்களின் கணவன்மார்களின் பெருமைகளைப் பேசுவது ஒரு புறமாகவும் இருக்கும். இப்பண்பாட்டுச் சூழல் தனித் தாய்மார்களை உணர்வு ரீதியாகக் காயப்படுத்துகிறது.

தனிப்பெற்றோர்களுக்கு வாடகை வீடு கிடைப்பது பெரும் போராட்டமாக இருக்கின்றது. இதுநாள் வரையிலும் சமூக ரீதியாகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள், திருநங்கைகள், சிறுபான்மையினர் போன்றோருக்கு வீடு தருவது மறுக்கப்படும் நிகழ்வுகள் பொதுவெளியில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இவர்களைப்போலவே தனிப் பெற்றோர்களுக்கும் வீடு மறுக்கப்படும் அவலம் பலருக்குத் தெரிந்தும் அது ஒரு சிக்கலாகவே விவாதிக்கப்படுவதில்லை. வாடகை வீடு பார்ப்பதற்குத் தனியே ஒரு பெண் செல்லும்போது அவள் ஏளனமாகப் பார்க்கப்படுகின்றாள். வீட்டு உரிமையாளரிடமிருந்து "உங்கள் வீட்டுக்காரர் எங்கே? என்ன வேலை செய்கிறார்? அவரை அழைத்து வரவில்லையா?" என்பன போன்ற கேள்விகளை எதிர்கொள்கிறாள். இந்தக் கேள்விகளுக்குத் தனித்தாய் ஒரு பொய்யான பதிலைத் தயாராக எடுத்துச் செல்வாள். எந்தமாதிரியான கேள்வி கேட்டால் அதற்கு என்னென்ன பதில்களைச் சொல்ல வேண்டும் என அவளுக்கு அதற்கு முன்பு கிடைத்த அனுபவங்களிலிருந்து சில பதில்களைத் தயார் செய்துகொண்டு செல்வாள். அந்த பதில், கணவர் வெளியூரில் இருக்கின்றார் என்றோ, வெளிநாட்டில் பணிபுரிகிறார் என்பதாகவோ இருக்கும். அப்படியென்றால் எவ்வளவு நாட்களுக்கு ஒருமுறை வீட்டுக்கு வருவார் என்பதாக வீட்டு உரிமையாளரின் கேள்விகள் இருக்கும். இவ்வளவு கேள்விகள் கேட்டபிறகும் கணவன் இல்லாமல் தனியே இருப்பதால் வீடு கொடுக்க வீட்டின் உரிமையாளர் மறுத்து விடுவார், இதுபோன்ற அர்த்தமற்ற விசாரணைகளால், அந்தத் தனித்தாய் கூனிக் குறுகி ஏதோ பெரிய தவறு இழைத்தவரைப் போல சுயமரியாதை இழந்து குற்ற உணர்ச்சியுடன் நின்றுகொண்டிருப்பார்.

இந்தப் பரந்த உலகில் திருடர்கள், போதைப்பொருள் கடத்துபவர்கள், ஏமாற்றுக்காரர்கள் இவர்களுக்கெல்லாம்கூட வாழ ஒரு வீடு எளிதாகக் கிடைத்துவிடுகிறது. **ஆண் துணை**

**இல்லாமல் ஒரு பெண் இந்த உலகில் வாழ்வதற்குத் தகுதியற்றவராகவே பார்க்கப்படுகிறார். பிறப்பின் அடிப்படையில் பார்க்கப்படும் தீண்டாமையை விடவும் இந்த நவீனத் தீண்டாமை பெண்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்.** தனித் தாய்மார்களை ஊனமுற்றவர்களைப் போலப் பார்க்கும் சமுதாயம் அவர்களையும் சக மனிதர்களாகப் பாவிக்க வேண்டும். மாறாக, கணவருடன் வாழாமல் தனித்திருக்கும் தனித் தாய்மார்களைப் பாலியல் ரீதியாகப் பயன்படுத்திக்கொள்ள நினைப்பது, அவர்களின் அநாதரவான நிலையைப் பயன்படுத்தி அவர்களை ஏமாற்ற நினைப்பது என இன்னும் எத்தனை வதைகளை இந்தச் சமூகம் அவர்களுக்கு இழைக்கும்?

ஆணின் துணையில்லாமல் தனியே வாழும் பெண்களிடம் வீட்டு வேலைக்கு வரும் பிளம்பர்கள், மெக்கானிக் போன்றோரும் செய்யும் வேலைக்கு மேலாக அதிகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு ஏமாற்றுவது, விலை குறைந்த பொருட்களை அதிக விலை சொல்லிப் பணம் பறிப்பது போன்ற ஏமாற்றுகளும் நடக்கின்றன. ஏனென்றால், பெண்ணுக்குத்தான் இதைப்பற்றியெல்லாம் ஒன்றும் தெரியாதே! இவர்களை ஏமாற்றினால் யார் கேட்கப் போகிறார்கள் என்னும் மலிவான எண்ணம்தான் இத்தகைய செயல்களுக்குக் காரணம். ஆண் என்ற உருவத்திற்குத் தரும் மரியாதையை, இந்தச் சமூகம், படித்து, நல்ல நிலையில் இருக்கும் ஒரு பெண்ணுக்குத் தருவதில்லை.

கணவனுடன் வாழும் பெண்களுக்குக் கிடைக்கும் மரியாதை கணவனால் கைவிடப்பட்டு தனித்து வாழும் பெண்களுக்குக் கிடைப்பதில்லை. விதவைத் தாய்மார்கள்மீது காட்டப்படும் இரக்கம் கூட கணவனிடமிருந்து பிரிந்து தனித்து வாழும் தாய்மார்களுக்குக் கிடைப்பதில்லை. இந்தச் சமுதாயம் காட்டும் பரிதாப உணர்ச்சியையும் கழிவிரக்கத்தையும் தனித் தாய்மார்கள் கோரவில்லை. அவர்களைச் சகமனுஷியாக மதிக்கமுடியாத மனிதர்களின் இரக்கம், அப்பெண்களை அவமரியாதை செய்வதற்கு ஒப்பாகும். அது அப்பெண்களைப் பலவீனப்படுத்தவே செய்யும்.

கொடுமைக்காரக் கணவர்களிடமிருந்து, விவாகரத்துப் பெற்ற பின்னரும், பெரும்பான்மையான பெண்கள் மறுமணம் குறித்து யோசிப்பதே இல்லை. இதற்குக் காரணம், பெண் மறுமணம் செய்வதில் சமூகம் விதித்திருக்கும் தடைகளே ஆகும். மனைவியை இழந்த, மனைவியைப் பிரிந்த ஆண்கள் எந்தத் தடைகளும் இல்லாமல் இன்னொரு வாழ்வை அமைத்துக் கொள்கின்றனர். இளம் பெண்கள் கூடச் சமூகத்திற்கு அஞ்சிக் குழந்தைகளுக்காக வாழ்கிறேன் என்று சொல்லி தியாக உணர்வுடன் மறுமணம் பற்றி யோசிக்காமல் இருக்கின்றனர். சமூகத்தில் அடித்தட்டு நிலையிலிருக்கும் பெண்கள்கூட இந்தத் தடைகளையெல்லாம் சாதாரணமாய் உடைத்து விட்டுத் திருமணம் செய்துகொண்டோ, திருமணம் செய்யாமல் சேர்ந்தோ வாழ்கின்றனர். பெரும்பாலும் நடுத்தர, மேல்தட்டு வர்க்கத்துப் பெண்களே மறுமணம் செய்வதற்குத் தயங்குகின்றனர். உடல் சார்ந்த தேவைகளை, உணர்ச்சிகளைப் புறக்கணித்துத் தன்னைத் தானே வருத்திக்கொண்டு வாழ்கின்றனர். ஆணுக்கான உடல் தேவையைத் திருமணம் செய்துகொள்ளாமலேயே அவனால் நிறைவேற்றிக்கொள்ள முடிகிறது. சமூகம் அவனுக்கு நிறைய சலுகைகளைத் தந்திருக்கிறது. ஆனால் அது பெண்ணுக்கு ஊரறிய ஏற்றுக்கொள்ளப்படும் சமூக மதிப்பீடுகளை உள்ளடக்கியது.

மறுமணம் சட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பினும், ஆணாதிக்க, மரபார்ந்த சிந்தனைகளால் கட்டமைக்கப்பட்டுள்ள சமூகத்தால் அது புறக்கணிக்கப்படுகிறது. எனவே இந்த மாற்றங்களைச் சட்டத்தினால் மட்டுமே கொண்டுவர முடியாது. கருத்தியல் தளத்தில் ஏற்படும் பண்பாட்டு மாற்றமே தீர்வாக அமையும்.

## உடல், உளச் சிக்கல்களை எதிர்கொள்ளல்

சமூகத்தின் ஆதரவும் குடும்பத்தினரின் ஒத்துழைப்பும் இல்லாமல் தனியாகப் பிள்ளைகளை வளர்த்துக் கொண்டிருப்பதால் ஏற்படும் மன அழுத்தம் தனித்தாய்மார்களின் உடலையும் சேர்த்தே பாதிக்கின்றது. பாதுகாப்பற்ற சூழலில் குழந்தைகளைத் தனியே விட அஞ்சி கங்காரு தன் குட்டிகளை எப்போதும் வயிற்றில் வைத்துச் சுமப்பதைப்போல எங்கு சென்றாலும் குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு அலையவேண்டியிருக்கிறது. இது தாயை மட்டுமல்ல குழந்தைகளையும் சோர்வடைய

வைக்கிறது. தனியொருவராகக் குழந்தைகளை வளர்ப்பதால் தனக்கு ஏதேனும் நடந்துவிட்டால் தன் குழந்தைகளை யார் பார்த்துக்கொள்வார்கள்? அவர்களின் நிலை என்னவாகும் என்பன போன்ற அச்சங்கள் ஒற்றைத் தாயை எப்போதும் மன அமைதியற்ற குழப்பமான நிலையிலேயே வைத்திருக்கின்றது.

தனித்தாயால் வளர்க்கப்படும் குழந்தைகள் வாழ்வில் வெற்றி பெற்றவர்களாகிச் சாதித்தால் அதைப் பெரிதாகக் கொண்டாடும் சமூகம், அதே குழந்தை தவறான வழிக்குச் சென்றாலோ, தாழ்ந்துபோனாலோ அதற்குத் தாய் மீது மட்டுமே குற்றம் சுமத்தும். பெண்ணால் வளர்க்கப்பட்டதால்தான் அந்தக் குழந்தை இந்நிலையை அடைந்ததாக அவமானப்படுத்தும். இதற்கெல்லாம் அஞ்சியே தம் குழந்தைகளை அதீதக் கட்டுப்பாட்டுடன் வளர்க்க நினைக்கிறார்கள்.

ஒற்றைத் தாய் தன்னால் வளர்க்கப்படும் ஆண் குழந்தைகளைவிட பெண் குழந்தைகளை எண்ணியே மிகவும் கவலை அடைகிறாள். பெண்குழந்தைகளை வளர்ப்பதில், சமூகத்தில் நிகழும் பாலியல் பிரச்சினைகளை மையமிட்டே சிந்திக்கின்றனர். பெண்குழந்தைகளை அருகிலிருக்கும் கடைகளுக்குகோ, விளையாட்டுத் திடலுக்கோ, தனியே அனுப்ப அஞ்சுவது, இசை வகுப்பு போன்ற வகுப்புகளுக்கு அழைத்துச் சென்றால், எவ்வளவு நேரமானாலும் அங்கேயே இருந்து அழைத்து வருவது, பெண் பிள்ளைகளுக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிடுமோ என்கிற அச்சத்திலேயே பாதுகாப்பு என்ற பெயரில் அனைத்து நிகழ்வுகளையும் கட்டமைப்பது போன்றவை தாயை மனச்சோர்வுக்கு உள்ளாக்குவதுடன் குழந்தையின் சுதந்திரத்தையும் தடை செய்கின்றது.

கல்லூரிப் பேராசிரியரான நான் வகுப்பறையில் மூன்று மணி நேரம் பாடம் நடத்தி விட்டு வந்தாலும், வீட்டில் வந்து ஓய்வெடுக்க முடிவதில்லை. குழந்தைகளை, என் வலி வேதனை சோர்வையெல்லாம் தாண்டி அரவணைத்துக் கொள்ளவேண்டியுள்ளது. “என் குழந்தைகளுக்கு என்னை விட்டால் யார் இருக்கின்றார்கள்? அவர்கள் செய்த தவறு என்ன? அவர்களின் பகிர்தலை நான் மட்டுமே கேட்கமுடியும். அவர்கள் இழந்த தந்தைமை உணர்வையும் சேர்த்துத் தரவேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறேன்” இது என் அனுபவத்தின் மொழி.

பாதுகாப்பு இல்லாத தனிமை உணர்வு எப்போதும் தனித் தாய்மார்களுக்கு இருக்கின்றது. காரணம், குடும்பமும் சமூகமும் அவர்களை இழிவாகக் கையாள்வதும், புறக்கணிப்பதுமே ஆகும். தனித் தாய்மார்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றால்கூட விடுப்பு எடுத்துக்கொள்ள முடியாது. அவர்களுடைய குழந்தைகள் நோயுற்றால்கூட தனித்தாய்தான் விடுப்பு எடுக்க வேண்டியுள்ளது. தன்னை கவனிப்பதற்கும், குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும் வேறொருவரும் இல்லாததால் உடல்நிலை சரி இல்லாதபோதும் பணிக்குச் செல்ல வேண்டிய நிர்பந்தத்திற்குத் தள்ளப்படுகின்றனர். நாற்பதைக் கடக்கும் ஒற்றைத்தாய்மார்கள் மெனோபாஸ் காலங்களில் கூடுதலான நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இதுபோன்ற காலங்களில், இவர்களைக் கவனித்துக்கொள்ளவும், வலிகளைப் பகிரவும் துணை இல்லாத சூழலில் தனித்து விடப்பட்டோராய் உணர்கின்றனர்.

ஒற்றைப் பெற்றோர் (Single Parent) என்று வார்த்தையின் வசதிக்காக வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் இருவரின் பணியையும் ஒருவரே செய்யும் நிலையிலிருக்கும் இவர்களை ஒற்றைப் பெற்றோர் என்று அழைப்பது எவ்வாறு பொருத்தமாகும்? இன்னும் தனிப் பெற்றோர்களைக் குறிப்பதற்கான தனித்த சொல் கூட தமிழ்ச் சமூகத்தில் உருவாக்கப்படவில்லை என்பது வேதனைக்குரியதாகும்.

## குழந்தையை எதிர்கொள்ளலும் குழந்தைகள் எதிர்கொள்ளலும்

தந்தையைப் பிரிந்து தாயுடன் மட்டுமே வளர்க்கப்படும் குழந்தைகள் தந்தை என்ற உறவு தரும் உணர்வையும் அதனால் கிடைக்கக் கூடிய அன்பையும் அரவணைப்பையும் இழக்க நேரிடுகின்றது. உறவுகளும் விலகியே இருப்பதால் சமூகத்துடனான இவர்களின் புரிந்துணர்வு, இணக்கம் குறைவாகவே இருக்கிறது. தந்தையிடம் இழந்த அரவணைப்பை வீட்டிற்கு வரும் நண்பர்கள் உறவினர்கள் என அனைவரிடமும் எதிர்பார்க்கின்றனர்.

**தன்னுடைய பொறுப்போடு சேர்த்து இன்னொருவரின் பொறுப்பையும் வாழ்நாள் முழுவதும் சுமக்கும் தனித் தாய்மார்களின் வலியை எல்லோராலும் உணர முடியாது.**

இரண்டு இயந்திரங்கள் செய்யக்கூடிய பணிகளை ஒரே இயந்திரம் செய்தால் என்ன ஆகும்? சீக்கிரமே பழுதடையும். அதைப்போலத்தான், எல்லாவற்றையும் தனி ஒருவராய் சுமக்கும் தனித் தாய்மார்கள் இளம் வயதிலேயே உடலியல் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை சந்திக்கின்றனர். எப்போதும் பதட்டத்துடனும், குழப்பத்துடனுமே வாழும் மனநிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

குழந்தைகளிடம் பள்ளியில் சேர்ந்த முதல் நாளே கேட்கப்படும் கேள்வி "உன் அப்பா என்ன செய்கிறார்" என்பதே ஆகும். கல்வி நிலையங்களில் உடன் பயிலும் சக மாணவர்களால், 'உங்க அப்பா ஏன் பேரண்ட்ஸ் மீட்டிங்க்கு வரல? 'உங்க அப்பாவ நாங்க பார்த்ததே இல்லயே' இதுபோன்ற கேள்விகளால் தந்தையுடன் இல்லாத குழந்தைகள் பெரும் மனப் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். ஒருமுறை என்னுடைய இளைய மகள் என்னிடம், "அம்மா என்னுடைய ஃப்ரண்ட்ஸ், உன்னோட அப்பா எங்கே, நான் பார்த்ததே இல்ல, இந்த முறை பேரண்ட்ஸ் மீட்டிங்க்கு கட்டாயம் உங்க அப்பாவை கூட்டீட்டு வா" என்று சொன்னதாகவும், வெளியூரில் அப்பா இருக்கிறார் என்று சொன்னபிறகும் கூட, தொடர்ந்து கேட்டுத் தொல்லை கொடுத்ததாகவும் சொல்லி வருந்தினாள். மற்றொருமுறை என்னுடைய பெரிய மகளிடம் இளைய மகள், "ஏய் அக்கா, ஸ்கூல்ல எல்லார்கிட்டயும் அப்பா எங்கன்னு கேட்டா ஒரே மாதிரி அப்பா வெளியூர்ல இருக்கார்ன்னு சொல்லு, நீ மாத்தி சொல்லிட்டா, அப்புறம் நாந்தான மாட்டிப்பேன்" என்று உபதேசம் செய்துகொண்டிருந்தாள். இவ்வாறு என் மகள் பேசும்போது, சிந்திக்கும்போது அவளுக்கு ஏழு வயது. இதுபோன்று பிறரின் கேள்விகளுக்கு தங்களுடைய வயதுக்கு மீறிய பக்குவத்துடன் பதில் சொல்லும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இக்குழந்தைகள் சிறுவயதிலேயே வயதுக்கு மீறிய பொறுப்புடன் வாழ, சிந்திக்க நிர்பந்திக்கப்படுகின்றனர். இதனால் தங்களுடைய குழந்தைப்பருவ இன்பங்களை, அனுபவங்களை மழலைத்தனத்தின் சுயாதீனத்தை இழக்க நேரிடுகிறது. ஒரு குழந்தை, குழந்தைமையை இழப்பது மிகப் பெரிய துயரம். அது எத்தகைய விளைவுகளை அவர்கள் வாழ்வில் உண்டுபண்ணும்!

பள்ளியில் நடக்கும் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பில் தந்தை தாய் என இருவரும் சேர்ந்து வரும் நண்பர்களின் பெற்றோர்களை பார்க்கும்போது, தாயோ தந்தையோ இல்லாத குழந்தைகள் தம்மை அவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து ஏக்கமடைகின்றனர். தாழ்வு மனப்பான்மைக்கு உள்ளாகின்றனர். இதுபோன்ற மன நெருக்கடியான சூழலில் வாழும் தனிப்பெற்றோரின் குழந்தைகளைப் பாதுகாப்பது, பொறுப்பாக நடந்துகொள்வது ஆசிரியர்களின் கடமையாகும். பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் தனிப்பெற்றோரின் குழந்தைகளுடன் மனம் திறந்து பேசும் சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

வேலைக்குச் செல்லும் தனித் தாய்மார்கள் வீடு திரும்பும் வரை பணியிடத்தில் பதற்றத்துடனேயே இருக்க நேரிடுகின்றது. வீட்டில் தனியே இருக்கும் பெண் குழந்தைகள் அதிகமான பாலியல் தொந்தரவுகளை எதிர்கொள்கிறார்கள். இதனால் குழந்தைகள் போதிய பாதுகாப்பின்றி வளரும் நிலை உருவாகின்றது. இதுபோன்ற வன்முறைகளால் குழந்தைகளின் கல்வியும், மன வளர்ச்சியும் பாதிக்கப்படுவதைக்காண முடிகின்றது. ஆணுடன் இருப்பதே பாதுகாப்பானது. ஆணால் மட்டுமே ஒரு குடும்பத்தைக் காப்பாற்ற முடியும் என்கிற ஆணாதிக்க மனப்போக்குடைய சமுதாயத்தில், தந்தையின் துணையில்லாமல் தனியாக வளரும் குழந்தைகளைக் கேட்பதற்கு யார் இருக்கிறார்கள் என்கிற குரூர மன நிலையியே பிறர்அவர்களைத் தொந்தரவு செய்யக் காரணமாகிறது.

ஒற்றைத் தாயால் வளர்க்கப்படும் குழந்தைகளுக்குத் தந்தை இல்லை என்கிற துயரத்தை விடவும், குடும்பத்தின் ஆணிவேராக இருக்கும் தாய் எப்போதும் மன அழுத்தத்துடன் காணப்படுவது, அழுவது, நோயுறுவது, வெளியாட்கள் தன்னுடைய தாயை இழிவாகப் பேசுவது போன்றவை குழந்தைகளின் மனநிலையை அதிகம் பாதிக்கின்றது.

## முன்வைக்கும் தீர்வுகள்

தனித்தாய்மார்கள், என்னுடைய வாழ்வு இப்படி ஆகிவிட்டதே என்று தன்னிரக்கம் கோராமல் தங்களுடைய வலியிலிருந்து விடுபட்டு வெளியே வரவேண்டும். **சுதந்திரம் விலைமதிப்பில்லாதது. வெட்டப்பட்ட சிறகுகள் முளைக்க**

**வேண்டுமெனில் எதைப்பற்றியும் கவலைப்படாமல் முன்னேறிச் செல்ல வேண்டும். இந்தச் சமூகம் என்ன சொல்லும் என்று பயந்தால், முடங்கித்தான் இருக்க நேரிடும். துணிந்து முடிவெடுத்தால் பயங்கள் தானாய் விலகும்.**

காலம் முழுக்கத் தன்னை மட்டுமே சார்ந்து வாழவேண்டிய நிலையிலிருக்கும் குழந்தைகளைத் தனித்தாய்மார்கள் புரிந்துகொண்டு அவர்களைத் தோழமையோடு அணுகவேண்டும். அவர்களுக்கும் வாழ்வின் சூழலைப் புரிய வைக்க வேண்டும். ஆதரவற்ற வாழ்வின் அழுத்தங்களிலிருந்து மீண்டுவர வாழ்வை இரசித்து வாழக் குழந்தைகளிடம் உரையாடலை நிகழ்த்துதல் அவசியம். இத்தகு மாற்றங்களுக்குச் சமூகத்தின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் தேவை.

பாதிக்கப்பட்ட தனித்தாய்மார்களை இழிவாக நடத்தாமல் கருணையுடன் மனிதத் தன்மையுடன் அவர்களைப் புரிந்து கொள்ளவது அவசியமாகிறது. பாதுகாப்பில்லாமல் வாழும் தனிப் பெற்றோரின் குழந்தைகளைப் பாதுகாக்கப் பணி செய்யும் இடங்களில் கட்டாயமாகக் குழந்தைகளுக்கான பகல் நேரப் பராமரிப்பு மையம் (Day Care Center)ஏற்படுத்தவேண்டும். அரசு இதற்கான வழிவகை செய்ய வேண்டும்.

பணிக்குச் செல்லும் தனித்தாய்மார்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்துச் செல்ல ஒருவரும் இல்லாத நிலையில் ஆட்டோ டிரைவரையோ பிறரையோ நம்பி அனுப்புவதற்கு அஞ்சுகின்றனர். பாதுகாப்புத் தொடர்பான இதுபோன்ற அச்சங்களைக் களைய அனைத்துப் பள்ளிகளும் பேருந்து வசதியைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும்.

ஓய்வில்லாமல் அனைத்துப் பணிகளையும் ஒருவரே செய்யும் தனிப் பெற்றோர்களுக்கு அரசு கூடுதல் சலுகைகளை வழங்கவேண்டும். அவர்களுக்குக் கூடுதல் விடுமுறைகளும் தரப்பட வேண்டும்.

கல்வி நிலையங்களில் தனிப் பெற்றோரையும் அவர்களுடைய குழந்தைகளையும் அணுகுவதற்குப் பயிற்சி பெற்ற உளவியல் நிபுணர்களைப் பணியமர்த்த வேண்டும். உளவியல் நிபுணர்கள் பண்பாட்டுத்தளப் புரிதலிலிருந்து அவர்களிடம் உரையாடலை நிகழ்த்த வேண்டும்.

திருமண முறிவின்போது ஒற்றைத் தாய்மார்கள் சமூகத்தில் சந்திக்கும் பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்பன போன்ற உளவியல் ஆலோசனைகளை நீதி மன்றங்கள் உருவாக்கித் தர வேண்டும்.

**நவீன வாழ்வின் கசந்த பக்கமாகச் சமூகத்தால் புறந்தள்ளப்பட்ட ஒற்றைப் பெற்றோர் மீதான மதிப்பீடுகளை இந்தச் சமூகம் மாற்றிக் கொள்ளுதல் மிகவும் அவசியம்.** பண்பாட்டுத் தளத்திலிருந்து இந்த மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை எடுப்பதும், அதை நோக்கிய திசையில் பயணிக்க வேண்டியதும் காலத்தின் கட்டாயத் தேவையாகிறது.

♦♦♦

★ கட்டுரையாளர்
முனைவர் இரா. செங்கொடி,
உதவிப் பேராசிரியர்,
சர் தியாகராயா கல்லூரி, சென்னை

# பெண்கள் நிகழ்த்திய மகளிர் தினமும் நவம்பர் புரட்சியும்.

**பா.ஜீவசுந்தரி**

மனித வாழ்வில் தாய்வழிச் சமுதாயம் நிலவிய காலம் வரை பாலினச் சமத்துவம் நிலவியது. தந்தை வழிச் சமுதாயத்துக்கான வித்துக்கள் ஆழ ஊன்றப்பட்ட காலத்திலிருந்தே பாலினப் பாகுபாடுகளும் தோன்றின. அப்போதிருந்தே சமுதாயத்தின் அனைத்துப் படிநிலைகளிலும் பெண் இரண்டாம் நிலையாக, அடிமையாக, எந்தவித முன்னுரிமையும் அற்றவளாக ஆக்கப்பட்டுப் பல நூறு ஆண்டுகளாய் உலகம் முழுவதும் கொடுமைகளை எதிர்கொண்டு வந்தாள். 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் பெண்கள் நிலையிலிருந்து அவள் சிந்திக்கத் தொடங்கினாலும் பெண் விடுதலையின் அடிப்படையை மனித குல விடுதலையின் ஓர் அங்கமாக சிந்திக்கக் கற்றது மார்க்சிய மூலவர் தம் வழிமுறைகளிலிருந்தே...

மார்க்ஸ், எங்கெல்ஸ் தொடங்கி லெனின் போன்ற சர்வதேசக் கம்யூனிச இயக்க ஆளுமைத் தலைவர்கள் பெண் விடுதலை குறித்த சிந்தனையையும் பார்வையையும் முன்வைத்தாலும் அதற்கான அடிநாதமாக வர்க்க பேதங்களற்ற சமுதாயத்தில்தான் பெண் விடுதலை என்பது முழுமையாகச் சாத்தியமாகும் என்பதையும் அவர்கள் உணர்த்தியிருக்கிறார்கள். பெண்கள் விடுதலையை எட்டுவது என்பதன் இலட்சியமாகக் கொள்ள

வேண்டியது சோஷலிசத்துக்கான போராட்டமே என்பதையும் இடதுசாரி அமைப்புக்குள் இயங்கும் பெண்கள் அறிவார்கள்.

தொழில் புரட்சிக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் வளர்ச்சி பெறத் தொடங்கின. அங்கு கோடிக்கணக்கில் தொழிலாளர்களும் உருவானார்கள். ஆண்களும் பெண்களும் இணைந்து தொழிற்சாலைகளில் இடையறாது அடிமைகளைப்போல் பணியாற்றினர். அதனூடாக முதலாளிகள் தங்கள் உழைப்பைச் சுரண்டிக் கொழுப்பதற்கு எதிராகவும் அவர்கள் போராடினார்கள். 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 8 மணி நேர வேலைத் தேவைக்கான போராட்டங்களாகவும் அவை வெடித்தன.

## உருவானது மகளிர்தின அனுசரிப்பு முறை

உலகம் முழுவதும் சுரண்டப்படும் தொழிலாளர்களை ஒன்று திரட்டி அணி சேர்ப்பதற்காகக் கார்ல் மார்க்ஸ் வழிகாட்டுதலில் இக்காலகட்டத்தில் ‘முதல் அகிலம்’ அமைக்கப்பட்டிருந்தது. புகழ் பெற்ற மே தினப் போராட்டம் நிகழ்ந்ததும் கூட அப்போதுதான். இதனைத் தொடர்ந்து பின்னர் ஃபிரெட்ரிக் எங்கெல்ஸின் உதவியுடன் ‘இரண்டாவது அகிலமும்’ உருவானது. இது, **’சோஷலிஸ்ட் அகிலம்**’ என்றும் அழைக்கப்பட்டது. இதன் வளர்ச்சிப்போக்கிலேயே சோஷலிஸ்ட் பெண்கள் இயக்கம் உருவானது.

இதையடுத்து, **கிளாரா ஜெட்கின்** வழிகாட்டுதலில் ஜெர்மனியின் ஸ்டட்கார்ட் நகரில் 1907ஆம் ஆண்டில் முதல்முறையாக ’உலக சோஷலிஸ்ட் பெண்கள் மாநாடு’ நடைபெற்றது. அதுகாறும் ’ஆண்கள் மட்டுமே பெற்றுவந்த வாக்குரிமை பெண்களுக்கும் வேண்டும்’ என்று தீர்மானம் நிறைவேற்றியது இந்த மாநாடு. அது பெண்களிடையே புதியதோர் எழுச்சி அலையையும் உண்டாக்கியது. இது உடனடியாக அமெரிக்காவிலும் எதிரொலித்தது.

1908ஆம் ஆண்டு மே 3ஆம் நாளன்று, அமெரிக்காவின் சிகாகோ நகரில் மகளிர் தினக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. நகர அளவில் அனுசரிக்கப்பட்ட முதல் ‘மகளிர் தினம்’ இதுவேயாகும். அடுத்த ஆண்டு, 1909, பிப்ரவரி 28 அன்று அமெரிக்காவின் பல இடங்களிலும் ‘வாக்குரிமைக்கான

ஆர்ப்பாட்டம்’ சிறப்பாக நடந்தேறியது. இதுவே தேசிய அளவில் முதன்முறையாகக் கடைப்பிடிக்கப்பட்ட 'மகளிர் தினம்’. உலக அளவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநாடு மகளிர் தினம் அனுசரிப்பதற்கும் வழிவகுத்தது. டென்மார்க் நாட்டின் தலைநகர் கோபன்ஹேகனில் 1910 ஆகஸ்ட் 26, 27 ஆகிய இரு நாட்கள் ’உலக சோஷலிஸ்ட் பெண்கள் மாநாடு‘ நடைபெற்றது. கிளாரா ஜெட்கின் தலைமை ஏற்ற இந்த மாநாட்டில் 17 நாடுகளைச் சேர்ந்த சுமார் 100 பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டில் விரிவான விவாதங்கள் நடத்தப்பட்டுப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த மாநாட்டில்தான் ’சமூகப் பிரச்சனைகள் குறித்த சோஷலிசக் கண்ணோட்டத்துடன், பெண்கள் பிரச்சனைகள் அனைத்துடனும் வாக்குரிமைக் கோரிக்கையையும் சேர்த்து அனைத்து நாடுகளையும் (தேசிய இனங்கள்) சேர்ந்த பெண்கள், ஆண்டில் ஏதேனும் ஒரு நாளை மகளிர் தினமாக அனுசரிக்க வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்கதொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதில் ‘கிளாரா ஜெட்கின், கேட் டங்கர் உள்ளிட்ட தோழர்கள்’ கையெழுத்திட்டிருந்தார்கள். ‘உலக மகளிர் தினம்’ அனுசரிப்பதற்கு இந்தத் தீர்மானமே உண்மையான காரணமாகும்.

இதையடுத்து சில நாடுகளில் உலக மகளிர் தினம் கடைப்பிடிப்பது வழக்கத்துக்கு வந்தது. கடுமையான எதிர்ப்புகளுக்கிடையே 1911 மார்ச் 19 அன்று ஜெர்மனி, ஆஸ்திரியா, ஸ்விட்சர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகளில் முதல்முறையாக அனுசரிக்கப்பட்டது. பின்னர் பல நாடுகளுக்கும் இந்த நடைமுறை பரவியது.

இரஷ்யாவைப் பொறுத்தவரை பெண்ணியம் என்பது தொடக்கத்தில் மேட்டுக்குடி மற்றும் நடுத்தர வர்க்கப் பெண்கள் சார்ந்ததாகவே இருந்தது. அது ஒரு பின்தங்கிய நாடு. அங்கு தொழில்புரட்சியும் மிகத் தாமதமாகவே நிகழ்ந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கொண்டு வரப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களே பெண்களுக்குக் கல்வியையும் அறிமுகப்படுத்தின. அதே நேரத்தில் அயல்நாடுகளில் கல்வி கற்றவர்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல் விழிப்புணர்வு, குறிப்பாகத் தீவிரவாத அரசியல் இரஷ்யாவில் ஜார் ஆட்சியைத்

தூக்கியெறிவதற்கென்று இரகசியமாகச் செயல்பட்டது. இவ்வாறு செயல்பட்ட நரோத்னிக்குகளில் சில புரட்சிகரப் பெண்களும் இருந்தனர். அவர்களில் வேரா ஜஸ்லிச், மரியா ஸ்பிரிடோனோவா, வேரா ஃபிங்கர், காதரீன் பிரெஸ்கோவ் ஸ்கி உள்ளிட்டோரும் அடங்குவர். ஆனால் இந்த இயக்கம் படுதோல்வியைச் சந்தித்தது.

இரஷ்யாவில் உருவாகியிருந்த புதிய தொழிலாளிகளுக்கிடையே லெனின் தலைமையில் புரட்சிகர இயக்கம் உருவானது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஜார் ஆட்சியின் கொடுங்கோன்மைச் சட்டங்களை எதிர்த்துத் தொழிலாளிகளும் போராடினர். அவர்களிடையே அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பெண் தொழிலாளர்களின் குரல்களும் கலந்து ஒலிக்கத் தொடங்கின.

குறிப்பாக, பெண் தொழிலாளர்கள் மத்தியில் வர்க்க உணர்வை ஊட்டுவதற்காகத் துணிவுடன் செயல்பட்ட **அலெக்சாந்திரா கொலந்தாய், நதியெஸ்தா குரூப்ஸ்கயா, இனெஸ்ஸா அர்மந்த், கொன்கோர்டிலா சாமோயிலோவா** போன்ற பெண் தலைவர்கள் மிக முக்கியமானவர்களாக வரலாற்றில் அறியப்பட்டவர்கள்.

## மக்களை உருக்குலைத்த உலகப்போர்

1914 ஆம் ஆண்டு வெடித்த முதல் உலகப்போரில் மக்கள் விருப்பத்துக்கு மாறாக ஜெர்மனியுடன் இரஷ்யா கூட்டணி சேர்ந்தது. இந்த உலகப்போரில் மட்டும் இரஷ்ய ராணுவத்தில் சுமார் ஒன்றரை கோடி இரஷ்ய ஆண்கள் சேர்க்கப்பட்டனர். குறிப்பாக அடித்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த தொழிலாளிகளும் ஏழைகளும் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக வலுக்கட்டாயமாக இராணுவத்தில் சேர்க்கப்பட்டனர். இதனால் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட வெற்றிடங்களில் பெண்கள் வலிந்து திணிக்கப்பட்டனர். ஆலைகளில் தொழிலாளிகளாகவும் வீட்டில் தாயாகவும் அவர்கள் இரட்டைச் சுமைகளைத் தாங்கினர்.

இந்தப் போர்ச்சூழலுக்கு நடுவே 1915 மார்ச் 2628ல் சுவிட்சர்லாந்து நாட்டில், உலக சோஷலிஸ்ட் பெண்கள் மாநாடும் நடைபெற்றது. “பாட்டாளி வர்க்கப் பெண்களே! இந்தப் போரினால் நீங்கள் அடையப் போவது எதுவும் இல்லை.

ஆனால், அனைத்தையும் நீங்கள் இழக்கப் போகிறீர்கள்! எனவே போரை எதிர்த்துப் போராடுங்கள்!" என்று அந்த மாநாட்டில் அறைகூவல் விடுக்கப்பட்டது..

முதல் உலகப்போரின் உச்சமாக இரஷ்யா - ஜெர்மனி நாடுகளுக்கு இடையில் மூன்றாண்டுகள் போர் நடைபெற்றது. இதில், இரஷ்யா தோல்வியைத் தழுவிக்கொண்டிருந்தது. 1914, 15, 16 மூன்றாண்டுகளில் மட்டும் கொல்லப்பட்ட இரஷ்யப் படைவீரர்களின் எண்ணிக்கை 17 இலட்சம்! போர்க்கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டவர்களோ 20 இலட்சம்! காணாமல் போனவர்கள் எண்ணிக்கை 10 இலட்சம்! இலட்சக்கணக்கான தாய்மார்களும், மனைவிமார்களும் இவர்களை இழந்து வேதனையில் துடித்தார்கள்; வாழ வழியின்றித் தவித்தார்கள். உலக சோஷலிஸ்ட் பெண்கள் மாநாடு விடுத்த அறைகூவலை ஏற்றுக்கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை.

ஒரு கட்டத்தில் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை பத்து இலட்சத்துக்கும் மேலாக உயர்ந்தது. எந்தவிதச் சட்டப் பாதுகாப்பும் இல்லாத நிலையில் ஒரு நாளைக்கு 12 முதல் 16 மணி நேரம் வரை ஆலைகளில் எந்திரம் போல் பணியாற்றிவிட்டு மீண்டும் வீட்டுக்கு வந்து மற்ற வேலைகளையும் பார்க்க வேண்டிய நிலை பெண்களுக்கு. கற்பனை செய்துகூட பார்க்க முடியாத கொடுமைகளை இந்தப் பெண்கள் அனுபவித்தனர்.

### பெண் சமத்துவத்துக்கான முன்னணி

இத்தருணத்தில்தான் ஆலைகளின் வேலை நேரத்தை 'எட்டு மணி நேரமாகக் குறைக்க வேண்டும்' என்ற கம்யூனிஸ்டுகளின் குரல் அவர்கள் காதுகளில் தேனாகப் பாய்ந்தது. ஏராளமான பெண்கள் செங்கொடியின் கீழ் ஒன்று திரண்டனர். **கொலந்தாய், குரூப்ஸ்கயா** போன்ற பெண் தலைவர்கள் அவர்கள் மத்தியில் தீவிரமாகப் பணியாற்றினர். தொழிலாளியாகத் தமக்கான உரிமைகளை வென்றேடுப்பதுடன் காலம் காலமாக ஆணாதிக்க நுகத்தடியில் பெண்கள் விலங்கிடப்பட்டுள்ள கொடுமை யிலிருந்தும் விடுதலை பெற வேண்டிய அவசியத்தை அவர்கள் பெண் தொழிலாளிகள் மத்தியில் போதித்தனர். இதற்காக 'ரபோட்னிஷா' (பெண் தொழிலாளி) என்ற இதழையும் அவர்கள் நடத்தினர். மேலும் 'பெண் சமத்துவத்துக்கான முன்னணி" என்ற

அமைப்பும் தொடங்கப்பட்டது. வெற்றிகரமாக இதைத் தொடங்கி நடத்தியதில் இரஷ்யாவின் முதல் மகப்பேறு பெண் மருத்துவர் போலிக்ஷேனா ஷிஸ்கினா - லாவெயின் முக்கியமானவர்.

1913 ஆம் ஆண்டு இவர்கள் தலைமையில் நடந்த மகளிர் தின எழுச்சி மேடையில் எளிய பெண் தொழிலாளி அலெக்சீவா ஆற்றிய உரையைக் கேட்டு குருப்ஸ்கயாவும் கொலந்தாயுமே மெய் மறந்தனர். ஒட்டுமொத்தப் பெண் சமுதாயத்தின் உரிமைக்குரலாக உணர்ச்சிப் பிரவாகமாக அது பெருகியது. அதே அலெக்சீவா பின்னர் மாபெரும் போல்ஷ்விக்காக உயர்ந்தார். அவரது சுயசரிதை இலட்சக்கணக்கில் விற்பனையானது. இதுபோன்ற எண்ணற்ற ஆலைத் தொழிலாளிகள் கம்யூனிஸ்ட் கட்சியால் உத்வேகம் பெற்றும் பெண் உரிமைகளுக்காகவும் போராடினர்.

முதல் உலகப் போரில் இரஷ்யா கடும் தோல்வியைச் சந்தித்தது. ஒவ்வொரு நாளும் இரஷ்ய ராணுவம் பின்னடைவைச் சந்தித்தது. இதன் கடுமையான சுமை பொதுமக்கள் மீதே சுமத்தப்பட்டது.

“வேண்டும்... வேண்டும்... எங்களுக்கு ரொட்டி வேண்டும்”

குறிப்பாகத் தொழிலாளிகள் அடிமைகளாகவே நடத்தப்பட்டனர். அதிலும் பெண் தொழிலாளிகள் அடிமையிலும் கேவலமான அடிமையாக நடத்தப்பட்டனர். நாள் முழுவதும் ஆலையில் உழைத்தாலும் ஒரு தாயால் தன் குழந்தைக்கு ஒரு துண்டு ரொட்டியைக்கூட வாங்கி வயிறார ஊட்ட முடியவில்லை. கொடுங்கோன்மை ஜார் அரசு அதைக்கூடப் பிடுங்கி போர்ச்செலவுகளுக்கு எனப் பயன்படுத்தியது.

இந்த நிலையில்தான் 1917 மார்ச் 8 விடிந்தது. அன்று மகளிர் தினம் கடைப்பிடிக்க பெண் புரட்சியாளர் பெண் சமத்துவத்துக்கான முன்னணியும் கம்யூனிஸ்ட் கட்சியில் உள்ள பெண்ணியவாதிகளும் முடிவு செய்தனர்.

அவர்களின் பிரதான முழக்கமே “எங்களுக்கு ரொட்டி வேண்டும்” என்பதாகத்தான் இருந்தது. அவர்கள் தங்களுக்காகக்கூட ரொட்டி வேண்டுமெனக் கேட்கவில்லை. தங்கள் குழந்தைகளுக்காகவும், விருப்பத்துக்கு மாறாகப் போரில் திணிக்கப்பட்டு உயிரிழந்த இராணுவ

வீரர்களின் குழந்தைகளுக்காகவும் தாய்மார்களுக்காகவும் மனைவிமார்களுக்காகவும் ரொட்டி வேண்டுமெனக் கோரினர். பெட்ரோகிராட் நகரில் மட்டும் சுமார் 40,000 பெண்கள் ரொட்டி வேண்டுமெனக் கேட்டுப் பேரணியாகத் திரண்டனர்.

## ஓடும் டிராமை நிறுத்திய ஒற்றைப் பெண்

ரொட்டிக் கடைகளில் கால் கடுக்க வரிசையில் நிற்பதைவிடவும் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவதே சரி என்று பெண்கள் சாரி சாரியாகத் திரண்டனர். அன்றோடு மட்டும் பெண்களின் எழுச்சி ஓயவில்லை. மறுநாள் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பெண்கள் அணி திரண்டனர். அதற்கு அடுத்த நாள் போக்குவரத்தை முடக்கும்படி பெண் தொழிலாளிகளுக்கு லெனின் அறைகூவல் விடுத்தார்.

பெட்ரோகிராட் நகரில் **அகாட்ஷனோவா** என்ற பெண் தனி மனுஷியாக நின்று ஓடும் டிராமை நிறுத்தினாள். முன்னே வந்து கொண்டிருந்த டிராமை மறித்துத் தண்டவாளத்தின் நடுவே நின்றாள். டிராம் நிற்காமல் முன்னேறினாலும் எதற்கும் அஞ்சாமல் நின்றாள். டிராம் அவள் மீது மோதுவது போல வேகமெடுத்து வந்தாலும் பின்னர் பணிந்து நின்றது. தொடர்ந்து மற்ற டிராம்களும் அங்குலம் கூட நகர முடியவில்லை. அன்று பெட்ரோகிராடில் போக்குவரத்து முழுவதும் வெற்றிகரமாக முடக்கப்பட்டது.

அகாட்ஷனோவா என்ற தனி மனுஷியின் ஆக்ரோஷம் நாடு முழுவதும் பரவி பெரும் புரட்சி அலையாக எழுந்து, இரஷ்யா முழுவதும் பரவி புரட்சியை நிறைவு செய்த பின்னரே ஓய்ந்தது.

“போரை நிறுத்த வேண்டும். மன்னராட்சி ஒழிய வேண்டும்“ என்று இதே காலகட்டத்தில் லெனின் தலைமையில் கம்யூனிஸ்டுகளும் சோஷலிஸ்டுகளும் போராடி வந்தனர். சோஷலிஸ்ட் பெண்களும் இப்போராட்டத்தில் தீரமுடன் பங்கெடுத்தனர்.

மார்ச் 8! இரஷ்யத் தலைநகர் பெட்ரோகிராடில் பெண்கள் வீதியில் இறங்கியதோடு, ஆண் தொழிலாளர்களையும் தங்களோடு வீதியில் அணிவகுக்கச் செய்தார்கள். பேரணியின் உக்கிரத்தால் ஈர்க்கப்பட்ட மாணவர்களும் அலுவலக

ஊழியர்களும் கூட்டம் கூட்டமாகக் கலந்து கொண்டார்கள். இடையறாத போராட்டம் எட்டு நாள்கள் தொடர்ந்தது. துப்பாக்கிச்சூடும் படுகொலைகளும் மேலும் எதிர்ப்பை உறுதிப்படுத்தின. நவம்பர் புரட்சியில் பெண்களின் பங்கு என்பது இரத்தமும் சதையும் போல. அது பெண்ணும் ஆணும் இணைந்து நிகழ்த்திய புரட்சி. அது உலகுக்கே புத்தொளி பாய்ச்சிய புரட்சி!

இராணுவமும் போராட்டக்காரர்களோடு இணைந்தது. பெண்கள் தொடங்கிய இந்த மாபெரும் புரட்சியின் எட்டாம் நாள் முடியாட்சி சரிந்தது.

ஜார் வீழ்ந்தார்! மாற்றாக இடைக்கால அரசும் அமைந்தது.

மக்களின் கோரிக்கைகளை இடைக்கால அரசாங்கத்தாலும் நிறைவேற்ற இயலவில்லை. இதே உழைக்கும் மக்கள் நவம்பர் 7 அன்று, லெனின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் மீண்டும் புரட்சி செய்தார்கள். அதுவே புகழ் பெற்ற நவம்பர் புரட்சி; உலகின் முதல் சோஷலிசப் புரட்சி. இதன் விளைவாய் எல்லோர்க்கும் எல்லாமும் என்ற நிலை உருவாக்கப்பட்டது. ஆண் பெண் சமத்துவம் நிலை நாட்டப்பட்டது.

இரஷ்யப் புரட்சியின் செய்தி உலகம் முழுவதும் பரவியது. பல நாடுகளில் தொழிலாளர்கள் ஒன்று திரண்டனர். உலகம் முழுவதும் புரட்சி பரவத் தொடங்கியது. இதற்குமுன் உலகம் கண்டிராத அளவுக்குப் புரட்சியைத் தொடங்கி வைத்தவர்கள் இரஷ்யப் பெண்களும் தாய்மார்களும்தான்.

### பெண் அமைச்சர்களின் பங்களிப்பு

அலெக்சாந்திரா கொலந்தாய், லெனின் அமைச்சரவையில் பொது நல அமைச்சராக நியமிக்கப்பட்டார். தன்னைத் திருநங்கை என பகிரங்கமாக அறிவித்துக்கொண்ட ஜியார்ஜி சிச்செரின், சோவியத் இரஷ்யாவின் வெளியுறவுத்துறை கமிஷனராக நியமிக்கப்பட்டு 12 ஆண்டுகள் அதே பதவியில் நீடித்தார். பின்னர் ஜெர்மனியுடன் நிகழ்ந்த பிரெக்ட் - லிடோவ்ஸ்க் பேச்சுவார்த்தையின்போது டிராட்ஸ்கியின் உதவியாளராகப் பங்கேற்றார்.

**இரஷ்யப் புரட்சிதான் 18 வயது நிரம்பிய அனைத்துப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம வாக்குரிமையை முதன்முறையாகக் கொண்டு வந்து சேர்த்தது.** இதற்குப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் பிற முதலாளித்துவ நாடுகளிலும் அனைவருக்கும் சம வாக்குரிமை அமலானது.

**புரட்சி முடிந்ததும் ஆட்சியில் அமர்ந்த லெனின் முதலில் கொண்டுவந்த சட்டம் போருக்கு எதிரானது. இரண்டாவது சட்டம் 'நிலங்களைப் பொதுவுடைமை' ஆக்கி, அதில் 'ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை' வழங்கியது.**

பேறு காலத்துக்கு முன்னும் பின்னும் ஊதியத்துடன் கூடிய விடுப்பு, பணியிடங்களில் தனி ஓய்வறைகள், கூடுதல் நேரப்பணி, இரவுப் பணி ஆகியவற்றிலிருந்து விலக்கு போன்ற உலகிலேயே முதல் முறையாக என்று சொல்லத்தக்க பல உரிமைகள் பெண்களுக்கு வழங்கப்பட்டன.

மேலும், பெண் சமுதாயம் இதுவரை கண்டிராத பல உரிமைகளை நவம்பர் புரட்சி பெண்களுக்கு வழங்கியது.

திருமணச் சட்டங்கள் மதத்தின் பிடியில் இருந்து விலக்கி வைக்கப்பட்டன.

பிறக்கும் அனைத்துக் குழந்தைகளையும் 18 வயது வரை பராமரித்துக் கல்வியும், சுகாதாரமும் வழங்குவது அரசின் கடமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எந்த ஒரு பெண்ணும் தன் விருப்பத்தின் பேரில் குழந்தை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. கருக்கலைப்பு பெண்ணின் விருப்பமாகவும் அறிவிக்கப்பட்டது. திருமணம் செய்து கொள்வது, சேர்ந்து வாழ்வது, ஓரினப் பாலுறவு போன்றவை அவரவர் விருப்பம் சார்ந்தவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சோவியத் இராணுவத்தில் அதாவது செஞ்சேனையில் சுமார் 80,000 பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இது மொத்தப் படையில் 2 சதவீதம் ஆகும்; **ஒரு நாட்டு இராணுவத்தின் கிளைப் பிரிவுகளில்கூட பெண்களைச் சேர்க்கத் தயங்கிய அக் காலத்தில் மொத்தச் செம்படை இராணுவத்தில் ஐம்பதில் ஒருவர் பெண் ஆவார்.**

நூறாண்டுகளின் முன் இவை எல்லாம் நிகழ்த்தப்பட்டன என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இத்தனை அதிசயங்களை நவம்பர் புரட்சி நிகழ்த்திக் காட்டினாலும் லெனின் மனநிறைவு கொள்ளவில்லை. இத்தனை சாதனைகளுக்குப் பிறகும் பெண்கள் தங்கள் உரிமைகளுக்காக சோஷலிச அமைப்பிலும் தொடர்ந்து போராட வேண்டியிருக்கும் என்றே கூறினார்.

மேலும், “அனைத்துச் சட்டங்களுக்குப் பிறகும் பெண் என்பவள் சமையல், குழந்தை வளர்ப்பு போன்ற வீட்டு வேலைகளுக்கு அடிமையாகவே நீடிக்கிறாள். இந்த வேலைகள் அவளின் குரல்வளையை அழுத்தி நெரிக்கின்றன. இதற்கு எதிராக அதிகாரம் கொண்ட பாட்டாளி வர்க்கம் எங்கே எப்போது போராட்டம் தொடங்குகிறதோ, அங்கே அப்போது உண்மையான பெண் விடுதலையும் உண்மையான கம்யூனிசமும் தொடங்குகிறது. இந்த வீட்டு வேலைகள் அனைத்தும் பெரிய அளவிலான சோஷலிசப் பொருளாதாரமாக மாற்றம் அடையும்போதுதான் உண்மையான பெண் விடுதலையும் உண்மையான கம்யூனிசமும் தொடங்குகிறது” என்றும் உறுதிபடக் கூறினார். அன்றைக்கு உருவான சோவியத் யூனியனில் மட்டுமல்ல; உலகெங்கிலும் இன்றளவும் அவை அத்தனையும் உண்மைதானே!

இரஷ்யப் புரட்சியின் செய்தி உலகம் முழுவதும் பரவியது. பல நாடுகளில் உள்ள தொழிலாளர்கள் அணி திரண்டனர். உலகம் முழுவதும் புரட்சி பரவத் தொடங்கியது. இதற்குமுன் கண்டிராத அளவு இப் புரட்சியைத் தொடங்கி வைத்தவர்கள் இரஷ்யப் பெண்களும் தாய்மார்களும்தான். இதையொட்டி, **இனெஸ்ஸா, கிளாரா ஜெட்கின், அலெக்சாந்திரா கொலந்தாய், நதியெஸ்தா குரூப்ஸ்காயா** மேலும் பலரின் முயற்சியால் ‘உலகக் கம்யூனிஸ்ட் பெண்கள் அகிலம்’ அமைக்கப்பட்டது. இதன் இரண்டாவது மாநாடு 1921ஆம் ஆண்டு ஜூன் மாதம், 915 தேதிகளில் மாஸ்கோவில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட பல்கேரிய நாட்டுத் தோழர்கள் ஒரு ஆலோசனையை முன்வைத்தார்கள். “1917, மார்ச் 8 அன்று பெட்ரோகிராட் நகரில் பெண் தொழிலாளர்கள் முன்னின்று நடத்திய பேரணிதான் இரஷ்யப் புரட்சியை நோக்கி இட்டுச்

சென்றது. இரஷ்யப் பெண் தோழர்கள் மகளிர் தினத்தை மார்ச் 8 அன்றுதான் கொண்டாடி வருகிறார்கள். எனவே அனைத்து நாடுகளிலும் அதே மார்ச் 8 தேதியில் ஒவ்வோர் ஆண்டும் மகளிர் தினத்தைக் கொண்டாட வேண்டும்'' என்றும் அவர்கள் கூறினார்கள். இந்த ஆலோசனையை ஆரவாரத்துடன் வரவேற்றவர்கள் அவ்வாறே முடிவு செய்தனர். இந்த முடிவே மார்ச் 8 அன்று மகளிர் தினம் நிரந்தரமாக உலகம் முழுவதும் கொண்டாடப்படக் காரணமாய் அமைந்தது.

இந்த முயற்சியே இந்தியாவிலும் இடதுசாரிப் பெண்கள் இயக்கம் வேர் கொண்டு நிலைத்து நிற்பதற்கான முயற்சிகளில் இறங்கியது.

♦♦♦

★ கட்டுரையாளர்
முற்போக்கு எழுத்தாளர்

# பெரியாரின் பெண்கள் நாங்கள்

**சிவகாமி**

உலக வரலாற்றில் பல்வேறு அடிமைத்தனங்களை மக்கள் எதிர்கொண்டு வந்திருக்கிறார்கள். அவற்றில் பலவற்றை எதிர்த்துப் போராடி வெற்றியும் கண்டிருக்கிறார்கள். பண்ணை அடிமை முறை, அரசடிமை முறை, நிறத்தின் பேரிலான அடிமை முறை என்று பல அடிமைத்தனங்கள் இருந்தாலும் இவற்றில் மிக மோசமானதும், மிக நீண்ட வரலாறு கொண்டதும் இன்று வரை தீராததும், தீர்க்க வேண்டும் என்ற முழுமையான ஏற்பும் கூட பெறாத அடிமைத்தனம் என்றால் அது பெண்ணடிமைத்தனம் தான்.

இந்த பெண்ணடிமை காற்றைப் போல எங்கெங்கிலும் நீக்கமற நிறைந்து கிடக்கிறது. ஆனாலும் சமத்துவத்தை விரும்பும் பலரும் பெண்ணடிமையை எதிர்த்துக் குரல் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களில் பெண்களே தங்களுக்கென்று ஒரு வழிகாட்டியை, தலைவரை, தோழரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமெனில் அப்படிப்பட்ட ஒருவர் தந்தை பெரியாராகத்தான் இருக்க முடியும்.

தமிழக வரலாற்றில் ஈடு இணையற்ற போராளியான தந்தை பெரியார் உலகப் பெண்களின் இனத்திற்கான தலைவராவார்.

ஒட்டுமொத்த மனித சமூகமே ஆண். பெண் என்ற இரு பெரும் பிரிவாகப் பிரிந்து கிடக்கிறது. ஆண் சமூகத்திற்கானவன், பெண் வீட்டிற்கானவள் என்ற கருத்து பெண் அடிமைத்தனத்தின் உயிர் இழையாகக் கிடக்கிறது. இந்தியச் சமூகத்தில் மக்களைப் பிளவுபடுத்தி, அடிமைப்படுத்தி வைத்திருக்கிற சாதி அமைப்பு உயிர் வாழ்வதும் இந்த பெண்ணடிமைத்தனத்தினால்தான்.

சாதியை எதிர்த்துப் போராடிச் சமத்துவத்தை நிலை நாட்ட விரும்பும் ஆண்களில் பெரும்பாலானோர் கூட ஏனோ பெண்ணடிமைத்தனத்தை மட்டும் கண்டும் காணாமல் கடந்து விடவே விரும்புகிறார்கள்.

இங்கே சாதியமைப்பும், பெண்ணடிமைத்தனமும் ஒரே கூறுகளைக் கொண்டிருக்கின்றன. சாதி தீட்டு, புனிதம் என்ற கருத்தாக்கங்களை வைத்து இயங்குகிறது. பெண்ணிடமும் தீட்டும் புனிதமும் பார்க்கப்படுகிறது. சாதி ஊர், சேரி என்ற பெயரில் மக்கள் வாழ்விடங்களைப் பிரித்து ஒதுக்கி வைத்திருக்கிறது. சேரி வாழ்விடங்கள் அழுக்காக, குறுகலாக, சிறியதாக இருக்கும்படி பார்த்துக் கொள்வதைப் போல்தான் குடும்பத்தின் சமையல் அறையும் இருக்கிறது. மூச்சுமுட்டும் இடங்களாக இருக்கும் சேரிகளும் சமையலறைகளும் இங்கே ஒன்றுதான்.

குடும்பம், சமையலறை என்ற இந்தப் பெருந்தடையைத் தாண்டி, சமூகத்திற்குப் பெண்கள் வரத் தொடங்கும் போதுதான் பொதுத் தளத்தில் பெண்கள் சந்திக்கும் சிக்கல்களையும் அவர்கள் புரிந்து கொண்டாக வேண்டி இருக்கிறது.

எந்தப் பக்கம் திரும்பினாலும் குடும்பம் பெண்ணுக்குப் பெருஞ்சுவராக இருக்கிறது. இந்த நேரத்தில் புரட்சியாளர் அம்பேத்கரின் கூற்றை நாம் நினைவு கூரலாம்.'' நீங்கள் எந்தத் திசையில் திரும்பினாலும் சாதி என்கிற அரக்கன் உங்கள் பாதையை வழிமறிப்பான். அந்த அரக்கனை அழிக்காமல் இங்கே சமூக மாற்றம், பொருளாதார மாற்றம் சாத்தியமில்லை'' என்று கூறியதைப் போலக் குடும்பம் என்கிற சிக்கலில் இருந்து பெண் தன்னை விடுவித்துக் கொண்டால் ஒழிய, சமூக மாற்றத்திற்கான ஒரு நபராக அவர் உருவாக முடியாது.

ஓர் ஆண் சாதிய அமைப்புக்கு எதிராகப் போராட வந்தால் சாதி என்ற ஒன்றிற்கு எதிராகப் போராடுவார். ஒரு

பெண் சாதி அமைப்பிற்கு எதிராகப் போராட வந்தால் அவர் சாதிக்கு எதிராகவும் ஆணாதிக்கத்திற்கு எதிராகவும் என இரண்டு எதிரிகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. **வர்க்க விடுதலைக்காக ஓர் ஆண் போராட வந்தால், ஆணுக்கு முதலாளி என்ற ஓர் எதிரிதான். ஆனால் பெண்ணுக்கு முதலாளியும் ஆணாதிக்கவாதியும் என எதிரிகளாக இரண்டு பேர் நிற்கிறார்கள்.**

இந்த நிலை ஆதிக்க சக்திகளுக்கு எதிராகப் போராடும் பெண்களுக்கு மட்டும்தான் என்று சொல்லிவிட முடியாது. பெண்கள் உலவுகிற இடமெங்கும் ஆணுக்கு இருப்பதை விடக் கூடுதலாக ஆணாதிக்கம் என்கிற சிக்கலையும் சந்திக்க வேண்டி இருக்கிறது.

இதை விடப் பெருங்கொடுமை ஒரு பெண் தன் உடலுடன் நடமாடுவதே பெருஞ்சிக்கல் என்கிற அளவிற்கு பெண்ணுக்கான உடல் மீதான வன்முறையைச் சாதாரணமானதாக மாற்றி வைத்திருக்கிற இந்த மண்ணில்தான் 2000 ஆண்டுகாலச் சனாதனம் என்கின்ற பெருமை வேறு.

இருக்கின்ற கொடுமைகள் போதாதென்று ஒரு பெண் தன் குடும்பத்தில் நடக்கும் எல்லா எதிர்மறை நிகழ்வுகளுக்கும் தானே காரணம் என்கிற குற்ற உணர்ச்சியும் உடையவராக இருக்கிறார். ஒருவிபத்து நடந்தால், இறப்பு நடந்தால், பொருளாதார இழப்பு நடந்தால்,யாருக்கேனும் உடல்நலக் குறைவு இருந்தால் கூட தான் சரியாக சாமி கும்பிடவில்லையோ, விரதம், இருக்கவில்லையோ என்பது போன்ற பல்வேறு குற்ற உணர்ச்சிகளைச் சுமந்து கொண்டிருக்கிறார். இதுவும் ஒரு கற்பிக்கப்பட்ட, பழக்கப்படுத்தப்பட்ட குற்ற உணர்வுதான். இதிலிருந்தும் ஒரு பெண் வெளியில்வரவேண்டும் என்பதும் ஒரு முக்கியமான தேவை.

இங்கே சாதிகளும், மதங்களும் பெண்களைத் தங்களுக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றன. குடும்ப அமைப்பில் பெண்களின் மிக முக்கிய வேலை சாதிப்பழக்க வழக்கங்களைத் தனது குழந்தைகளுக்குக் கற்பிப்பது, காப்பது மற்றும் மதச்சடங்குகளைச் செய்யும் தனது வீட்டு ஆண்களுக்குத் தேவையான அனைத்துப் பங்களிப்பையும் தருவது.

ஆனால் மதங்கள் பெண்ணுக்கு எந்தச் சலுகையும் வழங்கவில்லை. சொர்க்கம் கூடப் பெண்ணுக்கு அனுமதிக்கப்படவில்லை.

“பெண்ணுக்குத் திருமணமே உபநயனம். கணவனுக்குப் பணிவிடை செய்தலே குருகுலவாசம்” என்கிறது மனுசாஸ்திரம். மேற்குறிப்பிட்ட தடைகளெல்லாம் தாண்ட முடியாத பெருந்தடைகளா என்று சிந்திப்போமானால் ஆம், பெருந்தடைகள் தான்,

ஆனால் தாண்ட முடியாத தடைகள் அல்ல என்று பதில் கூறலாம். சனாதனம் என்கிற பெயரில் பெண்ணுக்கு விதிக்கப்பட்ட சமூகக் கட்டுப்பாடுகளில் பலவும் சட்டங்கள் மூலமாகவும், சமூக மாற்றங்கள் மூலமாகவும் தளர்த்தப்பட்டிருக்கின்றன. ஆனாலும் அவை முழுமையாக அழிக்கப்படவில்லை. தொடர்ந்து செயல்படுவதன் மூலமே முழுமையான பெண் விடுதலை என்பது சாத்தியமாகும்.

உடன்கட்டை ஏறுதல் என்றொரு கொடிய வன்முறையைச் சட்டம் போட்டு தடுக்க முடிந்தது. ஆனால் அது எப்போது வேண்டுமானாலும் மீண்டும் உயிர் பெறும் சூழல்தான் இன்றைக்கும் நிலவுகிறது. பெண்களை மீண்டும் சிதையில் தள்ள தனது நெருப்பு நாக்குகளோடு காத்திருக்கிறது சனாதன மதம். 1987இல் இராஜஸ்தான் மாநிலத்தில் உடன்கட்டை ஏற்றப்பட்ட ரூப் கன்வர் என்கின்ற 24 வயது பெண் மூலம் அது நிரூபிக்கப்பட்டது. இது உடன்கட்டை ஏற்றுதலுக்கு மட்டுமல்ல, இது போன்ற அனைத்து வகையான பெண்ணடிமைத்தனங்களையும் மீண்டும் உயிர் பெற வைக்கும் முயற்சிகளும் இங்கே நடந்து கொண்டே இருக்கின்றன.

மதங்கள் மிகவும் வன்மமானவை. பெண் அடிமைத்தனத்தைப் பெண்களையே வைத்து நிறைவேற்றிக் கொள்ளும் அளவிற்குச் சூழ்ச்சிகள் செய்து வைத்திருக்கிறது. இன்றைக்கு மகளிர் தினங்கள் கூட சக்தி தினங்களாகவும், அழகிப் போட்டிகள், கோலப் போட்டிகள் நடக்கும் தினங்களாகவும் மாற்றப்படுகின்றன.

இங்கே பெண்களை மதி மயக்குகிற வார்த்தைப் பயன்பாடுகளும், கலாச்சாரம், பண்பாடு என்னும் பூச்சும் அதற்குக் காரணமாக இருக்கக்கூடும்.

ஆனால் இதே மண்ணில்தான் சாவித்திரிபாய் பூலே தன் மீது சாணியை வீசி எறிந்த போதும், கற்கள் வீசப்பட்டபோதும் அவற்றை எதிர்கொண்டு தாண்டிச் சென்று, கற்பித்து இந்தியாவின் முதல் பெண் ஆசிரியரானார்.

அன்னை நாகம்மையாரும் தோழர் கண்ணம்மாளும் கடுமையான அரசியல் போராட்டங்களில் பங்கெடுத்து, சிறை சென்றார்கள். ஆயிரக்கணக்கான பெண்களை இயக்கப் பெண்களாக மாற்றிக்காட்டினார்கள்.

அன்னை மணியம்மையார் உலகத்தில் மிகப்பெரிய நாத்திக இயக்கமான திராவிடர் கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நடத்தி காட்டினார்.

இந்தியாவின் பிரதமராக இருந்த அன்னை என்று அழைக்கப்பட்ட இந்திரா காந்தி அம்மையாரைக் கிணற்றடியில் அமர்ந்து சந்தித்தார் சங்கராச்சாரி. இந்திரா காந்தி அம்மையார் கணவனை இழந்தவர் என்பதால் அப்படி ஒரு சனாதன முறை பின்பற்றப்பட்டது.

இப்படிப்பட்ட இழிவு நடந்த காலகட்டங்களில்தான் தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான பெண்கள் சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, மொழிப் போராட்டம் என்ற முழங்கிக் கொண்டு தெருக்களிலே சுயமரியாதைப் பெண்களாகப் போராட்ட நடை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

உலகப் பெண்களின் விடுதலைப் போராட்டங்களைக் கவனித்தால் கூட முதலாம் அலை பெண்ணியம், இரண்டாம் அலை பெண்ணியம் என்றும், மிதவாதப் பெண்ணியம் தீவிரவாதப் பெண்ணியம் என்றும் வகைப்படுத்தப்படுகிற பெண்ணியப் போராட்டங்களில் மிக மிகப் பின்னாட்களில் பேசப்பட்ட கருத்துக்கள் எல்லாம் தந்தை பெரியாரால் 1935 க்குள் பேசப்பட்டு விட்டன. அவர் பேசியதோடு இல்லாமல் அவரைப் பின்பற்றிச் சுயமரியாதை பெண்கள் நடந்தனர். சமூக ஏற்பு, சட்ட ஏற்பு குறித்தெல்லாம் கவலைப்படாமல் பெண் விடுதலைக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, கடைப்பிடிக்கத் தொடங்கினர்.

அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கும் தமிழ்நாட்டிலுள்ள பெண்கள் கல்வி, வேலைவாய்ப்பில் அனைவரும் பாராட்டத்தக்க நிலையை அடைந்திருக்கின்றனர்.

ஆனாலும் நமது பெண்கள் இந்தியாவின் பிற மாநிலப் பெண்களின் நிலையோடு தங்களை ஒப்புமைப்படுத்திக் கொண்டு பார்க்காமல், உலகில் உள்ள முன்னேறிய நாடுகளில் உள்ள பெண்களின் நிலையோடு தங்களை ஒப்புமைப்படுத்திக் கொண்டு அவர்களைப் போல் முன்னேற வேண்டும்.

அதற்காக அவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறை, கையில் எடுக்க வேண்டிய ஆயுதம் எது என்றால் அது பகுத்தறிவும், சுயமரியாதையும்தான்.

பெண்கள் சாதியை விட்டும், மதத்தை விட்டும் வெளியேற வேண்டும். சாதியும், மதங்களும் பெண்களை இழிவுபடுத்துவதைப் பெண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இத்தனை ஆண்டு காலமாக சாதியையும், மதங்களையும் பின்பற்றி வந்த பெண்களுக்கு சாதி அமைப்பும், மதங்களும் செய்தது என்ன? ஆணவப் படுகொலைகளும் இழிவும்தான்.

எனவே பெண்கள் தங்கள் நிலையை உணர்ந்து சாதியில் இருந்தும் மதங்களிலிருந்தும் முழுமையாக வெளிவர வேண்டும். தமிழ்நாட்டில் இயங்குகிற அனைத்து வகையான சாதி, மதங்களுக்கு எதிரான இயக்கங்களும், குழுக்களும் இதனைத் தங்கள் வேலைத்திட்டமாக எடுத்துக் கொண்டு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.

இதன் ஒரு பகுதியாகத்தான் **தமிழ்நாடு அறிவியல் மன்றம்** மூலமாக இது போன்ற முயற்சிகளைத் தொடங்கி செய்து வருகிறோம். பெரியாரின் கொள்கையினை முன்னெடுத்துச் செல்லும் அமைப்பான **திராவிடர் விடுதலைக் கழகத்தின் முன்னணி அமைப்பாகத் தமிழ்நாடு அறிவியல் மன்றம்** தொடங்கப்பட்டது.

மக்கள் மத்தியில் அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த அமைப்பு செயல்திட்டங்களைத் தீட்டிக் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல்வேறு செயல்களைச் செய்து வருகிறது. இந்தப் பயணத்தில் நான் உணர்ந்தவற்றையும், பெற்ற பட்டறிவையும்தான் இந்தக் கட்டுரை வாயிலாகப் பகிர்ந்துள்ளேன்.

சிறிய குழுக்களில் விவாதங்கள் எனத் தொடங்கி கருத்தரங்குகள், மண்டல மாநாடுகள் வரை திராவிடர் விடுதலைக் கழகத்தோடு இணைந்து நடத்தி இருக்கிறோம்.

இதில் கடந்த 2025 மே 24ஆம் தேதி மேட்டூரில் நடந்த நாத்திகர் விழாவைப் பெண்களே முன்னின்று நடத்தியதும் பேரணி, மாநாட்டு நிகழ்ச்சிகள், அலகு குத்துதல் போன்ற மூடநம்பிக்கைகளுக்கு எதிரான நிகழ்வுகளைப் பெண்களே திட்டமிட்டு நடத்தியதும் ஒரு முக்கியமான நகர்வு ஆகும்.

இன்றைக்குத் தமிழ்நாட்டின் படித்த, வேலைக்குச் செல்கிற, சொந்தக்காலில் நிற்கிற ,சுய சிந்தனை உள்ள பெண்கள் அனைவரும் தந்தை பெரியாருக்கு நன்றிக் கடன் பட்டவர்களாக இருக்கின்றோம் இன்றைக்கும் இந்தியாவின் மற்ற மாநிலங்களில் எல்லாம் பெண்கள் வாழ்வதற்கான சூழ்நிலை அச்சம் ஊட்டுபவையாக இருக்கும்போது, தமிழ்நாடு பெண்களுக்கான நாடாகத் திகழ்கிறது என்றால், அதற்கு தந்தை பெரியாரும் அவரது கருஞ்சட்டைத் தொண்டர்களும்தான் காரணம். எனவே தமிழ்நாட்டுப் பெண்கள் தந்தை பெரியாரின் வழியில் சாதியை முற்றிலுமாய் அழித்தொழிக்க, மதங்களின் பிடியிலிருந்து விடுதலை பெற்று, சுயமரியாதை வாழ்வு வாழ ஓரணியில் திரள்வோம் என உறுதி ஏற்க வேண்டும்.

♦♦♦

★ கட்டுரையாளர்
தமிழகத் தலைவர்
தமிழ்நாடு அறிவியல் மன்றம்.

# உங்கள் மனஓசை

கண.குறிஞ்சி Gana. Kurinji அவர்களால் கொண்டு வரப்படும் காலாண்டு இதழ் புதுமலர், சிறந்த கட்டுரைகள் மற்றும் நேர்காணல்களுடன் வெளிவருகிறது.

அக்டோபர் - டிசம்பர் 2025 இதழில் தொல்லியல் அறிஞர் **அமர்நாத் ராமகிருஷ்ணன்** அவர்களின் சிறப்பானதொரு நேர்காணல் இடம்பெற்றுள்ளது. **கட்டாயம் வாசிக்க வேண்டிய நேர்காணல்.**

தமிழின் வாசிப்பு மற்றும் அறிவுச் சூழலின் 'செலக்டிவ் அம்னிஷியா' சில நல்ல புத்தகங்களை கவனிக்காமலேயே கடந்து விடும். அவ்வகையான புத்தகங்களில் ஒன்றுதான் **தேவிகாபுரம் சிவா Devikapuram Siva** எழுதிய **'மேக்நாட் சாகா ஒரு புரட்சிகர அறிவியலாளரின் கதை'** என்ற நூல். **பாரதி புத்தகாலயம்** (2015) பதிப்பித்த இந்த நூலை தமிழ்நாடு அறிவியல் இயக்கம் போன்ற அமைப்புகளே பாராமுகத்தோடு கடந்து விட்டன என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் 'சர் சி.வி.ராமன் விளைவிலிருந்து' அவர்களால் இன்னும் விடுபட முடியவில்லை! இந்த அருமையான நூல் குறித்த கட்டுரை ஒன்றை **கமலாலயன்** இந்தப் புதுமலர் இதழில் எழுதியிருக்கிறார்.

புதுமலரைப் பெற்று வாசிக்க 94433 07681

**அழகிய பெரியவன்,**
பேரணாம்பட்டு, வேலூர்.

‘புதுமலர்’ என்னும் சொல்லாட்சி ஓர் இதழின் பெயர் என்று எளிதில் கடந்து சென்றுவிட முடியாத ஓர் ஆக்கம். அது புதிய புதிய சிந்தனைகளின் அடுக்கு; புது உலகு நோக்கி நடைபோடச் செய்யும் உணர்வுப் பிழம்புகளின் ஒளி; தாய்மொழி புத்தொளி கொண்டு வளமுடன் வாழ முனைப்புக் காட்டும் விழிமலர்.

அமர்நாத் ராமகிருஷ்ணன் அவர்களதுபேட்டி தமிழனின் அறிவு சார் வரலாற்றை அகிலத்துக்குக் கொண்டு செல்லும் கீழடிக்குப் பெருமையும் ஆய்வாளரின் மாண்பையும் புலப்படுத்தும் ஓர் அரும்பொருள். தொடர்ந்து எண்மரின் சிந்தனைக் கொடைகள்

சமகாலத்தில் பூக்கும் மலர்களில் புகழொடு தோன்றும் மலர் 'புதுமலரே' என்பதை மெய்ப்பிக்கும் எழுத்துக்களாக மிளிர்கின்றன.

விரிவஞ்சி ஒவ்வொரு எழுத்துக்களையும் விவரிக்கவில்லை. இக்கால **இதழியல் வரலாற்றில் அறியதோர் இடம்பிடிக்கும் அருங்கலச் செப்பு 'புதுமலர்'**

**பேரா. கி. நாகராஜன்,**
பணிநிறைவுப் பேராசிரியர்

புதுமலர் இதழ் கைக்கு வந்தது.. வழக்கம் போல் சிறப்பாக வந்திருக்கிறது.

அமர்நாத் ராமகிருஷ்ணனின் பேட்டி முக்கியமான ஆவணம். கீழடியின்காலம் கி.மு. 800ஐ கி.மு. 300ஆக்க மறுக்கும் அவருடைய துணிச்சலான நிலைப்பாடு மெச்சத்தக்கது. தேவிகாபுரம் சிவாவின் நூலை உடனே வாங்கிப் படிக்க கமலாலயனின் கட்டுரை தூண்டி விட்டது. 1952ல் சுயேட்சையாகப் போட்டியிட்டு வென்று மக்களவையில் தாய்மொழிக்கல்விக்குக் குரல் எழுப்பி நேருவின் ஆதிக்கமனத்தை அம்பலப்படுத்திய அறிவியல் ஆளுமை மேகநாட் சாகாவை எல்லோரும் பரவலாக அறிந்து கொள்வது அவசியம்.

தமுஎகச பற்றிய **ஆதவன் தீட்சண்யா**வின் கட்டுரையும் சுவையான பல வரலாற்றுத் தகவல்களைத் தொகுத்தளிக்கிறது. இதுவும் ஓர் அரிய ஆவணம்.

கணியன் பாலன் வரலாற்று ஆய்வின் மீது என்றுமே நான் ஈர்ப்புக் கொண்டவன். சமீபத்திய ஈரோட்டுப் புத்தகத் திருவிழாவில் அவருடைய உரையைக் கேட்கும் வாய்ப்புக் கிட்டியது. இரண்டு நூல்களையும் வாங்கியிருக்கிறேன். இன்னும் படிக்க எடுக்கவில்லை.

**பேரா. முரளி**யின் சாக்ரடீஸ் கட்டுரையில் அவர் கூறியிருக்கும் செய்திகள் ஒரு சிலவற்றை அவருடைய காணொளியிலும் கேட்ட நினைவிருக்கிறது. நல்ல கட்டுரை.

மீதமுள்ளவற்றைப் பிறகுதான் படிக்க வேண்டும். சாம்ஸ்கி கட்டுரை தேவைக்கத்திகமாய் நீண்டு விட்டது அச்சில் ஏறிய பிறகு புலப்படுகிறது. எஸ்ரா பவுண்ட், எலியட்டுக்குச் செய்ததைப் போல் நீங்களும் ஈவிரக்கமின்றிக் கத்தரியைப் பயன்படுத்தியிருக்கலாம்.

**அகிலன் எத்திராஜ்**
மும்பை.

# நிகழ்வுகள்




தமிழ்ப் பண்பாட்டின் அடையாளங்களில் ஒன்றான ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், தமிழ் அறிவு வளாகமாகப் பரிணமித்து வருகிறது. **‘தமிழ் அறிவு வளாகம்’** என்னும் பெருங்கனவை நனவாக்க நமக்கு **40 கோடி ரூபாய் தேவை.** இதன் கட்டுமானப் பணிகள், உள்கட்டமைப்பு உட்பட ஒரு சதுர அடிக்கு ரூ. 5000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ‘கட்டுமானத்தில் தங்களது பங்களிப்பு ஒரு சதுர அடி என்கிற அளவில்கூட இருக்கலாம். எத்தனை சதுர அடிகள் என்பது உங்கள் விருப்பம்.’

‘நீங்கள் அளிக்கும் நன்கொடைக்கு 80G வரிவிலக்கு உண்டு.’ நன்கொடை பெறப்பட்ட இரண்டு வேலை நாட்களில் நன்றிக் கடிதம், ரசீது ஆகியவை உங்களுக்குக் கிடைக்கப்பெறும். 2026 மே இறுதியில், Form 10BE பெற்றுக்கொள்ளலாம்.

நன்கொடை அளித்த விவரங்களைக் கட்டாயம் எங்களுக்குப் பகிரவும்: rmrl@rmrl.in | 080153 12686 (WhatsApp)

# தமிழ் அறிவு வளாகம்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் **இயக்குனர் முனைவர் சுந்தர் கணேசன்** அவர்களிடம் புது மலர் இதழைக் கையளித்த தருணம்.

தமிழ் அறிவு வளாகம் கட்டட நிதி ரூபாய் 5,000 புதுமலர் இதழ் சார்பாக இதழாசிரியர் கண.குறிஞ்சி அவர்களால் பின்னர் வழங்கப்பட்டது.



## மாபெரும் கவிஞர் ஈரோடு தமிழன்பன் அவர்களுக்குப் புதுமலர் இதழின் அஞ்சலி



### ஈரோடு தமிழன்பன் அவர்களுக்கு மக்கள் சார்பாக அஞ்சலிக் கூட்டம்.

ஈரோட்டுக் கவிஞர் தமிழன்பன் அவர்களுக்கு ஈரோட்டு மக்கள் சார்பாக நினைவேந்தல் நிகழ்வு 30 /11/ 2025 அன்று பெரியார் மன்றத்தில் நடைபெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட அமைப்புகள் பங்கேற்ற இந்நிகழ்வை **மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் ஸ்டாலின் குணசேகரன்** அவர்கள் ஒருங்கிணைத்தார். இந்நிகழ்வில் **வீட்டுவசதித்துறை அமைச்சர் சு.முத்துசாமி** அவர்கள் கவிஞரின் படத்தைத் திறந்து வைத்து இரங்கலுரை ஆற்றினார். **ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவரும் கவிஞருமாகிய ச.கந்தசாமி, மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர் ஸ்டாலின் குணசேகரன், ஈரோடு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், புதுமலர் இதழாசிரியர் கண.குறிஞ்சி** உள்ளிட்ட பலரும் நினைவேந்தல் உரை நிகழ்த்தினர். மேலும் பல்வேறு அரசியல் கட்சிகள், சனநாயக இயக்கங்கள், இலக்கிய அமைப்புகள் போன்றவற்றின் முன்னோடிச் செயல்பாட்டார்களும், ஈரோட்டு மக்களும் .நிகழ்வில் பங்கேற்றுக் கவிஞருக்கு அஞ்சலி செலுத்தினர்.



**அமைச்சர்**
**சு.முத்துசாமி**
அவர்கள்
ஈரோடு
தமிழன்பன்
அவர்களின்
படத்தைத்
திறந்து
வைத்தல்.




**ஈரோடு ஆட்சியர்**
**மற்றும் கவிஞர்**
**ச. கந்தசாமி**
அவர்கள்
அஞ்சலி உரை




மக்கள்
சிந்தனைப்
பேரவைத்
தலைவர்
**ஸ்டாலின்**
**குணசேகரன்**
அவர்கள்
நினைவேந்தல்
உரை.

# சூழல் பாதுகாப்பிற்கான ஒரு முன்னெடுப்பு

சூழல் அறிவோம் அமைப்பின் சார்பில், 21.12.2025 அன்று "ஈரோடும் சூழல் பாதுகாப்பும்" எனும் கருத்தரங்கு ஈரோட்டில் நடைபெற்றது. அதில் சூழல் பாதுகாப்பு அன்றும் இன்றும் எனும் பொருண்மையில் **சூழலியல் எழுத்தாளர் நக்கீரன்** சிறப்புரையாற்றினார். எலத்தூர் குளம் நாகமலை குன்று (ஈரோட்டின் முதல் மற்றும் இரண்டாவது பல்லுயிர்ப் பாரம்பரியத் தலங்கள் ஆனது எப்படி?) என்பது குறித்து சூழல் அறிவோம் ஒருங்கிணைப்பாளர் **தீபக் வெங்கடாசலம்** கருத்துரை ஆற்றினார். இந்நிகழ்வில் **கலைக்கோவன்** எழுதிய 'சிறகுகள் விரிந்த கனவு" எனும் நூலும், **ஈரோடு சர்மிளா** எழுதிய "வானி பவானியை மீட்ட வரலாறு" எனும் நூலும், **ஷாஜான் மற்றும் சுப்பிரமணிய சிவா** ஆகியோர் எழுதிய "பண்ணவாடி காவிரியின் சூழல் அறிவோம்" எனும் நூலும் சூழல் அறிவோம் பதிப்பகத்தின் சார்பாக வெளியிடப்பட்டன. நிகழ்வில் **திரைக்கலைஞர் ரோகிணி, மாவட்ட ஆட்சியர் கந்தசாமி, மக்கள் சிந்தனைப் பேரவை ஸ்டாலின் குணசேகரன், செங்குந்தர் கல்விக் கழகம் சிவானந்தன், பவானி ஆறு பாதுகாப்புக் கூட்டமைப்பு மருத்துவர் சத்திய சுந்தரி / சுந்தரம் மற்றும் ஆசிரியர் பரமசிவன்** உள்ளிட்ட பலரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.




பண்ணவாடி நூல் வெளியீடு

திரைக் கலைஞர் ரோகிணி, ஸ்டாலின் குணசேகரன், வேளாளர் கல்வி நிறுவனங்கள் செயலாளர் சந்திரசேகர், அக்னிஸ்டீல்ஸ் தங்கவேலு, தீபக் வெங்கடாசலம் மற்றும் பலர்.




சூழல் அறிவோம் ஒருங்கிணைப்பாளர்
**தீபக் வெங்கடாசலம்** உரை.




சூழலியல் எழுத்தாளர் **நக்கீரன்** உரை

# சிறுகதை நூல் வெளியீட்டு விழா

எழுத்தாளர் மற்றும் கதைசொல்லி **சரிதா ஜோ**வின் **"ஆகிருதி"** பெரியவர்களுக்கான சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா ஈரோட்டில் 21/12/2025 ல் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு **ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி** அவர்கள் தலைமை தாங்கினார். **திரைக் கலைஞர் ரோகிணி** அவர்கள் நூலை வெளியிட **மக்கள் சிந்தனை பேரவைத் தலைவர் ஸ்டாலின் குணசேகரன்** அவர்கள் பெற்றுக் கொண்டார்.

எழுத்தாளர் பூங்கொடி பாலமுருகன் மற்றும் ஆசிரியர் வே. சங்கர் ஆகியோர் கருத்துரையாற்றினர். நிறைவாக ஆகிருதி நூலின் ஆசிரியர் எழுத்தாளர் மற்றும் கதைசொல்லி சரிதா ஜோ அவர்கள் ஏற்புரை வழங்க விழா இனிதே நிறைவுற்றது.

